


நான் பெற்ற செல்வம்

8 அணா

நான் பெற்ற செல்வம்

எழுதியவர்
மேரி எல்லன் சேஸ்

மொழிபெயர்ப்பு :
பா. லோகநாதன்

PRINTED AND PUBLISHED BY
KUBERA PRINTERS LTD.
"KUBERA BUILDINGS"
21, SUNKURAMA CHETTY STREET
MADRAS-1 (INDIA)

முன்னுரை

அமெரிக்காவிலுள்ள மெயின் ராஜ்யத்தின் கடலோர வாழ்க்கையைப் பற்றியும் அதன் இயல்புகளைப்பற்றியும் முதல் மகாயுத்தத்துக்கு முன்பு இருபத்தைந்து, முப்பது ஆண்டுகளாக நான் அறிந்ததை இங்கு எழுதுகிறேன். இத்தகைய ரம்மியமான இடங்களில் வாழப்பிறந்ததே நான் பெற்ற செல்வம்; அதனை நினைத்து நான் எழுதுகிறேன். அதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துவதும் இப்புத்தகத்தின் நோக்கமாகும். நியூ இங்கிலாந்திலுள்ள மக்கள், அவர்கள் இடங்கள், அவர்கள் தொழும் மதம், செய்யும் வேலைகள், அவர்களுடைய கல்வி முதலியவற்றைப்பற்றிய உண்மை வரலாறுகளை வாசகர்கள் விரும்பிப் படிப்பார்கள் என்று நம்புகிறேன்.

நான் நியூ இங்கிலாந்து வாழ்க்கையைப்பற்றி எழுதுகிறேன். முக்கியமாக, மெயின் ராஜ்யத்தில் வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதை எழுதுகிறேன். எனினும் இதை ஒரு சிறு பகுதியைப் பற்றிய வரலாறு என்று கூறமுடியாது. நியூ இங்கிலாந்திலிருந்துதான் பல மேற்கத்திய ராஜ்யங்கள் உண்டாக்கப்பட்டன. மேற்கத்திய ராஜ்யங்களிலுள்ளவர்களில் எத்தனைபேர் நியூ இங்கிலாந்தில் வளர்ந்தவர்கள், எத்தனைபேர் இன்னும் மெயின் ராஜ்யத்தின் விஷயத்தில் பாத்தியதை கொண்டாடுகிறார்கள் என்பதை ஒருவர் மேற்கத்திய ராஜ்யங்களில் வசித்தால் உணர முடியும்.

ஆகவே, நான் விவரிப்பது சுதேச அமெரிக்கக் காட்சியே என்று சொல்லலாம். நீதியைப் போதிக்க நான் எழுதவில்லை. ஒரு காட்சியை வர்ணிப்பதே என் நோக்கம். ஒரு குறிப்பிட்ட காலம் எவ்வாறு தனித்தன்மை வாய்ந்ததாய் இருந்தது

என்பதைச் சொல்ல விரும்புவேனேயன்றி, அக்காலத்தைக் காட்டி இக்காலத்துக் குறைபாடுகளை மறைக்க மாட்டேன்; இக்காலத்துக்கு அக்காலமே முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்றும் சொல்லமாட்டேன். அசாதாரணமான சந்தர்ப்பங்களைப் பற்றியோ அசாதாரணமான சூழ்நிலையைப் பற்றியோ நான் விவரிக்கவில்லை. பொதுவாக அமெரிக்கர்கள் அக்காலத்தில் வாழ்ந்ததைப்போலத்தான் நானும் வளர்ந்தேன். எனது குடும்பம், அதன் சுகதுக்கங்கள், எனது கல்வி, என் மதவழிபாடுகள் போன்ற விஷயங்களில் அக்காலத்திலிருந்த மற்ற அமெரிக்கர்களைப் போலத்தான் நானும் வாழ்ந்தேன் என்பது என் நம்பிக்கை.

ஸ்மித் கல்லூரி,
நார்த்தாம்டன்,
மாஸச்சூஸெட்ஸ்.
ஜனவரி, 1932.

முதற் பாகம்

சமூகநிலையும் வசதிகளும்

அத்தியாயம் 1

சூழ்நிலையும் பிதிரார்ஜிதமும்

பாறைகள் நிரம்பிய மெயின் கடற்கரை கிட்டெரி முனை என்னுமிடத்திலிருந்து ஈஸ்ட் போர்ட் என்னும் இடம் வரை இரண்டாயிரத்தைந்நூறு மைல்கள் வியாபித்திருக்கிறது. எனினும் பிரெஞ்சுக்காரன் குடாக்கடலுக்கும், பெனேப்ஸ் காட் குடாக்கடலுக்கும் மத்தியிலிருக்கும் பிரதேசத்தைப் போல் அழகான இடம் அக் கடற்கரையில் வேறெங்கும் இல்லை.

அப் பிரதேசத்தில் சிறிய பள்ளத்தாக்குகள் தான் இருக்கின்றன. ஆகையால் நதிகளுக்குப் பதிலாகச் சிற்ருேடைகளைத் தான் அங்கு காணமுடியும். ஓடைகளின் அகன்ற முகத்துவாரங்களுக்கு தினம் இருமுறை கடல் நீர்ப்பெருக்கு ஏறும்; அதனுல் அவற்றின் பாறைகள் மறைந்து, அவற்றின் கொந்தளிப்பும் அடங்கும். கடலுக்குள்ளே நீட்டிக் கொண்டிருக்கும் பாறைகளுக்கிடையில் சிறு சிறு தண்ணீர்த் தேக்கங்களைக் காணலாம். மேற்கிலும் கிழக்கிலுமுள்ள காஸ்கோ, பெனேப்ஸ்காட், பிரஞ்சுக்காரன், பஸமக்கோடி, பண்டி முதலிய குடாக்கடல்களுக்கு ஒப்பிட்டால் அத் தண்ணீர்ப் பரப்புகள் சிறிய குடாக்கள் தான். எனினும், நீலக்குன்று குடாக்கடல் என்பது ஒன்று இருக்கிறது; அதன் பக்கத்திலுள்ள மற்றக் குடாக்கடல்களை விட அது ஆழத்திலும், அகலத்திலும் சிறிதென்ருலும் அக் குடாக்கடலுக்கு வரும் மாலுமிகள் அதை ஒரு சிறிய குடாவாக மதிப்பதில்லை. அக் குடாக்கடலின் தலைப்புறம் உயர்ந்திருக்கும் பெரிய குன்றைநோக்கிய வண்ணம் மாலுமிகள் கப்பல்களை யோட்டி வருவார்கள். அவர்களுக்கு அது அன்றும் இன்றும் ஓர் அடை

பாளமாக, எல்லைக்கல்லாக விளங்குகிறது. பல ஊர்களுக்குச் சென்று அதிகப் பிரயாணம் செய்தவர்களுக்கு நேப்பிள்ஸ் குடாக்கடலுக் கப்புறமுள்ள வெஸுவியஸ் மலையை அக் குன்று ஞாபகப்படுத்தும்.

மெயின் கடற்கரைப் பிரதேசத்தில் முதன் முதலாகக் குடியேறியவர்கள் ஆழமில்லாத இக் குடாக்கடலையும் பாறைகள் நிரம்பிய குன்றுகளையும் கண்டு மயங்கி விடவில்லை. வர்ஜீனியாவிலிருந்தும், தாய்நாட்டிலிருந்தும் வந்த மன்னர் கட்சியினராகட்டும், அல்லது மாஸச்சுஸெட்ஸ் குடாக்கடலிலிருந்து வந்த பியூரிட்டன் சபையினராகட்டும் அவர்கள் அங்கே தங்கிவிடவில்லை. கென்னெபெக், பெனேப்ஸ்காட் குடாக்கடல்கள், பால்மத் என்னுமிடத்திலிருந்த நல்ல துறைமுகம் (இப்போது அவ்விடம் போர்ட்லந்து என அழைக்கப்படுகிறது) போன்ற இடங்களே அவர்களை வசீகரித்தன.

ஏராளமாக மீன் பிடிக்க வேண்டுமானால் சமுத்திரம் ஆழமாக இருக்குமிடத்துக்குச் சமீபத்திலிருந்தாக வேண்டும். கப்பல் செய்து கடலில் ஓட்டுவதற்கு வசதியுள்ள இடமாயிருக்க வேண்டுமானால் அதற்கு வேண்டிய பொருள்கள் அருகில் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். நீலக் குன்றுக் குடாக்கடலைச் சுற்றியுள்ள அடக்கமான பிரதேசத்தில் முதன் முதலாக மரவீடுகள் தோன்றுவதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே, பசமக்கோடி, பிரெஞ்சுக்காரன் குடாக்கடல்களைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் சேசு சபைக் குருமார் மிஷன்கள் எழுந்து பின் வீழ்ந்திருந்தன. பிரெஞ்சு வியாபார ஸ்தலங்களும் தோன்றி நாளடைவில் க்ஷீணமடைந்திருந்தன; பிரஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள், இங்கிலீஷ்காரர்கள் ஆகியோரின் போட்டிகள் ஒன்றன் பின் ஒன்ருக வளர்ந்ததையும் பெனேப்ஸ்காட் அறிந்திருந்தது; கப்பல்களைக் கட்டும் சத்தத்தின் எதிரொலி காஸ்கோவில் கேட்டுக்கொண்டிருந்தது.

அதே போல, நீலக்குன்றுக் குடாக்கடலுக்கு உட்புறமாக இருக்கும் நிலம் மற்ற நிலங்களுடன் அதிக சம்பந்தமில்லாமலிருந்ததால், அங்கே முதன் முதலாகக் குடியேறியவர்களின் குணாதிசயமும் ஒரு தனிப் பண்பு வாய்ந்ததாய் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் பணக்காரர்கள் அல்ல, ஆனால் சமர்த்தர்கள். முன்னேற்றமடைய வேண்டுமென்ற ஆசை அளவுக்கு மீறியில்லை யெனினும், அவர்கள் ஊக்கமுடையவர்கள். அவர்கள் குடியேறிய பிரதேசத்தை முதலில் அவர்கள் ஈஸ்ட் பாஸ்ட்டன் என அழைத்தார்கள். மாஸச்சூஸெட்ஸ் குடாக்கடல் அதிகாரிகளிடமிருந்து சலுகைகளைப் பெறலாம் என்று அவர்கள் நம்பியிருந்திருக்கலாம். ஆனால் சீக்கிரமே அப்பெயர் நீலக்குன்று என மாற்றப்பட்டது.

தங்கள் குடும்பங்களுக்குத் தேவையான அளவுக்கு உணவையும், உடையையும் தயாரித்துக் கொள்ளுவதற்கே அவர்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டார்கள். அவர்களுடைய மில்களை ஒட்ட அவர்கள் வெகு சீக்கிரமே கம்பள நெசவுக்குரிய ரோமங்களை ஒழுங்குபடுத்தவும், அவற்றின் அழுக்கைப் போக்கவும் நீரோடைகளை உபயோகப்படுத்திக் கொண்டனர். மரங்களை வெட்டிப் பலகைகளாக அறுக்கவும், அவர்கள் மில்களை ஏற்படுத்தியிருந்தனர்; பஞ்சாலைகளும் அவர்களுக்கு இருந்தன.

அவர்களுடைய பொருள்களைப் பெரிய துறைமுகங்களிலிருந்து வரும் கப்பல்கள் மூலம் அவர்கள் ஏற்றுமதி செய்து வந்தார்கள். ஆனால் அக்கப்பல்களின் எடுகூலி அதிகமாயிருந்ததால், இந்நூற்றுண்டு பிறக்கு முன்பே அவர்கள் கப்பல் கட்டும் துறைகளை நிர்மாணித்துக் கப்பல்களைக் கட்டி வந்தார்கள். அவையும் பெரிய கப்பல்களே. அவர்களுடைய புத்திரர்களே அக் கப்பல்களைத் தங்கள் ஊரிலிருந்து மற்ற ஊர்களுக்கு ஓட்டிச் சென்றார்கள்.

அதற்கு முந்திய நூற்ருண்டில் அவர்களுடைய முன்ேனோர்கள் மாஸச்சூஸெட்ஸில் வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் அவர்களுடைய முன்னேற்றத்தைத் தடுக்கக் கூடிய சமூக பிரச்னையோ, மத சம்பந்தமான பிரச்னையோ கிடையாது. அதேபோல நீலக்குன்றில் குடியேறியவர்களுக்கும் தங்கள் உழைப்பினுல் தீர்க்க முடியாத இடையூறு ஏதும் இல்லை. அவர்களுடைய முன்னேற்றத்துக்கு இடையூருயிருக்கக் கூடிய முந்திய நாகரிகம் எதுவும் அங்கு இல்லை. அவர்களுடைய புத்திரர்கள் விசால நோக்கமும் ஆழ்ந்த கருத்துக்களும் கொண்டவர்களாக வளர்ந்தார்கள்.

பாஸ்டன், நியூயார்க் முதலிய நகரங்களுக்குக் கடற்கரையோரமாய்க் கப்பல்களில் அடிக்கடி சென்று வந்ததால் அவர்களுக்கு முன்னேற்றத்தில் ஊக்கம் அதிகமாயிற்று. அவர்கள் பெரிய கப்பல்களில் உத்தியோகஸ்தர்களாக அமர்ந்து, நாளடைவில் அவற்றின் தலைவர்களானுர்கள். தூரதேசங்களுக்குப் பிரயாணம் செய்ததின் பயனுக அவர்களுடைய அறிவு விசாலமானதுமல்லாமல், அவர்களுள் சிறந்தவர்களுக்குச் செல்வமும் பெருகியது. முதலில் குடியேறினவர்களின் பேரன்மார்கள் காலத்தில் நீலக்குன்றில் செங்கலாலும் மரத்தாலும் கட்டிய பெரிய வீடுகள் தோன்றலாயின; லண்டன், ஹாங்காங், கல்கத்தா, மொஸாம்பிக் என்ற பெயர்களெல்லாம் அவர்களுக்கு எளிதாக வந்தன. போன நூற்ருண்டின் பிற்பகுதியில் படிப்பில் பற்றுதலுள்ள அவர்களுடைய இளைஞர்கள் கல்லூரிகளுக்குச் சென்ருர்கள். யேல், ஹார்வார்ட், பிரின்ஸ்டன் முதலிய கலாசாலைகளுக்குச் சென்று பட்டம் பெற்ருர்கள். எளிய வாழ்க்கையில் ஆரம்பித்த குடும்பங்கள் உழைப்பினுலும், கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளுவதாலும் சில தலைமுறைகளில் எவ்வாறு முன்னேற்றமடையும் என்பதற்குச் சான்ருகப் பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் நீலக்குன்றில் வாழ்ந்தவர்கள் அபிவிருத்தி யடைந்திருந்தார்கள்.

அத்தியாயம் 2

என் தாயாரின் குடும்பம்

(1)

என் தாயாரின் தந்தையுடைய பாட்டனர் பெஞ்சமின் லார்ட் என்பவர். கடற்கரை யோரங்களிலுள்ள கிராமங் களில் மதப் பிரசாரம் செய்து அவர் காலங் கழித்து வந்தார்.

அவருடைய நன்னெறியும், தளராத ஊக்கமும், சுறு சுறுப்பும் இடையருத பக்தியும் சேர்ந்து உருவெடுத்தாற் போல அவருக்கு 1806-ம் ஆண்டில் ஒரு மகன் பிறந்தார். அவருடைய் பெயர் ஹெர்ட் லார்ட். நீலக்குன்றில் அதே ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட பாப்டிஸ்ட் மதாலயத்திற்கு ஹேர்ட் லார்ட் பிற்காலத்தில் இன்றியமையாத ஒருவரானர். அவர் அதன் தூணுக விளங்கினர்.

ஹெர்ட் லார்ட் தம் இளமையில் பள்ளிக்கூட ஆசிரியராக மெயின் ராஜ்யத்தின் கிழக்குக் கடற்கரை யோரங்களிலுள்ள கிராமங்களில் வாழ்ந்துவந்தார். அவர் அக்காலத்து வழக்கப் படி, ஒவ்வொரு வீடாக ஒரு வாரத்துக்கு ஒரு வீட்டில் சாப் பிட்டுத் தங்கிவந்தார்; அதுவும் அவருக்குரிய சம்பளத்தோடு சேர்ந்ததாகும். அவர் தமது குடும்பத்தை விட்டு அதிக காலம் பிரிந்திருக்க வேண்டியதிருந்ததால், தமது குடும்பச் செல வுக்காக, அவர் மாலையில் வகுப்பு நடத்தி மாணவர்களுக்கு சங்கீதமும் கற்றுக்கொடுத்துவந்தார். மேலும் அவருக்குத் தச்சு வேலையும் செருப்புத் தைக்கவும் தெரியும். எங்கு சென் ருலும் தமது கைத்தொழிலுக்கு அவசியமான ஆயுதங்களை யும் தோலையும் அவர் எடுத்துச் செல்வார்.

அவர் தமது அறுபதாவது வயதில் உபாத்தியாயர் தொழிலிலிருந்து விலகினர். தமது கடைசி இருபது ஆண்டு களைப் புத்தகங்கள் வாசிப்பதிலும், தமது சிறு பண்ணையைக் கவனிப்பதிலும், வீடு கட்டுவதிலும் கழித்தார்.

(2)

அக்காலத்து மாதர்களைப் போலத்தான், எனது தாயா

ரின் குடும்பத்துப் பெண்களும். அவர்களைப்பற்றி அவர்களுடைய சந்ததியார் இன்று சொல்லிப் பெருமையடையுமாறு அவர்கள் எதையும் சாதித்து விடவில்லை. பொதுவாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிராமங்களில் வாழ்ந்து வந்த பெண்கள் குடும்பத்துக்குப் புறம்பான வாழ்க்கை எதையும் அறிந்தவர்கள் அல்ல. அதற்கு விதிவிலக்காக, கப்பலோட்டிகளுக்கு வாழ்க்கைப்பட்ட பெண்டிர்களைச் சொல்லலாம். அநேகமாக, அவர்களுக்குப் பல குழந்தைகள் பிறப்பதற்கு முன்பு அப்பெண்களை அவர்களுடைய கணவர்கள் தங்கள் கப்பல்களில் வெளியூர்களுக்குஅழைத்துச் செல்வதுண்டு. வீட்டுத் தொல்லைகளினின்றும் சில காலம் விடுதலை பெற்றுக் கப்பல்களில் சுற்றும் பாக்கியம் பெற்ற பெண்கள் ஒரு சிலர்தான்.

என் தகப்பனாரின் குடும்பத்தினர் கப்பலோட்டிகள். ஆனால் என் தாயாருடைய குடும்பத்தினர் கப்பலோட்டிகள் அல்ல. எனது பாட்டி, அதாவது தாயாரின் அன்னை, முப்பது வயதுக்குப் பிறகு அதிக காலம் ஜீவித்திருக்கவில்லை. கடற்கரைப் பிரதேசங்களில் அக்காலத்தில் கூடிய நோய்க்குப் பலியான பலரில் எனது பாட்டியும் ஒருத்தி. "எனது பாட்டனாருடைய சுகத்துக்காக என் பாட்டி அரும்பாடு பட்டு வந்தாள். அவருடைய சுகத்தைப்பற்றித்தான் அவளுடைய எண்ணமெல்லாம். அவருடைய இஷ்டத்துக்கு மாறாக அவள் பேசியதையோ நடந்ததையோ நான் அறியேன்" என்று எனது அன்னை எழுதிவைத்திருக்கிறாள்.

என் தாயார் வளர்ந்த காலம் முற்போக்கானது. 1866ம் ஆண்டில் அவள் பிறந்தாள். உள்நாட்டுடன் சம்பந்தமில்லாத, ஒதுங்கிய பிரதேசத்தில் வசித்துவந்தாலும், பெண்களுக்காகக் கல்லூரிகளையும் கழகங்களையும் ஸ்தாபித்திருந்ததைப்பற்றி அவள் கேள்விப்பட்டிருந்தாள். பெண்கள் பள்ளிக்கூடங்களில் ஆசிரியைகளாக வேலைசெய்வதைக் கண்டாள். கல்யாணமாகாத பெண்களுடைய வாழ்க்கை குலைந்து

போகும் என்று அவள் காலத்துப் பெரியவர்கள் பேசினாலும், அவ்வாறு ஆவதில்லை என்பதை அவள் அறிந்தாள்.

என் தாயார் பன்னிரண்டாவது வயதில் நீலக்குன்றுப் பாடசாலையில் சேர்ந்து, பதினாறுவது வயதில் பட்டம் பெற்று ஜில்லா பாடசாலையில் உபாத்தியாயினியாக அமர்ந்தாள். ஒரு வருஷம் முடிவதற்குள் அவள் லத்தீன் இலக்கணத்தையும் ஸிஸரோ எழுதிய நூல்களையும் கற்றுக்கொடுக்க நீலக்குன்றுப் பாடசாலையிலேயே ஆசிரியையாக அமர்த்தப்பட்டாள். விறகு வெட்டிக்கொண்டே போடாயின் கல்லூரியைப் பற்றிக் கனவு காண்பவர்களான இளைஞர்களுக்குக் கற்றுக்கொடுக்கப் போவதை நினைத்து அவள் பெருமிதமடைந்தாள். ஆசிரியையாக இருக்கும் போதும், அவள் ஊக்கத்துடன் வாசித்து, லத்தீன் இலக்கியங்களை நன்கு கற்றறிந்தாள். அவளுக்கு ஞாபக சக்தி அதிகமாகையால், இன்னும் அவள் தன் பேரக்குழந்தைகளுக்குப் பாடங்கள் கற்றுக்கொடுக்க முடியும்.

அத்தியாயம் 3

என் தந்தையின் குடும்பம்

(1)

என் தந்தை கப்பலோட்டிகளின் குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய பாட்டனாரும், பாட்டனாரின் சகோதரர்களும் நீலக்குன்றிலிருந்து வெளிநாடுகளுக்குக் கப்பலோட்டிச் சென்றவர்கள். நியூ இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களுக்கு அது அபூர்வமானது என்று சொல்லுவதற்கில்லையெனினும் அதைப்பற்றி அக் குடும்பம் பெருமைப்பட இட முண்டு.

ஏனெனில் அத்தகைய மனிதர்கள் தங்களுடைய சொந்த கிராமங்களுக்குள் உலகம் அடங்கி விட்டது என்று

நினைக்கவில்லை. அக்கிரமங்கள் உலகத்தின் ஒரு பகுதியே என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அவர்கள் தங்கள் வயோதிக காலத்தை அமைதியாகவும் முன்னையினும் நல்ல செல்வ நிலையிலும் கழித்தார்கள். விஷயங்களை விசால நோக்கத்தோடு கவனித்து மதிப்பிடும் சக்தியை அவர்கள் பெற்றிருந்தார்கள். அதனால் அவர்களுக்குப் பின் தோன்றிய சந்ததியினரும் பலன் அடைந்தார்கள்.

என் பாட்டனார் பெயர் காப்டன் மெலட்டியா கிம்பால் சேஸ். தம் குடும்பத்திலுள்ள மற்றவர்களைப்போல அவரும் சிறுவராக இருக்கும்போதே கப்பலோட்டும் தொழிலில் புகுந்தார். இருபத்து நான்காவது வயதிலேயே அவர் பேரும் புகழும் பெற்றுக் கப்பலின் "முதல் உத்தியோகஸ்தரா"னார். 1847-ம் ஆண்டில் பட்டினியால் வாடும் ஐரிஷ்காரர்களுக்குத் தானியம் எடுத்துச் சென்ற கப்பலில் அவர் ஒரு துணைஉத்தியோகஸ்தராகப் பிரயாணம் செய்தார். அப்பிரயாணத்தில் ஏற்பட்ட துன்பங்கள் பின் வரும் அத்தியாயங்களில் விவரிக்கப்படும். அவர் அச் சங்கடங்களினால் மனச்சோர்வு அடையவில்லை. கப்பலில் பிரயாணம் செய்வதை அவர் நிறுத்தவில்லை. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர் ஒரு கப்பலுக்குச் சொந்தக்காரரும் அதை ஓட்டும் தலைவருமானார்.

எனது பாட்டியின் பெயர் எலீஸா ஆன் வெஸ்காட். அக்காலத்துப் பெண்களுடைய வாழ்க்கையைப் போல அவளுடைய வாழ்க்கை மெயின் ராஜ்யத்து கிராமத்து அற்ப விவகாரங்களால் கட்டுப்பட்டிருக்கவில்லை. பிறக்கும்போதே அதிருஷ்டத்துடன் பிறந்தவர்கள் எனப்படுபவர்களில் அவளும் ஒருத்தி. அத்துடன், என்னுடைய மற்ற மூதாதையரை விட, அவள் பெயர்பெற்ற குடும்பத்தில் உதித்தவள். அவளுடைய முன்னோர்கள் வெற்றி வீரர் வில்லியம் என்ற இங்கிலாந்து மன்னருடன் சேர்ந்து போராடி, வெகுமதியாக

நிலங்களேயும், பட்டங்களேயும பெற்றவர்கள். இது பற்றி யாருக்குச் சந்தேகமிருந்தாலும் அவளுக்குச் சந்தேகமில்லே.

அவள் பிறந்து வளர்ந்த இடம் சாதாரணமானது தான். அவள் தந்தைக்கு இருந்த பண்ணே ஒரு வறண்ட நிலம்; மேம்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த பண்ணே என்று அதை ஒருவரும் சொல்லமாட்டார்கள். என் பாட்டியோடு பிறந்த வர்கள் பத்துப்பேர்; எல்லாருக்கும் மூத்தவள் என் பாட்டியே. வேலே செய்வதற்கு மட்டுமின்றி ஒரு பெரிய குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளுவதற்கும் ஜனசஞ்சாரத்துக்கு ஐந்து மைல்களுக்கப்பால் உள்ள உதவாக்கரைப் பண்ணேயைப் பார்த்துக் கொள்ளுவதற்கும் எவ்வளவு உழைப்பு வேண்டும் என்பது அவளுக்கு அநுபவம். தேகத்துக்கும் மனதிற்கும் அவசியமானவை மட்டுமே அவளுக்குக் கிடைத்து வந்தன.

எனினும், சிறு பிராயத்திலேயே அவளுக்கு அதிகமாக உற்சாகமும் ஊக்கமும் உண்டு. ஆகவே தனக்குள்ள சிரமங் கள் தனது சாமர்த்தியத்தைக் சோதிக்கத் தோன்றியவை என்றே அவள் கருதினுள். "நான் குழந்தையாயிருக்கும் போது சந்தோஷமாக இருந்தேன். கஷ்டப்பட்டு வேலே செய்வதை நான் விரும்பினேன்; அப்போது தான் நான் எவ்வளவு கெட்டிக்காரி என்பதைக் காண்பிக்க முடியு மென்று நினைத்தேன்" என்று அவள் கூறுவதுண்டு.

அவள் தனது பதினேந்தாவது வயதில் பண்ணேயை விட்டு வெளியேறினுள். கிராமத்திலும் சுற்றியுள்ள பிரதே சங்களிலும் அவள் மருத்துவச்சியாகத் தொழில் புரிந்தாள். தனது தம்பிகளும் தங்கைகளும் பிறப்பதற்கு உதவி செய்த தால், அவள் சிறுவயதிலேயே அத் தொழிலே நன்ருகக் கற்றிருந்தாள் என்பதில் சந்தேகமில்லே. அவள் தனது பதினேழாவது வயதில் 30 மைலுக்கு அப்பாலிருந்த ஊருக் குப் பண்ணே வண்டியில் சென்று தையல் வேலே கற்றுக் கொண்டாள். அதற்குப் பிறகு தன்னேப்போல் பெரிய

குடும்பத்தில் பிறக்காவிட்டாலும் தன்னை விடச் சுபிட்சமா யிருந்தவர் வீடுகளில் தையல் வேலை செய்து தினம் கால் டாலர் சம்பாதித்தாள்.

அவளுடைய இருபத்திரண்டாவது வயதில் 1847-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவளுடைய உலக அனுபவத்தில் மற்றோர் அத்தியாயம் ஆரம்பமாகிறது. ஒரு நாள் மாலை வெளிறிய சிவப்பு உடை உடுத்து, தலையில் தொப்பியின் ஓரத்தில் ரோஜா மலர்கள் அணிசெய்ய அவள் ஆலயத்தின் சங்கீதக் கூட்டத்தில் பாடிக்கொண்டிருந்தாள். அப்போது அவளை ஓர் இளம் கப்பலோட்டி அன்புடன் நோக்கினான். அயர்லாந்துக்கு அருகே கப்பல் உடைந்து தெய்வாதீனமாக அவன் மட்டும் தப்பிப் பிழைத்து வந்திருந்தான். ஆலயத்தில் அப்போது நடந்த பிரார்த்தனை ஒரு விஷயத்தில் அவனுடையது என்று சொல்லலாம். அயர்லாந்துப் பிரயாணத்தில் மடிந்தவர்களின் ஞாபகார்த்தமாக அப்பிரார்த்தனை நடந்தது. இளம் கப்பலோட்டி தன் இதயத்தைப் பூர்ண மாகப் பறிகொடுத்தான்.

1849-ம் ஆண்டில் அவர்கள் மணம்புரிந்தனர். பிறகு அவனுடைய கப்பலில் ஏறி இருவரும் நியூயார்க்குக்குச் சென்றனர். 1861-ம் ஆண்டில் யுத்தம் ஆரம்பமானபோது, அவள் கப்பல் பிரயாணங்களை நிறுத்திக்கொண்டு வீட்டு வேலைகளையும் குழந்தைகளையும் கவனிக்கலானாள்; ஊக்க மூட்டும் வாழ்க்கையை விட்டு, ஆபத்தில்லாத வாழ்க்கையில் காலங் கழித்தாள்.

கப்பலில் போலவே, வீட்டிலும் அவள் சிறிதும் களைப் படையாமல் உற்சாகத்துடனே அலுவல்களைக் கவனித்து வந்தாள். அவள் துன்பம் வந்தால் சோர்ந்துவிட மாட்டாள். அவள் தனது எண்பத்தேழாவது வயதில் இறக்கும் வரை அசாதாரண இளமையுடனே வாழ்ந்து வந்தாள். மரணத் திலும் அவளுடைய முகம் பொலிவுற்றிருந்தது. விசால

மான கூரைகளைக் கொண்ட வெண்மை நிறம் பொருந்திய அவளது பெரிய வீட்டுக்கு நூற்றுக்கணக்கான விருந்தாளிகள் விஜயம் செய்திருக்கிறார்கள். சுறுமீன்கள், புயல்கள், கடல் பாம்புகள், பறக்கும் மீன்கள், ஸ்பானிஷ் வீரர்கள், சீனக் கோயில்கள் போன்ற விஷயங்களைப்பற்றி அவள் கூறிய கதைகள் சொல்லச் சொல்ல மெருகு பெற்றுப் பிரகாசித்தன.

தனது அநுபவங்களினால் தனக்குக் கிடைத்த ஆனந்தத்திலும் அவள் தனது விசால நோக்கத்தை இழக்கவில்லை. சார்காஸோ என்ற கடலைக் கடந்து போகும் போது அவளுடைய கண்கள் உணர்ச்சியோடு பிரகாசித்தன என்றாலும், தனது குழந்தைகள் எதிர் காலத்தில் நன்றாக வாழவேண்டுமென்றும் அவள் கவனித்து வந்தாள்.

அவளுக்குப் பிறந்த முதலிரண்டு பெண்களை அவள் கப்பலிலேயே வளர்த்து வந்தாள். அவர்கள் சிறு பிராயத்திலேயே இறந்து விட்டார்கள். அவளுடைய கடைசிப் பெண்ணை மவுண்ட் ஹோலியாக் கழகத்துக்குப் படிக்க அனுப்பி வைத்தாள். அப்பெண்ணுக்கு சிறிய வயதிலேயே ஆழ்ந்த கருத்துகளடங்கிய நூல்களின் மீதிருந்த பிரியத்தில் தாய் பெருமிதம் அடைந்தாள். அவளுக்கு ஒரே மகன். அவர்தான் எனது தந்தை அவளுடைய கண்ணின் மணி போன்றவர். அவருக்கு அறிவு நலமும் ஆன்மார்த்த நலமும் எல்லாம் நிறையக் கிடைக்கும்படி அவள் பார்த்துக் கொண்டாள்.

பியூரிட்டன் மதாசாரம் அவளுடைய இயல்போடு கூடப் பிறந்தது என்று சொல்ல முடியாது. எனினும், அவளுடைய இளம் பிராயத்திலேயே அது வேரூன்றி இருந்ததால், அதிலிருந்தும் அவள் பூராவும் தப்பிக்க முடியவில்லை. "வாழ்க்கையின் குறுகிய நேர்ப்பாதையை"ப் பற்றி அவள் அதிகம் பேசினாள்.

அவள் வேத நூலைத் தவறாது வாசித்து வந்தாள். ஆதியாகமத்திலிருந்து முடிவுவரை அவளுக்கு மனப்பாடம். அவள் வேறு பல புஸ்தகங்களையும் உற்சாகத்துடன் வாசித்தாள். கட்டுக் கதைகளில் அவளுக்குப் பிரியம் அதிகம். அதனால் ஒரு தீங்கும் இல்லையென்று அவள் தனது மனச்சாட்சியை சமாதானப் படுத்தினாள். வாசிப்பதில் அவளுக்கு இலக்கிய ரஸனை இருந்ததில்லை. விறுவிறுப்பான நடையில் எழுதப்பட்ட, சோகமும் ஹாஸ்யமும் நிறைந்த புஸ்தகங்கள் அவளுக்குப் பிடித்திருந்தன.

(2)

எனது தந்தை, பிறந்த நாளிலிருந்தே, பாக்கியசாலி தான். அப்போது காலமும் மாறிவிட்டது. அவருடைய தந்தை பிறந்த காலத்துக்கும் அவருடைய குழந்தைப் பருவத்துக்கும் பெரிய வித்தியாசம் இருந்தது. நீராவியின் உபயோகம் கப்பல்களில் அதிகமாகவே, கடற் பிரயாணத்தின் மூலம் ஒருவர் புகழ்பெறுவதற்கு முன்போல அத்தனை சந்தர்ப்பங்கள் கிடையா. என் தந்தை தம் பதினொன்றுவது வயதில் பக்கத்துக் கிராமத்துக்குப் போய்ப் படித்து வந்தார். அங்கே இங்கிலாந்திலிருப்பது போன்ற பள்ளிக்கூடம் ஒன்றிருந்தது. சிறுவயதிலேயே ஊக்கமாக வாசித்து வந்ததால், அவர் பதினான்காவது வயதில் ஹாலோவல் என்ற இடத்திலுள்ள உயர்தரப்பாடசாலைக்குச் சென்று படித்தார். பிறகு அவர் போடாயின் கல்லூரிக்குச் சென்றார்.

அவர் கல்லூரிப் படிப்பை முழுதும் முடித்துப் பட்டம் பெறவில்லை யென்றாலும், புஸ்தகமும் வாசிப்பும் அவருக்கு வாழ்க்கைத் துணையாக இருந்தன. வீட்டில் எப்போதும் என் தகப்பனார் புஸ்தகமும் கையுமாகத்தான் இருப்பார். சீக்கிரமாகவே மணம் புரிந்து கொண்டு, அவர் சட்டத்தில் தேர்ச்சியடைய வாசிக்கலானார். பக்கத்துப்பட்டணமாகிய எல்ஸ்வொர்த்திலிருந்த விஸ்வெல் அண்ட் கிங் என்ற கம்பெனியில் அமர்ந்து வக்கீல் தொழிலைப் பயின்று வந்தார்;

வார இறுதியில் அவர் எல்ஸ்வொர்த்திலிருந்து நீலக் குன்றுக்கு 14 மைல் தூரம் பிரயாணம் செய்து போய் வருகையில் சட்டப் புஸ்தகங்களைத் தவிர மற்றெல்லா விதமான நூல்களையும் வாசித்தார். வாழ்க்கையில் தோன்றும் சுகதுக்கங்களைச் சமாளித்து இன்பமாகக் காலங்கழிக்கப் புஸ்தகங்கள் தான் உதவும் என்று அவர் நம்பினர். அந்த நம்பிக்கையின் படி அவர் நடந்து வந்தார்.

சரித்திரம் அவருக்கு மிகவும் பிடித்த விஷயம். சரித்திர வரலாறுகளையும், உண்மைகளையும் அவர் நன்கு கிரஹித்தார். சாதாரண வரலாறுகளிலும் அவர் அரிய உட்கருத்தைக் கண்டார். சாதாரண விஷயங்களைப் பற்றியும் ஆழ்ந்து யோசித்து, அவற்றினுல் ஆனந்தமடைந்தார். மனிதனின் ஞாபகசக்தியைப் பற்றிய உண்மையை நான் அவரிடமிருந்து தான் அறிந்தேன். அதற்கு நான் என்றென்றும் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

சரித்திரத்துக்கு அடுத்தபடியாக, எனது தந்தைக்குப் பழைய இலக்கியங்கள், முக்கியமாக கிரேக்கிய இலக்கிய நூல்கள் பிடிக்கும். இலியட், ஒடிஸி போன்ற நூல்களில் பல அடிகள் அவருக்கு மனப்பாடம். காலையில் உடுத்தும் போதும், உணவருந்தப் படி இறங்கும் போதும் உரக்க அவற்றை ஒப்பிப்பார். அதனுல் இளம் பிராயத்திலேயே எங்களுக்கு கிரேக்கக் கவிகளின் ஒலியில் பிரேமை ஏற்பட்டது. நாங்களும் அந்நூல்களை வாசிக்கக்கூடிய நாளை எதிர்பார்த்து வந்தோம்.

மத விஷயத்தில் அவர் கர்னுடகமானவர் என்று சொல்ல முடியாது. வேத நூலை அனைவரும் நன்ருக அறிந்திருக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்தினுர். கடவுளின் மாற்ற முடியாத வாக்கு அது; அதுவே வாழ்க்கைக்குப் போதுமானது என்ற நோக்கத்தோடல்ல. கல்வி பயின்றவனுக்கு வேதநூல் தெரிந்திருக்க வேண்டும். பெருந்

தன்மையுடன் ஒழுக்கமாக வாழ்க்கையை நடத்த அது சிறந்த வழிகாட்டி யென்று அவர் கருதினார்.

சமூக வாழ்க்கையை அவர் மதித்ததே கிடையாது. அவர் தமது புஸ்தக நிலையத்தை விட்டு வெளியே ஒரு மாலைப் பொழுதையும் கழித்ததில்லை. அவர் வாசிப்பு உண்டு, அவருடைய மனையும் குழந்தைகளும் உண்டு. மற்றப்படி அவருக்குப் பிடித்தவை குதிரைகள், நாய்கள், வீட்டுப் பசு, பூனை.

தம்முடைய குழந்தைகள் விஷயத்தில் அவருக்கு முக்கியமாக இருந்த பற்றுதல் அவர்கள் அறிவு விருத்தி யடைய வேண்டும், மனப்பக்குவ மடையவேண்டும் என்பதே யாகும். அவர்களுடைய படிப்பின் மேன்மையைக் கண்டு பெருமையடைவதற்காக அவர் அவர்களைக் கண்டித்து வளர்த்து வந்தார் என்று சொல்ல முடியாது. தம்மைப் போல அவர்களும் புஸ்தகங்களின் மூலம் பேரின்பத்தை அடைய வேண்டுமென்ற அவா அவருக்கிருந்தது என்றே நான் நினைக்கிறேன்.

அத்தியாயம் 4

அலுவல்கள்

"சோர்" (வீட்டுவேலை) என்பது பெரும்பாலும் அமெரிக்க வார்த்தையென்று மொழி நிபுணர்கள் சொல்லு கூறுகிறார்கள். அது இப்போது முக்கியமாக கிராமத்தினர் களுடைய பேச்சு வழக்கில் தான் இருந்து வருகிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால், முப்பது வருஷங்களுக்கு முன் நகரங்களிலாகட்டும் கிராமங்களிலாகட்டும் சாதாரண மான ஜீவனம் நடத்திய எல்லாக் குடும்பத்தினரிடையேயும் அச்சொல் வழங்கிவந்தது. குடும்ப வாழ்க்கை தங்குதடை யின்றி நடக்க அச்சிறிய காரியங்கள் எவ்வாறு நிறைவேற வேண்டுமோ அவ்வளவு அத்தியாவசியமாக அச் சொல்லும் அமைந்திருந்தது.

"இன்று டாக்டர் கிரிண்டில் அவர்களுடைய வயல் பக்கம் விளையாடப் போகலாமா?" என்று நாங்கள் ஜனவரி மாதம் காலை உணவருந்தும்போது கேட்போம்.

"உங்களுடைய வீட்டு அலுவல்களை முடித்த பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்" என்று எங்களுடைய அன்னை பதிலளிப்பாள்.

வீட்டு அலுவல்களைப் பற்றிய நுட்பமான விஷயம் அதன் கூட்டுறவுத்தன்மையில் அடங்கியிருக்கிறது. அதுவே அவற்றை மற்ற வேலைகளிலிருந்து பிரிக்கிறது. ஒருவன் வெளிவேலை செய்தால் அதற்கு ஊதியம் பெறுகிறான். ஒருவன் தனது வீட்டு வேலையைச் செய்வதற்காகச் சம்பளம் பெறுவதில்லை. வெளிவேலையைச் செய்ய சம்மதம் பெற வேண்டும். ஒருவருக்கொருவர் பேச்சு வார்த்தை நடக்க வேண்டும். வீட்டு வேலையைக் கவனிக்க ஒருவருக்கொருவர் கூட்டுறவு இருக்கவேண்டும்.

உதாரணமாக, ஏப்ரல் மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரை எங்கள் வீட்டின் பசுவை ஒரு நாளைக்கு இரு முறை தூர ஒரு இடத்திற்கு மேய்த்துச் செல்வது எனது வெளி வேலை. எனது பத்தாவது வயதிலிருந்து பதினைந்தாவது வயது வரை,. அவ்வேலையைச் செய்வதற்காக நான் நவம்பர் மாதத்தின் முதல் தேதியன்று ஐந்து டாலர் சம்பளம் பெற்று வந்தேன். ஆனால், பன்றிக்கு உணவு காட்டிவந்தது எனது வீட்டுவேலை. அதைச் செய்வதற்கு அதிக நேரமோ சிரமமோ அவசியமில்லை. எனது குடும்ப வாழ்க்கை சௌகரியமாக நடந்துவர நான் செய்ய வெண்டிய கடமையாகவே அது கருதப்பட்டது.

அதேபோல, எனக்குக் களஞ்சியத்திலும் அலுவல் இருந்தது. வீட்டிலிருந்த அலுவலை விட அதுவே எனக்கு அதிகப்பிரியம். குதிரைகளுக்குத் தீனி வைப்பேன்; பசு

வைப் பார்த்துக் கொள்வேன். எனக்கு வயதான பிறகு நான் தரையையும் சுத்தம் செய்வேன்.

அண்டை வீட்டாருக்குக் காலையில் பால் எடுத்துக் கொண்டு போவது, மலையிலிருந்த ஸ்ரீமதி டக்ளஸிடமிருந்து தினம் முட்டைகள் வாங்கிவருவது, விறகு அடுக்குவது, அரிவாள் எடுக்கக்கூடிய காலத்தில் விறகு கீறுவது, ஆப்பிள்களைச் சேகரித்துக் கொண்டுவருவது—இவை யெல்லாம் வீட்டு அலுவல்கள் தான். எங்களுடைய குடும்பத்தில் எல்லோரும் இந்த அலுவல்களை முணுமுணுக்காமல் உற்சாகத்துடன் செய்யவேண்டும்.

வீட்டிலேயும் சம்பளத்துக்கு வேலைசெய்ய ஒரே ஒரு பெண்தான் இருப்பாள். குடும்பமோ பெரிது. ஆகவே அங்கும் நிறைய அலுவல்கள் இருக்கும். அவை அவ்வளவு சுவாரஸ்யமாகவும் இருக்கமாட்டா. விளக்குகளைச் சுத்தம் செய்து எண்ணெய் ஊற்றிவைக்கவேண்டும். கணக்கற்ற தட்டுகளை உடைக்காமல் சுத்தமாகக் கழுவித் துடைத்து வைக்கவேண்டும். படுக்கைகளை விரித்துப் போடவேண்டும். பழங்காலத்துச்சித்திர வேலைப்பாடமைந்த மேஜைக் கால்களை யெல்லாம் நன்ருகத் தூசி போக்கிச் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும்; என்னென்ன வெல்லாமோ வைத்திருக்கும் சின்னச் சின்ன முக்கோண வடிவ அலமாரிகளையும் துப்புரவாய்த் துடைக்க வேண்டும்.

எவ்வித விதிகளையும் லட்சியம் செய்யாத குழந்தைகள் மற்றவர்களின் அலுவல்களைப் பதின் மடங்கு அதிகமாக்கின. ஒவ்வொரு நாளும் அவை சரியாகத் தூங்குகின்றனவா என்பதே பெரியகவலை. அவை நிம்மதியாகத் தூங்கினுல் தான் குடும்ப வாழ்க்கை சரிவர நடந்தேறும். அக்காலத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு குழந்தைகளைத் தொட்டில்களிலிட்டுத் தாலாட்டித் தூங்கவைத்தனர் என்று நிச்சயமாகச் சொல்லலாம். இன்று நடுத்தர வயதினர் பலர் ஸ்வரபேத

முள்ள சங்கீதத்தை வெறுக்கிறார்கள். குழந்தைப் பருவத்தில் சுகமான பாட்டுகளைக் கேட்டுப் பழக்கமானதால் அவர்களுக்கும் தெரியாமல் ஏற்பட்ட மனப்பக்குவமாக இருக்கலாம் அது!

சனிக்கிழமைகளிலும், பள்ளி விடுமுறை நாட்களிலும் காலை ஒன்பது மணிக்குக் குழந்தையின் தொட்டிலிடம் என்னை நிற்க வைப்பார்கள். சாமர்த்தியமாகத் தொட்டிலை ஆட்டிவிட்டு குழந்தையை சுமார் இரண்டு அல்லது மூன்று மணிநேரம் தூங்க வைத்திருக்கவேண்டும் நான். அப்போது தான் சமையலறையில் அலுவல்கள் ஒழுங்காக நடக்கும். எனக்கு இந்த அலுவலில் சலிப்பேற்பட்டதில்லை. ஏனெனில் இந்த நீண்ட நேரத்தில் நான் வாசித்துக் கொண்டிருக்கலாம். வேலை நேரத்தில் புஸ்தகங்களை வாசித்துக் கொண்டிருப்பவர்கள் காலத்தை வீணுக்குகிறார்கள் எனக் கண்டிக்கப் படுவதுண்டு. நான் குழந்தையைப் பார்த்துக்கொள்ளுவதால் அவ்விதக் குற்றச் சாட்டுக்கு இடமிருப்பதில்லை.

இதை வாசிக்கக் கூடாது, அதை வசிக்கக்கூடாது என்று எனது பெற்றோர்கள் கட்டுத்திட்டப்படுத்துவதில்லை. தீங்கு இழைக்கக்கூடிய நூல்கள் வீட்டுப்புத்தகசாலையில் இல்லாமல் பார்த்துக்கொள்வார்கள். எங்கள் புத்தகசாலையில் அபரிமிதமான புத்தகங்கள் இல்லை. அவற்றையெல்லாம் வாசித்தான பிறகு நான் மற்ற வீடுகளிலிருந்தும், மாதர் புஸ்தக சாலையிலிருந்தும், ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடத்தின் நிர்வாகஸ்தரிடமிருந்தும் புஸ்தகங்களைக் கடன் வாங்கி வாசிப்பேன். ஷேக்ஸ்பியர், தக்கரே, ஜார்ஜ் எலியட், வில்லியம் பிளாக், டிக்கன்ஸ், பிரானடே சகோதரிகள், ஹாத்தார்ன், கூப்பர், ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்ஸன் ஆகியோருடைய நூல்களை நான் வாசித்தேன்.

ஜே. எஸ். ஸி. ஆபட் எழுதிய சரித்திரக் கட்டுரைகளும் வாழ்க்கைச் சரிதங்களும் இப்போது வழக்கிலில்லை. அவற்றை

வாசித்து நான் அநுபவித்திருக்கிறேன். புதிய காலங்களி லும் நாகரிகங்களிலும் எனக்குப் பரிச்சயம் உண்டாக அவை உதவிசெய்தன. கிரீஸ், ரோம், ஸ்பெயின், மறுமலர்ச்சி இயக்கம், பிரஞ்சுப்புரட்சி இவற்றைப்பற்றி யெல்லாம் நான் அறிந்து கொண்டேன். அப் புத்தகங்களை நான் என்றும் மறக்கமாட்டேன்.

காலையில் நான் வாசிப்பது என்னவோ குழந்தையைப் பொறுத்திருந்தது. அது அசந்தர்ப்பமான வேளையில் விழித்துக்கொண்டு என்னுடைய படிப்பைக் கலைக்கும் பொழுது எவ்வளவு ஆத்திரம்வரும்? மிகச் சிரமப்பட்டு என்னை நானே அடக்கிக்கொள்வேன்.

வீட்டில் எப்போதும் குழந்தை தான். அதனால் எங்களுக்குண்டான மற்றோர் அலுவல் மாலையில் ஆறு மணிக்கு அதை உறங்க வைப்பது. சமையலறையில் ஊர்வலம் ஆரம்பமாகும். எனது அன்னை, குளிப்பாட்டி, துவர்த்தி, உடுத்தி, கம்பளியால் போர்த்திய குழந்தையைத் தூக்கிக் கொள்ளுவாள். எனது தமக்கை அவளுக்கு முன் விளக்கை எடுத்துச் செல்வாள். குளிர்காலமானால் விளக்கு ஏற்றி யிருக்கும்; வேனிற்காலமானால் ஏற்றாமலிருக்கும். குழந்தையின் பால் புட்டிகள் முதலியவை அடங்கிய பெரிய பாத்திரத்தை நான் எடுத்துக் கொண்டு என் தாயாரின் பின்னே போவேன்; பாலை ஊற்றி விளக்கில் சுடவைப்பதற்கு என்னிடம் ஒரு கோப்பையும் இருக்கும். எனது தங்கை இரண்டு ஆண்டுகள் சிறியவள். அவள் தன் கையில் கும்மட்டியை வைத்திருப்பாள். என் தம்பி கடைசியில் குழந்தையின் துணிமணிகள் போர்வை முதலியவற்றைச் சுமந்து வருவான். நாங்கள் எங்களுடைய தகப்பனாரின் அறையை அணுகியதும் ஒரு விநாடி நிற்போம். அவர் பெருமிதத்துடனும் திருப்தியுடனும் குழந்தையை நோக்கிய பிறகு நாங்கள் படிகள் ஏறி மாடிக்குச் செல்வோம். இந்த சடங்

லில் எங்கள் தந்தை பங்கு எடுத்துக் கொள்ளாததைப் பற்றி நாங்கள் ஆச்சரியப்பட்டதில்லை. வீட்டு அலுவல்களைப் பொறுத்தவரை, எங்களுக்குத் தெரிந்த மற்றத் தகப்பன்மார் களைப் போல அவராலும் எவ்வித அலுவலும் செய்ய முடி யாதென்று நாங்களாகத் தீர்மானித்துக் கொண்டோம்.

மற்றக் குடும்பங்களைப் போலவே எங்கள் குடும்பத் திலும், ஒவ்வொரு சிறுவனும் தனது பொறுப்பை உணரும் படி வற்புறுத்தப்பட்டது. அவன் என்றாவது வெளியே போக வேண்டியிருந்தால், தனது அலுவல்களை மற்றவர்கள் செய்து முடிக்கும்படி அவன் புறப்படு முன் ஏற்பாடு செய் வான். இக்காலத்தைப் போல அப்போது ஒரு சிறுவனின் தனிப்பட்ட தன்மையை பிரமாதப்படுத்துவதில்லை. சாதா ரணமான குடும்பங்களில் ஒரு சிறுவனை ஏதோ தனிப்பட்ட பிரச்னையாக யாரும் கருதுவதில்லை. எனினும் அவனுடைய கூட்டுறவால் குடும்பத்துக்கு உண்டாகும் சௌகரியங்களை ஒப்புக் கொள்ளுவார்கள். அவனுடைய உதவியையும் உதவி செய்வதற்கு அவனுக்குள்ள விருப்பத்தையும் மற்ற வர்கள் சாதாரணமாக எதிர்பார்க்கக் கூடிய விஷயமாகவே கருதினார்கள். சில அபூர்வமான குடும்பங்களில் குழந்தை களுக்கு அளிக்கப்பட்ட வேலைகள் அதிகமாயிருந்திருக்கலாம். எனினும் இந்த வழக்கத்தால் சுயநலம் தழைத்ததில்லை.

அத்தியாயம் 5

குடும்பத்தோடு வளர்ந்த பிராணிகள்

என் தந்தைக்கு பிராணிகள் மீது அபார பிரேமை. அதிருஷ்டமற்ற ஏதாவதொரு பிராணியை எந்நேரத்திலும் அவர் சதா வீட்டுக்குக் கொண்டு வருவார். அவற்றைச் சிறிது சிகிச்சை செய்து அனுப்ப வேண்டியதிருக்கும் அல் லது வீட்டிலேயே வைத்துகொள்ள வேண்டியதிருக்கும்.

அவற்றிற்கு சிச்ருஷை செய்ய வேண்டிய பொறுப்பு என் தாயுடையது. இவ்வாறு மிருகங்களைக் கொண்டுவருவதால், அவளுக்குத் தொந்தரவுகள் அதிகமாயினும், அவள் முனகுவதில்லை. இந்தப் பிராணிகளுக்காக மாரிக்காலத்தில் சமையலறையிலும் மற்ற அறைகளிலும் உள்ள நெருப்பைச் சுற்றிப் பலவகையான கூண்டுகளும் பெட்டிகளும் இருக்க அவள் சம்மதிப்பாள். எங்களைப் போல் அவளும் பெரும்பாலும் அப்பிராணிகளை எங்கள் வீட்டில் வழக்கமாக உள்ளவையே எனப் பாவித்தாள்.

ஒரு சமயத்தில் எங்கள் வீட்டில் இரண்டு நாய்கள் ஒரு பூனை, ஓர் ஆட்டுக்குட்டி, ஒரு முதுகு ஒடிந்த பன்றிக் குட்டி, இரண்டு முயல்கள் இருந்தன. பூனைக்கோ ஓராண்டுக்கு இருமுறை குடும்ப விருத்தியாகும். வாரக் கணக்கில் பன்றிக்குட்டியை என் தாயார் தனக்கிருந்த ஒரே ஒரு அழுக்குக் கூடையில் வைத்து வைத்தியம் செய்ய வேண்டியிருந்தது.

இந்த ஜந்துக்கள் வீட்டில் எங்கு வேண்டுமானாலும் சுற்றி அலையும். அவற்றைக் கவனிப்பது எங்கள் வீட்டு வேலைகளில் ஒன்று. ஆனாலும் என் தாயார் நடமாடும் போது அவை வழியில் கிடக்குமாதலால், அவற்றைக் கவனிப்பது அவளுக்கும் பொறுப்பாகிவிடும். கிராமத்தில் எல்லா வீடுகளிலும் குதிரைகள் இருக்கும். எங்கள் வீட்டிலும் ஒரு குதிரை இருந்தது. சிலசமயங்களில் இரண்டு குதிரைகள் இருக்கும். அதில் என் தந்தைக்குப் பெருமை. முக்கியமாக, ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை நேரத்தில் மழை இல்லாதிருந்தால் நாங்கள் குதிரை வண்டியில் வெளியே செல்வோம்.

இச் சவாரி ஒரு பொழுதுபோக்காகத் தோன்றாது. ஏதோ ஒரு சடங்கில் நாங்கள் கலந்து கொள்ளுவது போலவே இருக்கும். ஞாயிற்றுக்கிழமைக்குகந்த ஆடைகளை உடுத்துக் கொண்டு, எல்லோரும் சிறப்பாக உட்கார்ந்திருப்

போம். எங்களுடைய தந்தை வண்டி ஓட்டுபவருடைய இடத்தில் நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கொள்ளுவார். இடது கையில் கடிவாள வாரையும், வலது கையில் சவுக்கையும் வைத்திருப்பார். எதிரே வரும் வண்டிகளில் இருப்போருக்கு வணக்கம் செய்ய சவுக்கை வைத்திருக்கும் கையால் தொப்பியை மிடுக்காக எடுப்பார். அம்மாதிரிச் சமயங்களில் பெருமை என்ற பாவத்துக்கு அவர் உள்ளானர் என்று நான் நிச்சயமாய்ச் சொல்வேன்! தமது குடும்பத்தைப் பற்றியும், தம்மைப் பற்றியும் அவர் பெருமை கொண்டார். அண்டை வீட்டுக்காரர்களைத் தாண்டிச் செல்லும் போது எங்களுக்கும் எங்களுடைய குடும்பத்தைப் பற்றிய உணர்ச்சி அபாரமாயிருந்தது.

இத்தகைய சவாரிக்காகக் குதிரைகளைப் பிரத்தியேகமாகத் தயார் செய்வது வழக்கம். குதிரைப்பாகன் வேலையை அடிக்கடி என் தகப்பனரே பார்த்துக் கொள்வார். குதிரைகளும் தலைகளை நிமிர்த்தி ஒய்யாரமாக நடந்து செல்லும்; சந்தர்ப்பத்தின் விசேஷத்தை அவையும் உணர்ந்திருப்பது போலத் தோன்றும். மொத்தத்தில், ஞாயிற்றுக் கிழமை சவாரியை அலட்சியமாகப் பாவிக்கக் கூடாத ஒரு வைபவமாக நாங்களும் குதிரைகளும் கருதினேம் என்ருல் மிகையாகாது.

குதிரை லாயத்தை அடுத்து, எங்கள் பசு நிற்கும். மிகவும் சாதுவான ஜந்து. நாஸூக்கான பிராணி. பல ஆண்டுகள் வரை அதை நான் கவனித்து வந்தேன். நுட்பம் பார்க்கும் தன்மையுடைய பசு. அதன் பழக்க வழக்கங்களுக்கு நான் மதிப்புக்கொடுத்து வந்தேன். புல் மேயச்செல்லும் வழியிலிருக்கும் நீரூற்றில் தண்ணீர் குடிக்கும்போது வெகு நேரம் ஏதோ யோசித்துக்கொண்டு நிற்க அது பிரியப்படும். பெரிதாக வளர்ந்திருக்கும் கொழுந்துகளைக் கடிக்காது அது. நிதானமாக, சிறுசெடி அடர்ந்து வளர்ந்திருக்கும் இடத்தில் மேய்வதற்கு அப்பசு விரும்பும். தனக்கு அளிக்கப்படும்

தானியம் நன்ருயிருக்கிறதா என மோந்து பார்க்கும், தன்னை ஏமாற்றுகிருர்களா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள. ஒழுங்கற்ற அவசரம் அதற்கு எப்போதும் இருந்ததில்லை. அப்பசுவுடன் நானும் அனுயாசமாகச் சுற்றி வந்தேன். அரிய பட்சிகளைப் பற்றியும் செடி கொடிகளைப் பற்றியும் அக்காலத்தில் நான் பல விஷயங்களை அறிந்தேன்.

எங்களுடைய பெரிய களஞ்சியத்தில் இன்னும் பல ஜந்துக்கள் அவ்வப்போது வசித்து வந்தன; அங்கேயே சாஸ்வதமாக இருந்தவையும் உண்டு. என் தந்தையின் தொழிலினுல் சில சந்தர்ப்பங்களில் அசாதாரண நிலைமை ஏற்படுவதுண்டு. அக்காலத்தில் வக்கீல்களுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று குடும்பச் செலவில் பணத்தை ஒதுக்கி வைக்கும் வழக்கம் கிடையாது. ஆகவே, வக்கீலுக்குப் பணம் கொடுக்க வேண்டி வரும்போது, கடன்காரன் தனது வீட்டிலோ பண்ணையிலோ இருக்கும் பொருளைக் கொண்டு காரியத்தை முடித்துக் கொள்ளுவான். இம்மாதிரி பண்ட மாற்றினுல், அடுத்த வீட்டிலிருந்த டாக்டர் குடும்பத்தைப் போல, எங்கள் வீட்டிலும் கண்ட சாமான்களும், ஆடு மாடுகளுக்குரிய தீனிகளும் வந்து சேரும்.

எல்லைத்தகராறு ஒன்றில் ஸாரா, எவெலினு மான்ஸ்பீல்ட், என்ற இருவர் உரிமைகளுக்காக என் தந்தை பல வருஷங்கள் போராடிவந்தார். அதற்காக அவர்கள் என் தந்தைக்கு நிறைய பணம் கொடுக்க வேண்டியதிருந்தது. ஓர் ஆண்டுக்கு முன், மேற்கே நெடுந் தொலைவில் வசித்து வந்த அவர்களுடைய உதவாக்கரை சகோதரன் வேடிக்கைக்காகவோ என்னவோ அவர்களுக்கு ஒரு சிறிய கழுதையை அனுப்பியிருந்தான். அதை எப்படியாவது என் தகப்பனுருக்குக் கடனுக்குப் பதிலாகக் கொடுத்துவிட அவர்கள் முயன்ருர்கள். என் தகப்பனுரும் அம்மிருகத்தைக் கண்டவுடன் அதன் மீது மோகம் கொண்டார். மான்ஸ்பீல்ட் சகோதரிகள் தங்களுடைய கடனைத் தாங்கள் கௌரவமாகத் தீர்த்து

விட்டதாக, கழுதையை எங்களிடம் அனுப்பினார்கள். மற்ளெரு மிருகத்தை ரட்சிக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு ஏற்பட்டது.

அக் கழுதையின் பெயர் ரிச்சர்ட். அதனால் எங்களுக்குக் கிடைத்த பாக்கியங்களை வர்ணிக்கப் பலபக்கங்கள் வேண்டும். அது எங்கள் வீட்டிற்கு வரும்போது எனக்கு வயது பதின்மூன்று. நான்கு ஆண்டுகள்வரை, நான் கல்லூரிக்குச் செல்லும்வரை, நான் அதனுடன் சந்தோஷமாகக் காலங்கழித்து வந்தேன். நாட்டுப்புறப் பாதைகளில் மைல் கணக்கில் அது இழுத்துச்சென்ற வண்டியில் சுற்றி வந்தேன்.

வழியில் சிலசமயங்களில் அது ஒய்வு எடுத்துக்கொள்ளும். மணிக்கணக்கில் நகராமல் இருக்கும் அதன் வழக்கம் மான்ஸ் பீல்ட் சகோதரிகளுக்குப் பிடிக்கவில்லை யெனினும், எங்களுக்குப் பரம சந்தோஷம். வெகு சாமர்த்தியத்துடன் அது ஒய்வு எடுத்துக்கொள்ளத் தொடங்கும். வண்டிக்கு எவ்வித அபாயமும் உண்டாகாமல்,லாகவமாக அது படுத்துக் கொள்ளும். நீண்ட பெருமூச்சுடன் பக்கத்திலிருக்கும் புல் மேல் கழுத்தை நீட்டிப் படுத்துக்கொண்டு களைப்படைந்த கண்களையும் மூடிக்கொள்ளும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் நானும் என் சகோதரிகளும், வண்டியில் பின்புறம் வைத்திருக்கும் குடையை எடுத்து, விரித்து அதனடியில் உட்கார்ந்து ஏதாவது நல்ல புஸ்தகத்தை வாசிப்போம் அல்லது பாடங்களைப் படிப்போம்.

ஒய்வு எடுத்துக்கொள்ளும் நேரத்தைத் தவிர மற்ற சமயங்களில் கழுதை தன் கடமையை நிறைவேற்றத் தயங்கியதில்லை. விசேஷ நாட்களில் எங்கள் வீட்டிலிருந்த மற்றப் பிராணிகளைப்போலவே அதற்கும் தனி விருந்து கிடைக்கும்.

அத்தியாயம் 6

விளையாட்டுகள்

(1)

வீட்டுக்குள்ளிருந்து விளையாடும் விளையாட்டுகளில் நாங்கள் அதிகமாக விரும்பியது ஆசிரியர்கள் விளையாட்டாகும். சீட்டுகளைக் கொண்டு விளையாடும் விளையாட்டு அது. கீர்த்தி வாய்ந்த ஆசிரியர்களின் படங்களும் அவர்கள் எழுதிய நூல்களின் பெயர்களும் சீட்டுகளில் வரையப்பட்டிருக்கும். மாரிக் காலத்தில் பலநாட்கள் மாலைப்பொழுது கழிவதற்கு இவ்விளையாட்டு உதவியது. அதனால் சிறுவர்களுக்கு உண்டாகும் நன்மையை மிகைப்படுத்திக் கூறுவதென்பது முடியாத காரியம்; அறிவு வளர்ச்சிக்கும், கலாசார வளர்ச்சிக்கும் அது மிகவும் துணையாக இருந்தது. பல வீடுகளிலிருந்த சிறுவர்களுக்கு எங்களைப்போல அவ்வளவு அதிகமாக புஸ்தகங்கள் விஷயத்தில் பரிச்சயமில்லை. அச்சிறுவர்களும் இவ்விளையாட்டின் மூலம் மேதைகளைப் படங்களைப் பார்த்து அறிந்து கொண்டார்கள். பெயரளவிலாவது அம்மேதைகளின் முக்கிய புஸ்தகங்களை அச்சிறுவர்கள் தெரிந்துகொண்டார்கள்.

தாமஸ் கார்லைல் என்ற ஆசிரியரின் புஸ்தகங்களை வாசிக்காவிட்டாலும், "பிரஞ்சுப் புரட்சி," "பிரெடரிக் மகான்," "ஸார்ட்டர் ரெஸார்ட்டஸ்," "வீரர்களும், வீரர்களைப் போற்றுதலும்," முதலிய புத்தகங்களை அவர் எழுதியிருக்கிறார் என்பதை ஒரு சிறிய சீட்டைப் பார்த்து அறிந்துகொண்ட சிறுவர்கள் பல்லாயிரக் கணக்காவார்கள். அவர்கள் இவ்வாறு கற்றது அவர்கள் நினைவிலிருந்து நீங்கவே நீங்காது.

ஞாயிற்றுக்கிழமைகளில் சுவிசேஷ விளையாட்டுகளைத் தான் நாங்கள் விளையாடவேண்டும். என் தந்தைதான் எ

போதும் உபாத்தியாயர். அவர் சிவப்புப் புஸ்தகத்தைப் பார்க்கலாம் என்று விதிகள் அநுமதித்தாலும் அவர் ஒரு முறை கூட அதைப் பிரித்துப் பார்த்ததில்லை. அவரைச் சுற்றி நாங்கள் உட்கார்ந்து கொள்ளுவோம். சாதாரணமாக என் அன்னையும் பாட்டியும் கூட எங்களுடன் கலந்து கொள்ளுவார்கள்; ஒவ்வொருவரும் தனக்கு அடுத்துள்ள நபரைப் பச்சைச்சீட்டுகளில் கண்டுள்ள கேள்விகளைக் கேட்பார்:

"முதன் முதலாக கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப் பட்ட சீடர்கள் எங்கு இருந்தார்கள்?

"மாத்தியூவின் சுவிசேஷத்தில் கூறப்பட்டிருக்கும் முறைப்படி பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் பெயர்களைச் சொல்?"

முதலில் கேள்வி கேட்கப்பட்டவர் சரியான விடை கூறு விடில், அவருக்கு வலது புறம் உட்கார்ந்திருப்பவர் சரியான விடையைச் சொல்லிப் பச்சைச் சீட்டைப் பெற லாம். சிறிய தவறு கூட விடையில் இருக்கக் கூடாது. யாருமே சரியான பதில் அளிக்க வில்லையென்றால், சீட்டு என் தந்தையிடம் செல்லும். அவர் சிவப்புப் புஸ்தகத் தைப் புரட்டாமலே சரியான விடையைக் கூறுவார். அது நீளமாகவோ கஷ்டமாகவோ இருந்தால், அவர் சொல்லச் சொல்ல நாங்கள் அதைத் திருப்பிச் சொல்லுவோம்.

வீட்டுக்குள் விளையாடக்கூடிய விளையாட்டுக்கள் பல வற்றை நாங்கள் சிருஷ்டி செய்தோம்.

பள்ளிக்கூடங்களில் எழுத்துக் கூட்டிச் சொல்லும் விளையாட்டில் ஈடுபட்டிருப்பினும், அதில் எங்களுக்குச் சலிப்பே ஏற்படாது. அதிலும் எங்கள் குடும்பம் பெரிதா கையால் மற்ற வீடுகளிலிருந்து யாரும் வந்து எங்களுடைய விளையாட்டில் கலந்து கொள்ளும் அவசியம் ஏற்பட்டதில்லை. சமையல் வேலை செய்யும் வேலைக்காரியை வார்த்தையைச் சொல்வதற்கு நாங்கள் அமர்த்திக் கொள்ளுவோம். அவ

ளும் எழுத்துக் கூட்டுவதில் அடிக்கடி திண்டாடியதில்லை என்றால் மெயின் ராஜ்யத்தில் சாதாரண மக்களும் சிறந்த அறிவுடன் விளங்கினார்கள் என்று நன்றாகச் சொல்லலாம்.

(2)

நாங்கள் வெளியே விளையாடிய விளையாட்டுக்கள் அக்காலத்தில் அநேகமாக எல்லாச் சிறுவர்களுக்கும் தெரிந்திருந்தவை தான். பெரும்பாலும் அதே விளையாட்டுக்களைத் தான் அதற்கு முன்பும் சிறுவர்கள் விளையாடினார்கள்; இப்போதும் விளையாடுகிறார்கள் என்று நினைக்கிறேன். பல விளையாட்டுக்களில் எங்களுடைய மிருகங்களும் ஒத்துழைத்தன. உதாரணமாக புகழத்தக்க ஸர்க்கஸ் காட்சியை ஒரு நொடிப் பொழுதில் நாங்கள் உண்டாக்க முடியும். மற்றப்படி ஒடித்தொட்டு விளையாடுதல், கைதி விளையாட்டு, கண்ணும் பொத்தி விளையாட்டு முதலிய விளையாட்டுக்கள் எங்களுக்குப் பிடித்திருந்தன.

ஆனால் ஒரு விளையாட்டில் எங்களுக்குச் சலிப்பே தோன்றியதில்லை. அதில் நாங்கள் சிலைகளாக மாறிவிடுவோம். எங்களுக்குள் தீர்ப்புக் கூற ஒரு பையனைத் தேர்ந்தெடுப்போம். அவன் நாங்கள் இருக்கும் இடத்தை விட்டு விலகியதும், நாங்கள் என்ன வேஷம் போட்டுக் கொள்ளுவது என்பதைத் தீர்மானிப்போம். அக்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த மனிதர்களைப் போலவோ அல்லது நிகழ்ச்சிகளையோ பிரதிபலிக்க எவ்விதத் தடையும் இல்லையென்றாலும், நாங்கள் பலவித உணர்ச்சிகளையோ, மனப்பக்குவங்களையோ தான் எடுத்துக் காட்டத் தீர்மானிப்போம். மகிழ்ச்சி, பயம், பச்சாத்தாபம், வெறுப்பு, பொறாமை, நம்பிக்கை, கோபம், பெருமை, குரூரம், சோர்வு, வருத்தம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் நாங்கள் முனைந்தோம். நாங்கள் எதைப் பிரதிபலிப்பது என்பதைத் தீர்மானித்ததும், அம்முடிவைத் தீர்ப்பளிக்கும் பையனிடம் தெரிவிப்போம்.

எழுதுவதற்கு ஏதாவது கிடைத்தால், அதில் அவன் நாங்கள் விளக்கிக் காட்டப்போகும் உணர்ச்சியின் பெயரையும் எழுதி வைப்பான்.

(3)

மற்றொரு விளையாட்டு மிகப் பிரபலமாயிருந்தது. நாங்கள் அதைச் சுயமாக சிருஷ்டி செய்திருந்ததால் அதைப் பற்றி விவரிக்க வேண்டும். "விளையாடும் பிளினி" என்று அதற்குப் பெயர். வெஸுவியஸ் என்ற எரிமலை வெடிப்பினால் இறந்து போன பிளினியைப் பற்றிப் பாடபுஸ்தகத்தில் ஒரு கதை உண்டு. அதிலிருந்து அவ்விளையாட்டு எங்களுக்குக்கு உதித்திருக்க வேண்டும்.

அவ் விளையாட்டின் முதல் வேலை கற்களைச் சேகரிப்பது. கற்களின் அளவைப்பற்றி நாங்கள் வெகு நேர்மையாக நடந்து கொள்ளுவோம். அவை மிகவும் பெரிதாகவும் கூரானதாகவும் இருக்கக் கூடாது.

கற்களைச் சேகரித்தவுடன், பிளினி யார் என்று தேர்ந்தெடுப்போம். தேர்ந்தெடுத்தவுடன் பிளினி விலகி விடுவான். எரிமலை வெடித்து எறியப்படும் கற்களாலும் அக்கினிப் பிரவாகத்தினாலும் இறக்கக் காத்திருப்பான். அவன் ஒரு பலகையையும் பென்ஸிலையும் கையில் வைத்துக் கொண்டு, ஒரு பெரிய தலையணையைக் கொண்டு தன் முதுகையும், தலையையும், தோள்களையும் மறைத்துக் கொள்வான்.

வெஸுவியஸ் மலையோ தனது நாசவேலைக்கு ஆயத்தமாகும். எங்கள் கொல்லையில் பாதையோரமாக இருமருங்கும் நெருங்கியபடி ஆப்பிள் மரங்கள் இருந்தன. அதன் வழியாக பிளினி ஓடவேண்டும். மரங்களின் மீது நாங்கள் ஏறி உட்கார்ந்துகொண்டு அவன் மீது கல்மாரி பொழிவோம்.

இன்று கூட அந்த அற்புத விளையாட்டை ஞாபகப் படுத்திக் கொண்டால் எனக்கு மயிர்க் கூச்சல் ஏற்படும். நான் அக்காட்சியை இன்றும் காண்பது போன்ற உணர்ச்சி உண்டாகிறது. முதலில் பிளினி தனது பலகையில் வானத்திலும் கடலிலும் தென்படும் அசாதாரணக் காட்சிகளைப் பற்றிக் குறித்துக் கொள்ளுவான். அதற்குள் கல்மாரி கனப்பதால் அவன் துரிதமாக நடக்க வேண்டியிருக்கும். விநாடிக்கு விநாடி அவனது நடையின் வேகம் அதிகரிக்கும். பயம் அதிகமாகும். தோட்டம் முழுவதும் எதிரொலிக்குமாறு அவன் கதறுவான். கடைசியில் தள்ளாடி விழுந்து தலையணையடியில் அவன் தனிமையாக உயிர் துறப்பான்!

(4)

விளையாட்டுகள் மட்டுமன்றி பொழுது போக்குக்காக இன்னும் பலவிதமான ஆட்டங்களில் நாங்கள் சவனம் செலுத்தினோம்; மார்ச்சு மாதம் எங்கள் தந்தையோடு சென்று பக்கத்திலிருந்த "மாப்பிள்" மரங்களில் பாலெடுப்போம்; தகரத்தைச் செருகி வைத்து மாப்பிள் மரப்பால் கொட்டுவதை ஒவ்வொரு நாளும் கவனிப்போம். அந்தப் பாலைக் காய்ச்சிப் பாகாக்கித் தருவாள் எங்கள் நல்ல அன்னை. வசந்த காலம் வந்ததும், ஜில்லென்று குளிர்ந்திருக்கும் தண்ணீர்க் கிடங்குகளில் வெறுங் கைகளை விட்டுத் தவளை முட்டைகளை எடுத்து ஜாடிகளில் போட்டு வைப்போம். அவை அங்கே வால்முளைத்து வளர்வதைக் கண்ணாரக் காண்போம். அவை ஜாடிக்குள் இடங்காணாமல் நெருக்கடிப்படும் பொழுது அவற்றை எங்கள் தோட்டத்து ஓடையில் களித்து வளர விட்டு விடுவோம். கோடைகாலத்தில் காடுகளில் பல செடிகளுக்கிடையில் சாவகாசமாகச் சுற்றித் திரிந்து பழம் பொறுக்கித் தின்போம். கடற்கரைக்குப் போகவோ பனிக்கட்டியில் சறுக்கி விளையாடவோ வசதியில்லாத குளிர்காலத்தில் சோளத்தை உமி போக்கி, சர்க்கரைப் பாகுடன் சேர்த்து

உருண்டை பிடிப்போம்; ஒரு உருண்டை திவ்வியமாக ஒரு மணி நேரம் வாயசை போட உதவும்.

வாசிக்கும் வழக்கம் எப்போதுமே உண்டு. வீட்டிலுள்ள இன்பப்பொழுது போக்கிலெல்லாம் அதுவே சிறந்தது. எப்போதாவது நண்பர்கள் வந்தால் விருந்து இருக்கும். நடனப் பள்ளிக்கூடம் என்பதை நாங்கள் கேட்டறியோம். அக்காலத்தில் எங்கள் சமுதாயத்தில் நடனம் செய்வது ஒழுக்கமற்ற காரியம் எனக் கருதப்பட வில்லை யெனினும் விவேகமற்றதாகவே கருதப்பட்டது. சிறுவர்கள் அதைப்பற்றி ஒன்றும் அறிந்ததில்லை.

மாலைப்பொழுதில் நாங்கள் வீட்டிலேயே தங்கியிருப்போம். குளிர்காலமானுல் வாசிப்போம். கோடையானுல் முற்றத்தில் விளையாடுவோம். குளிர்காலத்தில் விடுமுறை நாட்களில் என் தந்தையோ தாயோ எல்லோரையும் அழைத்து, சேர்ந்து பாடலாம் என்பார்கள். நாங்கள் அதைக் குடும்பக் கச்சேரி என்று கூறினுல் அப்பெயர் அதற்குப் பொருந்தாது. எங்களுக்கும் சங்கீதத்துக்கும் வெகு தூரம். இரவு உணவு உண்டபின் தட்டுகளைக் கழுவி விட்டு, சமயலறையில் நாங்கள் எங்கள் சங்கீதக் கச்சேரியை நடத்துவோம். ஒவ்வொருவரும் ஒரு பாட்டை ஒப்பிப்போம்; பொறுமை யிழவாத எங்கள் பெற்ருேரும் அச்சமயம் பாடாத மற்றவர்களும் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

அத்யாயம் 7

யாத்திரை வாழ்க்கை

(1)

இன்று போக்குவரத்து சாதனங்கள் சுலபமாக அமைந்திருப்பதால் கால் நடை யாத்திரை அதிகமாகப் பழக்கத்தில் இல்லை. அக்காலத்தில் ஒய்வொரு கோடையிலும் மெதுவாகப் பொறுமையுடன் பிரயாணிகள் வருவார்கள். அப்

போது எங்களுக்கிருந்த உற்சாகத்தை இப்போது கிராமங்களில் உள்ள சிறுவர்கள் கூட உணர முடியாது.

பிரயாணிகளில் முக்கியமானவர்கள் ஜிப்ஸிகள் எனப் படுவோர். அவர்களைத் திருடர்களெனச் சந்தேகத்துடன் நோக்குவதுண்டு. சோம்பேறிகள் என அவர்கள் மீதுவெறுப்பு ஏற்படுவதுண்டு. மகா கொடூரமான வியாதிகளையும் மூட நம்பிக்கைகளையும் அவர்கள் பரப்பினார்கள் என்று அஞ்சுவது முண்டு. அவர்கள் வருகிறார்கள் என்று கண்டு பயந்த சிறுவர்கள் மூச்சுத்திணற ஓடித் தெருவில் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருந்த வீடுகளில் பின் புறமாய் ஏறித் தெரிவித்தவுடன், இல்லங்களிலுள்ள பெண்டிர்கள் தெருக்கதவுகளையும் ஜன்னல்களையும் மூடித் தாளிட்டுச் சிதறிக் கிடக்கும் குழந்தைகளைத் தேடிப் பிடித்து வீட்டிற்குள் வைத்திருப்பார்கள்.

பிறகு, திரைகள் வழியாகவும், வைக்கோல் போட்டிருக்கும் அறைகளின் மேல் ஜன்னல் வழியாகவும், ஆப்பிள் மரங்கள் மீதிருந்தும் நாங்கள் ஜிப்ஸிகள் போவதைக் காண்போம். எந்தச் சில்லரை விஷயமும் எங்கள் கவனத்தினின்றும் தப்பாது. நோய்ந்த குதிரைகள், தூசிபடிந்த பழைய வண்டிகள், சிரித்துக்கொண்டு செல்லும் ஆண்கள், கறுத்து கைக்குட்டையைக் கட்டிக்கொண்டு செல்லும் பெண்கள், கால்களில் ஒன்றும் அணியாத, அழுக்குப்படிந்த சிறுவர்கள், அவர்கள் எங்களுக்குப் புரியாத பாஷையைப் பேசுவது முதலியவற்றை இமைகொட்டாது கண்டு பிரமிப்போம்.

மாலைப் பொழுதானதும் ஜிப்ஸிகள் ஓரிடத்தில் தீ மூட்டி அங்கேயே தங்க ஆரம்பித்தால் அவர்களைப் பார்ப்பதற்கு உண்டாகும் ஆவலைப் பெரியவர்களும் புறக்கணிக்க முடியாது என்று எங்களுக்குத் தெரியும். சில சமயங்களில், சமுதாயத்தில் ஒழுங்கும் யோக்கியதையும் நிலைத்திருக்கச் செய்யும் பொறுப்பை உணர்ந்து, சில சிறுவர்களின் தந்தைகள் அந்த

ஜிப்ஸிகள் இருக்கும் இடத்தை நெருங்காமல் தூர இருந்தே பார்க்கவேண்டுமென்று கருதுவார்கள். சில சமயங்களில் சுற்றிப் பார்க்கச் செல்லும்போது எங்களையும் பெரியவர்கள் அழைத்துச் செல்வார்கள். அத் தருணங்களில் நாங்கள் எவ்வளவு ஆனந்தமடைந்திருக்கிறோம்! ஜிப்ஸிகளின் பாபச் செயல்களையும் சோம்பல் வழிகளையும் எங்களுடைய பெற்றோர்கள் கண்டித்திருந்தாலும், புதிதாக வந்தவர்களைக் காண்பதில் எங்களுக்குண்டாகும் மகிழ்ச்சியை அக் கண்டனம் மட்டுப் படுத்தியதில்லை.

(2)

சிவப்பு இந்தியர்களுக்கு ஜிப்ஸிகளைக் காட்டிலும் உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். சிவப்பு இந்தியர்கள் மற்றவர்களைப்போல அந்நியர்கள் அல்ல, அவர்கள் சுதேசிகள் என்ற உணர்ச்சி எங்களிடையே எவ்வாறோ பரவியிருந்தது. சுற்றுப்புறத்தில் அவர்கள் குடியேறியிருந்த பகுதிகளிலிருந்து அவர்கள் வருவார்கள். அவர்களிடமிருந்து என் தாயார் எப்போதாவது ஓலைக்கூடை ஒன்றை விலைக்கு வாங்குவாள். கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு, பட்டணத்திலிருக்கும் உறவினருக்கு அதைப் பரிசாக அளிக்கலாம் என்பது அவளுடைய எண்ணம். செலவும் அதிகமில்லை. உறவினருக்கும் அது புதுமாதிரியான வெகுமதியாக இருக்கும். சிவப்பு இந்தியர்களுடைய சமுதாய வாழ்க்கையைப் பற்றி அவர்களுடன் பேச என் தந்தை விரும்புவார். உள்ளத்தைக் கிள்ளும் அவர்களுடைய சரித்திர வரலாற்றைப் பற்றி அவர் குறிப்பிடும்போது அவர்கள் உற்சாகப் படுவதில்லை யென்பதில் என் தந்தைக்குச் சிறிது ஏமாற்றம் தான்.

(3)

இன்னும் பல நாடோடிகள் நாங்கள் வசித்து வந்த கிராமத்துக்கு வந்தார்கள். அவர்கள் வரும் சமயத்தில் எங்க

ளுக்கு அதிக உற்சாகம் ஏற்பட்டதில்லை யெனினும், அதைப் பற்றிப் பிறகு யோசித்தால் இன்பமாகத் தான் இருக்கும். கத்திரி சாணை பிடிப்பவர்கள் எப்போது தங்க ளுடைய பெரிய உருண்ட கற்களை நீலக்குன்றுக்கு எடுத்து வந்தாலும் பணம் அதிகமாகச் சம்பாதிப்பார்கள். சாணைக் கற்களைத் தாங்கி வரும் வண்டிகளிலிருந்து கிளம்பும் மணி யோசை இப்போதும் அடிக்கடி என் காதுகளில் ஒலிப்ப துண்டு. அது இன்றும் ஸ்காட்லந்து சமவெளிகளில் திரியும் ஆடுகளின் கழுத்துக்களில் தொங்கும் மணிகளின் ஓசை போலிருக்கும். அந்த மணிகளை இன்றும் லண்டனிலுள்ள ஓட்டை உடைசல் கடைகளிலும் இங்கிலாந்தின் நாட்டுப் புறங்களிலுள்ள சந்தைகளிலும் காணலாம்.

தீவிர பக்திவாய்ந்தவர்கள் சிலரும் எங்களுடைய வீடு களுக்கு வருவதுண்டு. அவர்களைப்பற்றி நாங்கள் அவ்வள வாகப் பரபரப்பு அடைவதில்லை. மதுபான விலக்குச் சங்கத் தைச் சேர்ந்தவர்கள், சுவிசேஷ போதகர்கள் முதலியோர் விஜயம் செய்தனர். பல ஆண்டுகள்வரை ஒவ்வொரு கோடையிலும் நீளத் தாடியுடைய ஓர் ஒல்லியான மனிதர் எங்கள் வீட்டுக்கு வருவதுண்டு. "சுக பஸ்பம்" என்று தாம் கூறுவதை அவர் வழங்கினார். வெள்ளைக் காகிதத் துண்டுகள் மருந்துப் பொட்டலங்கள் போல மடிக்கப்பட்டிருக் கும். அவற்றைத் திறந்தால் ஒவ்வொன்றிலும் வேதத் திலிருந்து ஒரு செய்யுள் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். அச்செய்யுள் மனஆறுதலைக் கொடுக்கக் கூடியதாயிருக்கும். நான் அவரை ஞாபகத்தில் வைத்திருப்பது அம் மருந்துப் பொட்டலங்களால் என்று சொல்லமுடியாது. ஒரு நாள் நாங்கள் மறந்தாற்போல அவரை ஏளனம் செய்து சிரித்து, அவருக்குப் பின்னால் கிண்டல் செய்து விளித்தோம். அப் போது எனது பாட்டிக்கு வந்த கோபத்தை நான் மறக்க முடியாது. எங்களை வீட்டுக்குள் அழைத்தாள். தீர்க்கதரிசி எலிஷாவை வழுக்கைத் தலை என்று அழைத்துக் கேலி

செய்த சிறுவர்களின் கதையை எங்களுக்கு ஆத்திரம் தொனிக்கும் குரலில் அவள் எடுத்துரைத்தாள். வனத்தி லிருந்து வந்த இரு கரடிகள் அச்சிறுவர்களில் நாற்பத் திரண்டு பேரை அடியோடு அழித்து விட்டது எங்களுக்கு ஓர் எச்சரிக்கையாக விளங்கிற்று. நாங்கள் அதற்குப் பிறகு பெரியோர்களை ஏளனம் செய்யத் துணிவதில்லை.

(4)

வசந்த காலத்தில் தெருக்கள் உலர்ந்ததும் ஸிரியா, அர்மீனியா ஆகிய கீழ் நாடுகளைச் சேர்ந்த சிறு வியாபாரிகள் வருவார்கள். அவர்களைக் கண்டுவிட்டால் எங்களுக்குச் சந்தோஷம் தாங்காது. அநேகமாக அவர்கள் நடுத்தர வய துள்ள மாதர்களாக இருப்பார்கள். இருபுறமும் இடுப்பில் துணி யால் கட்டி முடித்துள்ள மூட்டையொன்றை வைத்துக் கொண்டு அவர்கள் தனியாகப் பிரயாணம் செய்வார்கள். கறுத்த முடிமீது அவர்கள் சிவந்த கைக்குட்டைகளைக் கட்டிக் கொண்டிருப்பார்கள். காதுகளில் கம்மல்களும், கழுத்தில் பிரகாசமான கற்களால் செய்யப்பட்ட மாலைகளும் அணிந் திருப்பார்கள்.

மெயின் கடற்கரை யோரமாயுள்ள கிராமங்களுக்கு இருபது ஆண்டுகளாக விஜயம் செய்துவந்த ஒரு மாது இருந்தாள். அவளுடைய பெயர் மேரி கிறிஸ்மஸ். அவள் அழகி. உயரமாகவும் பருத்துமிருப்பாள். அவளுடைய குணமும் உதாரமானது. மிகவும் சுறுசுறுப்பானவள். கட்டுக் கடங்காத ஊக்கமுடையவள். கனத்த மூட்டையை இடுப்பில் வைத்துக்கொண்டு நாட்டுப்புறச் சாலைகள் வழியாகப் பல மைல்கள் நடந்து செல்வாள். சில சமயம் அடாத மழை பெய் தாலும், தங்கமாட்டாள். இரவுப் பொழுதில் எந்த விவசாயி யாவது வேண்டா வெறுப்புடன் அநுமதித்தால் அவனுடைய இல்லத்தின் வைக்கோற்போரில் படுத்து உறங்குவாள். அநேகமாக, பத்து நிமிஷங்கள் வரை வீட்டிலுள்ளவர்களோடு

பேசுவதற்கு அவளுக்கு வாய்ப்பு உண்டானால், வீட்டிலேயே ஓர் அறையில் படுத்துக்கொள்ள அவளுக்கு அநுமதி கிடைத்துவிடும். அவள் தன்னாட்டைப்பற்றிப் பெருமிதத்தோடு கூறியகதைகள் நூற்றுக்கணக்கான மெயின் சிறுவர்களுக்கு ஞாபகத்திலிருக்கும். வாங்குவதற்கு உத்தேசமில்லே என்றாலும் பலருக்கு அவள் தனது மூட்டையிலிருக்கும் சாமான்களைப்பிரித்து உற்சாகமாகக் காட்டுவாள்.

எனக்குப் பத்து வயது இருக்கும்போது மேரி கிறிஸ்மஸ் எங்களுடைய கிராமத்துக்கு வந்தாள். கிராமத்திலுள்ள ஒரு மாதைச் சில்லரை கொடுக்காமல் ஏமாற்றியதாக அவள் மீது குற்றம் சாட்டி, அவளை என் தந்தையிடம் அழைத்து வந்தார்கள். என் தந்தையோ அவளை உடனே விசாரித்து, அவள் நிரபராதியெனத் தீர்ப்புக்கூறிவிட்டார். அது முதல் அவள் எங்களுடைய சிநேகிதை யாகிவிட்டாள். எங்கள் வீட்டிலும் தங்குவாள். வருஷா வருஷம் நாங்கள் அவளுடைய வருகையை எதிர்பார்த்திருப்போம்.

அவளால் நாங்கள் அடைந்த ஆனந்தத்தை மிகைப் படுத்திக் கூறமுடியாது. கடல்கடந்திருந்த அவளுடைய குழைந்தகளுடைய எதிர்காலத்தைப்பற்றி அவள் கொண்டிருந்த எண்ணங்கள் எங்களுடைய அபிலாஷைகளைத் தூண்டி விட்டன. அவள் சலிக்காமல் சுற்றித்திரிவதும் சோர்வில்லாமல் இருப்பதும் கண்டு நாங்களும் நன்மை செய்வதில் ஊக்கத்தைத் தளரவிடக்கூடாது என்று அறியலானோம். முன்னோர் வழிவந்த அவளுடைய சமயக்கோட்பாடுகளின் அழகுவாய்ந்த பழக்க வழக்கங்களை யறிந்தோம்; புனிதர்களைப் பற்றியும் புனிதர் தொட்ட பண்டங்களின் புதுமைத் திறனைப் பற்றியும் அவள் சொன்ன கதைகளைக் கேட்டோம். அத்தகைய புனிதப் பண்டம் ஒன்று அவள் கழுத்திலும் இருந்தது. நாங்கள் சிறுவயதில் கற்ற சமயக்கல்வியின் கடுமையை இவையெல்லாம் மென்மையாக்கி அழகு

படுத்தின. வருஷங்கள் ஆக ஆக அவள் சுபிட்சமடைந்து, இடுப்பில் மூட்டை சுமந்ததற்குப் பதிலாகக் கைவண்டி வாங்கிக்கொள்ளுமளவு அவள் முன்னேற்றமடைவதை நாங்கள் கண்டோம். அவளுடைய பிள்ளைகளையும் அமெரிக்காவுக்கு அழைத்து வந்தது எங்களுக்குத் தெரியும்.

1904-ம் ஆண்டில் பாங்கர் என்னும் நகரிலுள்ள ஆஸ்பத்திரியில் அவளுக்கு ஒரு ரண சிகிச்சை செய்யப்பட்டதும் அவள் உயிர்துறந்தாள். இன்று அதே நகரில் அவளுடைய குமாரனும் பேரர்களும் அவளுடைய வியாபாரத்தை நடத்தி வருகிறார்கள். ஸிரியாவின் சரிகைகளை அவளைப் போலவே அவர்களும் விற்று வருகிறார்கள். அவர்களுடைய முகங்களிலும் அவள் முகத்தில்கண்ட மேன்மையும் பெருந்தன்மையும் பிரகாசிக்கின்றன. அவளுடைய வம்சத்திற்கு அவளைப் பற்றியிருந்த பெருமையை மெயின் கடற்கரைவாசிகள் அனைவரும் ஆமோதிப்பார்கள். மெயின் கடற்கரையோரத்தில் வசித்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அவளை அறிந்திருந்தார்கள். அக்காலத்தில் சிதறிக்கிடந்த கிராமங்களில் வசித்து வந்தவர்களின் வாழ்க்கையைப் பிரகாசிக்கச் செய்த பிரயாணிகளில் அவளுக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். அவர்கள் அவளை மறக்கவும் பல ஆண்டுகள் ஆகும்.

அத்தியாயம் 8

உறவினர்கள்

(1)

மாஸச்சூஸெட்ஸில் குவின்ஸி என்ற இடத்தில் எனது உறவினர் இருவர் வசித்துவந்தனர். அவர்கள் ஒவ்வொரு வருஷமும் எங்கள் வீட்டுக்கு வந்தனர். அடிக்கடி வெகுமதிகள் அனுப்பினர். அப் பரிசுகள் வந்தால் ஏதாவது இடைஞ்சலும்

அநேகமாக ஏற்படும். அவர்கள் எங்களுடைய வாழ்க்கையிலும் மனதிலும் நிரம்ப இடம் பெற்றிருந்தனர் என்று சொல்லலாம். என் தந்தையின் அத்தை மரியாவும் அவளது கணவர் ஜானும் அவ்விரு உறவினர் ஆவர். ஒவ்வொரு வருஷமும் ஆகஸ்ட் மாதத்தில் பாஸ்டன் படகில் வந்து எங்களுடன் இரண்டு வாரங்கள் கழிப்பார்கள் அவர்கள். மரியா ஓர் அழகிய மாது. அவளது வருமானம் குறைவு என்பது அவளுடைய தோற்றத்தில் தெரியாது. தனது ஆடையில் அவளுக்கு மிகுந்த அக்கறை உண்டு. ஒருவித மதிப்புடனும் பெருந்தன்மையுடனும் அவள் நடந்துகொள்வாள்.

ஜான் தாத்தா உயரமாயிருப்பார். தலை வழுக்கை. மீசை பயங்கரமாயிருக்கும். எப்போதும் அவர் தம் கைகளைப் பின் புறம் கோர்த்துக்கொண்டு, ஒரு விசேஷமும் இல்லையென்றாலும், "அது சரி, அது சரி" என்று ஆத்திரத்துடன் கூறிக்கொண்டிருப்பார். வாஷிங்டனில் அடக்கம் செய்வதற்குரிய பெட்டிகள் செய்யும் ஒரு கம்பெனியில் பிரயாணம் செய்யும் பிரதிநிதியாக அவர் வேலைபார்த்துவந்தார். அந்த வேலையைப் பற்றி அவர் அதிகமாகக் கவலை எடுத்துக் கொண்டதில்லை. தமது வியாபாரத்தின் ஏற்ற இறக்கம் பற்றி அவர் அனுயாசமாக என் தந்தைக்கு விளக்குவதைக் கேட்டால், ஏதோ உருளைக்கிழங்கு, முட்டை போன்ற சாதாரண வஸ்துக்களைப்பற்றி அவர் பேசுவதாகத் தோன்றும்.

இடைக்கிடையே ஜான் தாத்தாவின் வாஷிங்டன் கம்பெனியிலிருந்து ஒரு பெரிய பெட்டி வந்துவிடும்! அப்போது என் தாயாருக்கு என்ன செய்வதென்று புரியாது. பெட்டியில் பட்டுத் துணித்துண்டுகள், சரிகைத் துண்டுகள் இருக்கும். எல்லாம் மாதிரித்துண்டுகள். பன்னிரண்டு அங்குலம் சதுரமாயிருக்கும். பல்வேறு வகைகளில் அவற்றை உபயோகிக்கலாம் என்று என் அன்னை யோசிக்கத் தொடங்கி விடுவாள்.

அத்துண்டுகளைச் சவம் அடக்கம் செய்யும் பெட்டிகளை ஜோடிக்க உபயோகிக்க வேண்டும். இந்த விஷயம் சிறுவர்களாகிய எங்களுக்குத் தெரியாது என்று என் பெற்றோர்கள் நினைத்து வந்தனர். ஆனால் ஒரு நாள் என் தந்தை அசந்தர்ப்பமாக அதைப்பற்றிய ரகசியத்தை வெளியிட்டுவிடவே இனி ரகசியத்தை மறைப்பதில் அர்த்த மில்லையென்று என் அன்னை எல்லாவற்றையும் விளக்கிக் கூறினாள். உடனே குடும்பத்தில் ஆலோசனை தொடங்கிற்று. அதில் வயதான சிறுவர்களும் கலந்து கொண்டனர்.

ஒரு பக்கம் எங்கள் உறவினருடைய உதாரகுணம்; அவர்கள் அனுப்பியுள்ள வெகுமதிகளை நன்கு உபயோகித்துக் கொள்ளலாம் என்ற யோசனை. எங்களைப் பொறுத்த வரை அத்துண்டுகள் எவ்வித அசாதாரண உணர்ச்சியையும் உண்டாக்கவில்லை. மற்றொரு பக்கத்திலோ அத்துண்டுகளைச் சவப்பெட்டிக்கு உபயோகப் படுத்துவதாயிற்றே என்ற அர்த்தமற்ற கலக்கம். கடைசியில் புத்திசாலித்தனமாக அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமே வெற்றியடைந்தது.

ஆகவே சவப்பெட்டித் துணியை நாங்கள் வெவ்வேறு விதமாக உபயோகிக்கலானோம். இரண்டு வெள்ளைத் துண்டுகளைக் கொண்டு குழந்தைக்குக் குல்லா தைத்தோம். சரிகைத்துண்டுகளை வைத்து கோடைக்கால உடுப்பு தைத்தோம். அக்கிராமத்திலேயே எங்களுடைய பொம்மைகளுக்குத்தான் சிறந்த உடுப்புகள் இருந்தன. கிறிஸ்மஸின் போது எங்களுடைய நண்பர்களுக்கு வெகு அழகான பைகளும், குண்டூசி குத்திவைக்கும் மெத்தைகளும் பணச் செலவின்றி நாங்கள் பரிசளித்து வந்தோம்.

(2)

என் அன்னைக்கு ஓர் ஒன்றுவிட்ட சகோதரி இருந்தாள். நாங்கள் அவளை டோ என்று அழைப்பதுண்டு. அவ

ளுடைய கணவர் கிராமத்துத் தபாலதிகாரி. அவளுக்குக் குழந்தை இல்லே. அவளுடைய உதாரகுணத்துக்கு எல் லேயே கிடையாது. எங்களுக்கு அவள் மீது பிரியம் அதிகம். அவள் எப்போதுமே தின்பண்டங்களைத் தனது மேலா டைக்கடியில் பொதிந்து எடுத்துக்கொண்டு வருவாள். சனிக்கிழமை தோறும் அவள் மாலையில் விஜயம் செய்த தால், எங்காவது வெளியே அழைத்துச் செல்லுமாறு நாங் கள் எங்களுடைய அன்னையைத் தொந்தரவு செய்வது கின்றது.

ஒராண்டிற்கிருமுறை அவள் எங்களைத் தன்னுடைய இல்லத்துக்கு அழைப்பாள். குடாக்கடலுக்கருகே சிவப்புக் கற்களால் கட்டப்பட்ட அவளுடைய வீடு இருந்தது. நன்ரு கத் தேய்த்துக் குளித்துவிட்டு, சிறந்த உடுப்புகள் அணிந்து நாங்களாகவே அவளுடைய வீட்டுக்குச் செல்வோம். காலே யில் ஒன்பது மணிக்குச் சென்ருல் இரவு போஜன நேரத் துக்குத்தான் திரும்புவோம்.

அவளுடைய வீட்டுக்குச் செல்வதற்குத் தூண்டு கோலாகப் பல விஷயங்கள் இருந்தன. ஒன்று அங்கே அபரிமிதமாக உருளேக்கிழங்குச் சீவல் கிடைக்கும். அந்த ஊரிலேயே அவளிடம்தான் உருளேக்கிழங்கு சீவு கருவி இருந்தது. அதை அவள் சமையலறையிலுள்ள மேஜை மீது பொருத்தி வைத்து, உருளேக்கிழங்குகளேக் கழுவித் தோலே நீக்கி அதன் மீது வைத்து, தனது விரல்களால் அமுக்கி லாவகமாகச் சீவுவாள். மெல்லிய சீவல்கள் விழும். அவற்றைக் கொதிக்கும் எண்ணெயில் இட்டுப் பிறகு காகிதத்தில் சுற்றிக் கொடுப்பாள்.

சிறுவர்களாகிய எங்களுடைய வாழ்க்கையில் அச்சமயத் தில் ஒருவிதக் கட்டுப்பாடும் இல்லே. இஷ்டப்படி நாங்கள் அதைத தின்போம், வயிறு நிறையும் வரை.

அதே போல எங்கள் உள்ளங்களுக்கும் டோவின் இல்லத்தில் அரிய விருந்து கிடைத்தது. அதுவும் கட்டுப்பாடில்லாமல் களிப்போடு உண்ட விருந்துதான். அவளிடம் ஒரு புஸ்தகம் இருந்தது. அதன் நீளம் இரண்டு அடி. அகலம் ஒன்றரை அடி. மகாபயங்கரமான கதைகள் அப்புஸ்தகத்தில் அடங்கியிருந்தன. தரையில் அப்புஸ்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு, நாங்கள் நிறைந்த வயிற்றுடன் படுத்துக் கொள்ளுவோம். எங்களுள் ஒருவன் உரக்க அக்கதைகளை வாசிப்பான். எல்லோரும் புஸ்தகத்திலுள்ள திடுக்கிடத்தக்க படங்களைக் கண்டு ரசிப்போம். சாப்பிட்ட தட்டுகளைக் கழுவுவதற்குக் கூட டோ எங்களுடைய உதவியை நாடமாட்டாள். அவள் அவற்றைச் சுத்தம் செய்துகொண்டிருக்கும்போது நாங்கள் அக்கதைகளைக் கேட்டுப் பிரமிப்படைவோம். எங்கள் வாழ்க்கை வெறும் சாதாரணமான வாழ்க்கையே என்று நினைத்துக் கொள்வோம். நேரம் போவதே தெரியாது.

(3)

கரோலின் அத்தை எங்களுடைய மற்றொரு பந்து. டோவை விட அவள் எங்களுக்குத் தூரபந்து. மணத்தின் மூலம் கூட எங்களுடன் அவளுக்கு நெருங்கிய தொடர்பு இல்லை. அவள் வீடு எங்கள் வீட்டுக்குச் சமீபத்தில் இருந்தது. அது ஆடம்பரமான தூண்களும், அழகான வேலைப்பாடுகளும் நிறைந்த கதவுகளும் கொண்ட ஓர் உன்னத வீடு. அவள் குட்டையாகவும் மிகவும் சிறிதாகவும் இருந்தாலும், அவளுடைய கண்கள் குறிப்பிடத்தக்கவை. சாம்பல் நிறமான அக்கண்கள் ஒரு மகாமுனியுடைய கண்களைப் போலப் பிரகாசித்தன.

மற்றெல்லாவற்றையும் விட அவளது ஆத்மீக சக்தி விஷயமாக எனக்கு அவளை நன்கு தெரியும். அதற்காகவே நான் அவளை ஞாபகத்தில் வைத்திருக்க விரும்புகிறேன்.

வீட்டு வேலைகளைப் பார்ப்பதில் அவள் சாமர்த்தியசாலி எனினும் அதிலேயே அவள் திருப்தியடைந்து விடுவதில்லை. அவ்வேலைகளை அவள் விரைவில் செய்து முடிப்பாள். அவளுடைய மனதும் ஆத்மாவும் ஒழுங்கான அமைதியைப் பெற அவளுடைய வீடு ஒழுங்காகவும், சீருடனும் அமைந்திருக்க வேண்டியதாயிருந்தது. வீண் நுணுக்கமோ அனுவசியப் படபடப்போ அவளிடம் காணமுடியாது.

நான் பெரியவளாக வளர்ந்து யௌவனத்தில் சலசலப்பை உணர ஆரம்பித்தபோது வேறு எங்கேயும் விட அவளுடைய இல்லத்தில் தான் சகஜமாகப் பேசவும் பழகவும் சாத்தியமாயிருந்தது. அவ்வப்போது மாறும் அபிலாஷைகளைப் பற்றி விவரித்து நான் அனுயாசமாகப் பேச முடிந்தது. நான் ஏழு சிறுமிகளில் ஒருத்தி என்பதையும், எனக்குக் குறிப்பிடத்தக்க சாமர்த்தியம் ஏதும் இல்லையென்பதையும் நான் வீட்டிலிருக்கும்போது உணர்ந்தேன். ஆகவே என்னுடைய கனவுகள் மங்கிவிடும். ஆனால் அவளுடன் இருக்கும்போது என்னுடைய எதிர்காலம் எவ்வளவு முக்கியமான தென்பதை அச்சமின்றி வர்ணிப்பேன்.

பல வருஷங்கள் வரை அவள் எனக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் மத விஷயங்களில் உபாத்தியாயினியாக விளங்கினாள். "இளைய கிறிஸ்தவர்களுக்கான பொக்கிஷம்" என்ற சுவையற்ற சிறு நூலை ஒவ்வொரு வாரமும் நாங்கள் ஞாயிற்றுக் கிழமையன்று வாசித்து பக்தி மார்க்கத்தைப் பற்றி அறிந்து வந்தோம். அவள் அதை விளக்கியதால் எங்களுக்குப் பிரத்தியேகமான ரசனை அதில் உண்டாயிற்று.

பல வருஷங்கள் வரை அவள் ஒரு நூதன வழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தாள். அவளிடம் மாணவர்களாயிருந்தவர்களை அவள் ஆண்டின் கடைசிநாளன்று தன்னைக் காண வரச் சொல்லுவாள். அம்மாதிரி முதல் தடவையாக நான் பன்னிரண்டு வயதாகி இருக்கும்போது 1899-ம் ஆண்டில்

அங்கு சென்றேன். அன்றைய நிகழ்ச்சியை நான் மறக்க முடியாது. அன்றிரவு கடிகாரத்தில் எட்டரை மணியான தும் நாங்கள் படுக்கப் போகுமுன் எங்களுள் ஒவ்வொருவரிட மும் ஒரு பென்ஸிலேயும் ஒரு காகிதத்தையும் கொடுத்தாள்.

எங்களுக்கு நடுவே நின்று கொண்டு அவள் உத்தரவிட் டாள். "எழுதுங்கள் டிஸம்பர் 31, 1899 என்று இன்றைய யத் தேதியை எழுதுங்கள். நீங்கள் மறுபடியும் இம்மாதிரி எழுதமாட்டீர்கள். ஒரு நூற்றாண்டு கடந்து விட்டது. ஒரு புதிய நூற்றாண்டு ஆரம்பமாகிறது," என்றாள் அவள்.

அவளுடைய உத்தரவுக்குப் பணிந்து எனது விரல்கள் எழுதும்போது எனக்கு உண்டான உணர்ச்சியை இன்றும் உணர்கிறேன். அவளுடைய வார்த்தைகளில் தொனித்த பயபக்தியும், அவள் கூறிய விதமும் எங்களுக்குப் பயத்துக்கும் மேலானதோர் உணர்ச்சியை உண்டாக்கிற்று. நூற்றாண்டு கள் கழிவதன் மர்மம், காலமற்ற பரப்பிரம்மத்துக்கும் காலத் துக்குமுள்ள சம்பந்தம், நாங்கள் எல்லோரும் எவ்வளவு முக்கியத்துவம் அற்றவர்கள் — இந்த எண்ணங்கள் எளிதில் புலனாகாதவையாக இருக்கலாம். ஆனால் அந்த அமைதியான அறையில் நாங்கள் அவற்றை ஓரளவு கிரஹித்தோம்.

வருஷா வருஷம் நடந்த இச்செய்கையின் உள்ளர்த் தத்தை நாங்கள் உணரலாயினோம்: அப்போது இன்னும் முக்கியமான தொரு விஷயம் எனக்குப் புரிந்தது. எனது அத்தை கரோலின் கடவுளிடம் அஞ்சவில்லை; அவரை நேசித்தாள் என்பதை நான் அறிந்தேன். முப்பது வருஷங் களுக்கு முன்னால் நாங்கள் அறிந்த மதத்தைப் பின்வரும் அத்தியாயங்களில் விவரிக்கிறேன். அதிலிருந்து நான் கரோலின் விஷயத்தில் அறிந்த உண்மை எத்தகைய அதிர்ச்சியை உண்டாக்கக் கூடியது என்பதை ஓரளவுக்கு உணரலாம். இந்த உண்மையை அவள் ஒருத்தியிடம்தான் நான் கண்டேன். கடவுளிடம் பயம் இருக்கவேண்டுமென்

பதே நாங்கள் தினமும் கற்ற பாடம். இப்போதே ஏதாவது பெறுவதற்கோ அல்லது மரணத்துக்குப்பின் கிடைக்கும் மோட்சத்துக்கோ அன்றி, கடவுள் நேசிக்கத் தகுந்தவராத லால் அவரை நேசிக்கவேண்டுமென்பது நாங்கள் அக்காலத் தில் நினைக்க முடியாத கருத்தாகும். எனினும் கடவுளை நேசிக்கவேண்டுமென்று என் அத்தை அவரை நேசித்தாள். நன்மைபயக்கும் இந்த எளிய உண்மையை நிதானமாக நான் உணர்ந்தேன்.

இரண்டாம் பாகம்

பியூரிட்டன் சம்பிரதாயம்

அத்தியாயம் 1

நீலக்குன்றின் புராதன தேவாலயம்

(1)

நீலக்குன்றில் முதன் முதலாக வந்து குடியேறினவர்களுக்கு அநுமதி அளிக்கும்போது மாஸச்சூஸெட்ஸ் கோர்ட்டு ஒரு முக்கிய நிபந்தனையை விதித்திருந்தது. அது பின்வருமாறு: ஒவ்வொரு ஊரிலும் பொதுவாக எல்லோரும் கடவுளை வழிபடுவதற்காக, குடியேறினவர்கள் ஓர் ஆலயத்தைக் கட்ட வேண்டும். அங்கே ஒரு புராட்டாஸ்டன்ட் மதகுருவை அமர்த்தவேண்டும். அவருக்கு கண்ணியமாகவும் சுகமாகவும் வாழ்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டும்.

குடியேறினவர்கள் வந்த ஓரிரண்டு ஆண்டுகளுக்கெல்லாம் கடவுளை வழிபட ஆலயத்தைக் கட்டி விட்டார்கள். ஆனால் முப்பத்தேழு ஆண்டுகள் வரை அவ்வூரிலேயே தங்க ஒரு புராட்டஸ்டன்ட் மதகுருவை அமர்த்தவில்லை. 1785-ம் ஆண்டில் மாஸச்சூஸெட்ஸ் கோர்ட்டு அதைப்பற்றி விசாரிக்கத் தொடங்கி, ஓராயிரம் பவுன் அபராதம் விதித்தது; நிலத்தையும் பறிமுதல் செய்வதாக பயமுறுத்தியபோது தான் நீலக்குன்று மக்கள் ஏன் அப்பொறுப்பை நிறைவேற்றவில்லை யென்பது தெளிவாயிற்று. அந்த அபராதத்தை நீக்குமாறு அவர்கள் வேண்டிக் கொண்டார்கள். பதினேழு ஆண்டுகளாக ஒவ்வொரு கோடையிலும் ஒரு போதகரை அவர்கள் அமர்த்தி வந்ததாகவும், ஒவ்வொரு குளிர்காலத்திலும் ஓர் உபாத்தியாயரை அமர்த்தி வந்ததாகவும், " கடந்த

போர்க்காலத்தில்தான் அப்படிச் செய்யவில்லை என்றும் அவர்கள் முறையிட்டார்கள்.

1795-ம் ஆண்டில் ஒரு மதகுருவை சாசுவதமாக அமர்த்திக்கொள்ள அவர்கள் தீர்மானித்தார்கள். அதற்கு முந்திய கோடையில் அவ்வூரில் வந்து போதித்த ஜானதன் பிஷர் என்பவரை அவர்கள் அழைத்தார்கள். அவர் மாஸச்சுஸெட்ஸில் பிரெய்ன்ட்ரி என்ற ஊரினர்.

இளைஞரான பிஷர் அதற்குப்பின் ஒன்பது மாதங்கள் வரை மதகுரு வேலையை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த ஒன்பது மாதங்களில் அவர் ஹார்வார்ட் கல்லூரியில் தமது வேதசாஸ்திரப் படிப்பைப் படித்து முடித்தார். 1792-ம் ஆண்டில் அவர் அங்கு படித்துப் பட்டம் பெற்றவர். 1796-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் அவர் நீலக்குன்றுக்கு வந்து தமது மத போதகர் வேலையில் ஈடுபட்டார். தமது வீட்டையும் கட்டிக்கொண்டார்.

(2)

சங். ஜானதன் பிஷரின் சுபாவம் சாசுவத குணம் படைத்தது. நான் பிறப்பதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே அவர் காலமாகிவிட்டாரென்றாலும், அவருடைய செல்வாக்கு எங்களிடையே நிலைத்திருந்தது.

அவர் பல வழிகளில் சமர்த்தர். உழைப்பதில், பண விஷயங்களில், அறிவில், ஆத்மீக ஞானத்தில், சமுதாய வாழ்க்கையில் அவருடைய விவேகம் பிரகாசித்தது. அவருக்குத் தளராத ஊக்கம் இருந்தது. அவர் நீலக்குன்றுக்கு வருவதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன் மணம் செய்துகொண்டார். தம் மனைவியுடன் நீலக்குன்றுக்கு வந்ததும் ஓர் அழகிய வீட்டைக் கட்டிக்கொள்ள ஆரம்பித்தார். வீடு கட்டும் வேலையிலும் அவரே ஈடுபட்டார். மேஜை, நாற்காலி முதலியவற்றையும் தாமே செய்து

கொண்டார். அவர் தயாரித்த கடிகாரம் ஐம்பது ஆண்டுகள் நிற்காமல் ஓடிற்று. ஒருதரம் கூடப் பழுதுபார்க்கும் அவசியம் ஏற்படவில்லை. அவ்வூரில் முதன் முதலாகக் காற்றாடி யந்திரத்தை அமைத்தவர் அவரே. அதைக் கொண்டு மரமறுக்கும் ஆலை ஒன்றையும் அவர் நிறுவினார். வயல்களி லிருந்து பெரிய கற்களை நீக்க ஒரு மிஷினையும், தொப்பி செய்வதற்காக வைக்கோலைச் செப்பனிட ஒரு மெஷினையும் அவர் தயாரித்தார். ஹீப்ரு நிகண்டு தயாரிப்பதில் அவர் பல ஆண்டுகள் ஈடுபட்டிருந்தார். சிறு மரத்துண்டுகளால் அவர் அச்சுத் தயாரித்து, தாமே பக்கங்களையும் அச்சிட்டுக் கொண்டார்.

அவர் விவசாயியும் கூட. ஒன்பது குழந்தைகள் அடங் கிய அவருடைய குடும்பத்துக்கு வேண்டிய உணவை அவரே பெரும்பாலும் உற்பத்தி செய்துகொண்டார். அவருக்குக் கணக்கில் நல்ல பாண்டித்யமிருந்ததால் கிராமத் தினருக்கு வேண்டிய "சர்வே" வேலையையும் அவர் கவனித்துக்கொண்டார். சர்வேக்கு வேண்டிய கருவிகளையும் அவரே கண்டுபிடித்துக் கொண்டார். தமது வீட்டுச் சுவர் களுக்காகப் படங்கள் தயாரிக்கவும் அவருக்கு நேரம் இருந்தது. நிலக்கண்ணாடி முன் உட்கார்ந்துகொண்டு தமது படம் ஒன்றை யும், அவர் மாணவராயிருந்தபோது இருந்தது போன்ற ஹார் வர்ட் கல்லூரியின் படமொன்றையும் வரைந்து வர்ணந் தீட்டினார்.

கையால் இத்தனை வேலைகளைச் செய்து வந்தாலும் அவருடைய படிப்பு பாதிக்கப்படவில்லை. தம் வீட்டில் ஒரு நாள் ஹீப்ரு பாஷையிலும் அடுத்த நாள் கிரேக்க பாஷை யிலும்பிரார்த்தனைகள் நடத்தினார். அவ்வப்போது வேதத்தின் லத்தீன், பிரஞ்சு மொழிபெயர்ப்புகளிலிருந்தும் வாசித்தார். அவருடைய ஹீப்ரு நிகண்டு இன்னும் சரியாக அச்சிடப்பட வில்லை. அவருடைய வாழ்க்கையிலேயே அது மகோன்னத சாதனையாக விளங்குகிறது.

பிற்காலத்தில் அவர் அரபுமொழியைக் கற்கத்தொடங்கினார். ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயத்தில் அவர் முதலில் இங்கிலீஷிலும் பிறகு ஹீப்ருவிலோ கிரேக்க பாஷையிலோ வேதத்தைச் சொல்லுவார்; அதனால் கேட்போர் மனத்தில் "பரந்த கல்வி பெறும்படியான ஊக்கம் பிறக்கும்" என்பார். சிறுவர்களுக்காக அவர் "வேதத்திற்கண்ட பிராணிகள்" என்ற நூலைத் தயாரித்து வெளியிட்டார். ஒவ்வொரு அத்தியாயத்தின் முதலிலும் ஒரு பிராணியின் படம் இருந்தது. அதற்கடியில் அப்பிராணியின் பெயர் இங்கிலீஷிலும், ஹீப்ருவிலும், கிரேக்க பாஷையிலும், லத்தீனிலும், பிரஞ்சிலும் கொடுக்கப்பட்டிருந்தது. பிறகு அப்பிராணியைப் பற்றிய வரலாறு தோன்றும். தமது குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு புஸ்தகமாகச் செய்யுள் புஸ்தகங்கள் எழுதி வைத்தார்; அவை அச்சாகவில்லை.

அத்தியாயம் 2

சங். பிஷரின் கடிதங்களால் ஏற்பட்ட நன்மைகள்

சங். பிஷர் கணக்கற்ற குறிப்புகளை ஒழுங்காகப் பிரித்து அட்டவணையிட்டு வைத்துப்போயிருக்கிறார். அவற்றில் பல தமது ஊரில் தவறு செய்தவர்களுக்கு எழுதிய கடிதங்களின் நகல்கள். அவற்றிலிருந்து ஊரின் வாழ்க்கையைப் பற்றிய பல நுணுக்கங்களை நாம் அறியலாம். அத்துடன் எல்லோரும் பயபக்தியுடன் நடந்து கொள்ளுமாறு அவருடைய செல்வாக்கு எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பதையும் தெரிந்து கொள்ளலாம். சிறிய குற்றங்களையும் சரிப்படுத்தாமல் அவர் விடமாட்டார். எந்தச் சச்சரவையும் தீர்த்து வைக்க முனையாமல் இருக்கமாட்டார்.

எபன் கார்ல்டன் என்பவர் மத உபாத்தியாயராயிருந்தார். அவர் தமது ஸ்தானத்தைப் பற்றிய உணர்வின்றி

1821-ம் ஆண்டில் இரு குதிரைகளில் எது அதிக வேகம் ஓடும் என்று ஒரு சிறிய பந்தயம் கட்டினார். அவருடைய மதகுரு, சங். பிஷர், அவரைக் கண்டித்துக் கடிதம் எழுதினார். கார்ல்டன் அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று ஆலயத்தில் எழுந்து நின்று தாம் செய்த தவறை ஒப்புக்கொண்டு, மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அவர் வாசித்த பத்திரம் சங். பிஷர் எழுதினது போலும். அது பின்வருமாறு:

''செப்டம்பர் மாதத்தில் ஒரு சனிக்கிழமையன்று சில குதிரைகளின் வேகத்தைப் பார்க்கும்போது மத உபாத்தியாயர் என்ற நிலைமையை நான் மறந்து ஒரு குதிரை மீது சிறு பந்தயம் கட்டினேன் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஒரு கிறிஸ்தவனுக்கு அது தகாதசெய்கை என்பதை நான் இப்போது தெளிவாக உணருகிறேன். என்னைச் சுற்றியிருப்போருக்குத் தவறு செய்ய அது தூண்டுகோலாயிருக்கும் என்பதையும் உணருகிறேன். என்னுடைய பாபச் செயலை நான் தாழ்ச்சியுடன் ஒப்புக்கொள்ளுகிறேன். நான் கடவுளுடைய மன்னிப்பைக் கோருகிறேன். நான் இந்த ஆலயத்துக்குத் தீங்கு இழைத்து விட்டேன். அதனுடைய மன்னிப்பையும் கோருகிறேன்.''

ஸ்ரீ இஸ்ரேல் வுட் என்பவர் ஒருவர் கோபத்தில் இன்ன பேசுகிறார் என்று தெரியாமல் தமது மத குருவைப் பொய்யன் என்று சொல்லிவிட்டார்; அவரும் கோயிலில் எழுந்து நின்று பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கவேண்டியவரானார். எல்லிஸ் என்றும் டிரவோர்ஜி என்றும் இரு சகோதரிகள்; தங்களுக்குள் பிணக்குக்கொண்டு சண்டையிட்டிருக்க வேண்டும்; அவர்கள் சண்டை அவர்கள் நண்பர்களுக்கு ஓர் இடையூறாகவும் மதம் என்ற பெயருக்கே இழுக்காகவும் இருக்கும் என்று கூறி அவர்கள் இருவரும் உடனே சமரசமாகப் போக வேண்டும் என்று மதகுரு பிஷர் வற்புறுத்தினார்.

ஸ்ரீமதி ஸூகே க்லே என்பவள் இளைஞர் கூட்டத்தைச் சேர்ந்தவர் போலும். 1829-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் தேதி அவளுக்கு ஒரு கடிதம் சென்றது. போதிய காரணமின்றி அவள் வெகு காலம்வரை தேவாலயத்துக்கு வரவில்லையாதலால், அவள் ஆண்டவனுடைய அரசிலிருந்து விலக்கப்பட்டாள் என்று தெரிவித்தது கடிதம். அவளுடைய மதகுரு அவளுக்கு மேலும் எழுதினர்: "ஆனல் அழியாத உன் ஆத்மாவின் எதிர்காலம் ஆபத்திலிருக்கிறது. மோட்சத்திலிருந்து நீ கடைசியில் விலக்கப்பட்டால் நீ உன் ஆத்மாவை அடியோடு இழக்க நேரிடும். பிறகு எப்போதும் இருள் சூழ்ந்த பிரதேசத்திலேயே அடைக்கப்பட்டிருப்பாய்."

அந்த எச்சரிக்கை ஸூகே க்லேயை கலக்கி விட்டிருக்க வேண்டும். கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முன், அவள் வணக்கத்துடன் தேவாலயத்தில் கூடியிருப்போர் முன்புவந்து, தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு, தனது மதகுரு எழுதிக் கொடுத்த மனத்தாபமுள்ள பத்திரத்தின் மூலம் மன்னிப்புக் கோரினள். அக்காலத்தில், ஒருவனுக்குத் தெய்வபக்தி குறைவாயிருந்தாலும், நாடக அம்சத்திற்காகவாவது தான் தேவாலயத்துக்குப் போகவேண்டுமென்று நினைத்திருக்கலாம்!

அத்தியாயம் 3

பரிசுத்த ஆவியைப் பற்றிய கதை

விஷயங்களைப் புரிந்து கொள்ளும் வயதாவதற்கு முன்பே திரித்துவத்தின் மூன்றாவது ஆளைப் பற்றி நான் அறிந்து கொள்ளவேண்டியதாயிற்று. 1893-ம் ஆண்டில் இலையுதிர் காலம் அது. என் ஆருவது பிறந்த நாள் நெருங்கியிருந்தது. எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் அன்னு ஹிங்க்லி என்பவள்

இருந்தாள். எனது பாட்டியைப்போல அவளும் பல ஆண்டு கள் கடற் பிரயாணம் செய்தவள். ஆனால் என் பாட்டியைப் போல வாழ்க்கையைப் பற்றிய நுணுக்கங்களை அவள் கிரகித் துக்கொள்ளவில்லை. பெரியவர்கள் எனப்படுவோரிடையும் மற்றவர்களிடமும் தீமை நிரம்பியிருந்ததையே கண்டு அவள் மனம் அழுந்தி, தான் உண்மைக்கும் ஊன்றுகோலாக விளங்க வேண்டுமென்று உறுதி பூண்டாள்.

அவள் சுவிசேஷத்தைத் தவருது வாசித்தாள். அதி லிருந்து அவள் கண்டிப்பையும் உக்கிரத்தையும்தான் நுகர்ந் திருந்தாள்; அவள் தான் எனக்கு முதன் முதலாக பரிசுத்த ஆவியைப் பற்றித் தெரிவித்தவள்.

நவம்பர் மாதத்தில் ஒரு நாள் மாலை அவளுடைய பேரர்க ளுடன் விளையாட அவள் வீட்டிற்குச் சென்றேன். உறைந்த பனி பெய்திருந்ததால் சிறுவர்கள் வெளியே விளையாட முடியா திருந்தது. வீட்டிற்குள்ளேயே ஏதாவது விளையாடுவதென்று யோசித்து, பிரிந்த ஆவி விளையாட்டு விளையாடுவதென்று தீர் மானித்தோம். அந்த யோசனை முதலில் எனக்கு உதித்த தால், அவர்களுக்கும் மேலாகப் பிரகாசிக்க நான் முனைந்தேன். சுவிசேஷத்தை வாசித்ததிலிருந்து என் சிறிய மனதில் ஒரு பெயர் தோன்றலாயிற்று.

நான் அவர்களை நோக்கிக் கத்தினேன்; "நீங்கள் பரிசுத்த ஆவியாய் இருக்க முடியாது. நான் பரிசுத்த ஆவியாக இருக்கிறேன். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று நான் கூறுகிறேன்."

மாடியிலும் கீழேயும் உள்ள அறைகள் வழியாக நாங்கள் ஓடிக்கொண்டிருந்தபோது, எங்களை அழைக்க அன்னு ஹிங்க்லியின் மணி ஒலித்தது.

"வெள்ளைத் துணிகளைக் கட்டிக் கொண்டு என்ன விளை யாடுகிறீர்கள், தாமஸ்?" என்று அவள் வினவினுள்.

"ஆவி விளையாட்டு" என்ருன் தாமஸ்.

" நூதன விளையாட்டுத்தான். ஒரே சத்தம்," என்ருள் அன்னு.

எனக்கு ஆறு வயதென்ருலும் அவளுக்கு விஷயத்தைச் சொல்லவேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. என்னைத் தைரியப்படுத்திக் கொண்டு நான் ஜாக்கிரதையாகச் சொன்னேன்: " அவர்கள் வெறும் ஆவிகள். ஆனுல் நான் பரிசுத்த ஆவி."

இப்போது எனக்கு வயது எழுபது ஆகிவிட்டாலும், அன்று அதற்குப் பிறகு என்ன நடந்ததென்பதை நான் மறக்கவே மாட்டேன். அந்த அறையின் காட்சி இன்றும் என்னைப் பயமுறுத்தும். என் வாழ்க்கையிலே முதன் முதலாக தவிர்க்கமுடியாத ஆபத்தை எதிர்பார்த்து நிற்கும் வேதனை எத்தகையது என்பதை நான் அறிந்தேன்.

அன்னு நிதானமாக வார்த்தைகளை யோசித்துப் பொறுக்கிப் பேசினுள். அவள் பேசும்போது என்னை மட்டும் தான் பார்த்தாள். நல்ல வேளையாக தனது ரத்தத்தில் உதித்த குழந்தைகளுக்கு இப் பாபச்செயலில் அவ்வளவு பெரிய பங்கு இல்லை யென்பதில் அவளுக்கு ஒரு வித ஆறுதல் இருந்தது போலும்.

" குழந்தாய், நீ பொல்லாத வார்த்தையைச் சொல்லி விட்டாய். நீ பெரியவளாக வளர்ந்த பிறகு, அது எவ்வளவு பொல்லாதது என்று உனக்குத்தெரியும். நீ சொன்னதை விடச் சிறிய விஷயங்களுக்காகக் கடவுள் மனிதர்களை அழித்திருக்கிருர். இப்போது, நீ மெதுவாக வீட்டுக்குப்போ. மன்னிக்குமாறு கடவுளை வேண்டிக்கொள்."

அவளுடைய வார்த்தைகள் கனத்த பாரங்கள் போல எனது சிறிய தேகத்தின் உள்ளே விழுந்தன. படிகள் இறங்கிச் செல்லும்போது அவ்வார்த்தைகள் என்கால்களைப்

பின்னி இழுத்தன. சமயலறைக்குச் சென்று வெள்ளைத் துணியை எடுக்கும்போது விரல்கள் மடங்க மறுத்தன. அன்னு வின் பேரர்கள் எனது மேல் உடுப்பை எடுத்துக் கொடுத் தார்கள். மௌனமாக அவர்கள் என்னை உடுத்து, கதவைத் திறந்து வழி விட்டார்கள்.

நிதானமாக என் சிறு பாதங்களை எடுத்து வைத்து அந்த உறைபனியில் நடந்து சென்றேன். எவ்வளவு மெது வாகப் போக முடியுமோ அவ்வளவு மெதுவாகச் சென்றால், தெரியாமல் செய்த குற்றத்துக்குக் கடவுள் என்னைத் தண்டிக் காமல் விடலாம் என்று அன்னுவின் எச்சரிக்கையை நான் அர்த்தம் செய்துகொண்டேன்.

கடைசியில் நான் என் வீட்டை அடைந்தேன். சமைய லறை வாசனை மூக்கைத் துளைத்தது. சனிக்கிழமையாத தால் என் தாயார் கடைத்தெருவுக்குச் சென்றிருந்தாள். என் தந்தை அவருடைய அறையில் இருந்தார். சிறுவர்கள் சுற்றி யிருந்திருந்தாலும் இருந்திருக்கலாம்; நான் அவர்களைக் கவனிக்கவில்லை.

அன்னுவின் ஆக்ஞையைப் பாதிதான் நிறைவேற்றி னேன். இன்னும் பிரார்த்தனையை ஆரம்பிக்கவேண்டுமே; தனியாக, ரகசியமாக பிரார்த்தனை செய்ய, மெதுவாக மாடியி லிருந்த என் அறைக்குச் சென்று, என் படுக்கைக்குப் பக்கத் தில் முழந்தாளிட்டேன். எனது தலையைக்குனிய வைக்க எனக்குத் தைரியம் வரவில்லை. கடவுளோ பரிசுத்த ஆவியோ என்னை அழிக்கப் போவதென்றால், வரப்போகும் அடியை உணர்ந்து கொள்ள விரும்பினேன்.

கடவுள் மீதிருந்த பயமும், எனது பாபச்செயலைப் பற்றி என் பெற்றோர் அறிந்தால் அவர்கள் கோபிப்பார்களே என்ற பயமும் என்னை விட்டு நீங்கப் பல மாதங்களாயின. பாபாத் மாவின் வழி கடினமானது தான். அதைவிடக்கடினமானது பாபத்தைப்பற்றி அறியாது பாபம் செய்பவனுடைய வழி.

அத்தியாயம் 4

ஆண்டவனது நாள்

அக்காலத்தில் நியூ இங்கிலாந்தின் கிராமங்களில் வசித்து வந்த புராட்டஸ்டன்ட் வகுப்பினருக்கெல்லாம் ஞாயிற்றுக் கிழமை சந்தேகமின்றி ஆண்டவனது தினமாக விளங்கிற்று. ஆனால் அன்று நாங்கள் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவு மிருந்தோம் என்று அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லிவிட முடியாது. ஞாயிற்றுக்கிழமை வருவது சனிக்கிழமை யன்றே தெரிந்துவிடும்; சனிக்கிழமைச் சாப்பாடு என்றும் ஒன்று போலவே இருக்கும். உருளைக்கிழங்கு நிறைந்த சட்டியில் துணிப்பையில் போட்டு வேகவைத்த கருவாடு தான் உணவு.

நாளை ஞாயிற்றுக்கிழமை என்பதற்கு எங்கள் குடும்பத் தில் இன்னொரு முன்னறிவிப்பும் ஏற்படும். எங்கள் குடும்பம் பெரிது. சாப்பாடு முடிந்ததும், இரண்டு மணிக்குக் குளிக் கத்தொடங்குவோம். வாரந்தோறும் குளிப்பது வழக்கம். இந்த நூற்றாண்டு வருமுன், நீலக்குன்றில் ஒருவர் வீட்டிலும் குளிப்பறை கிடையாது.

எனவே குளிப்பதென்பது சங்கடமான ஒரு வேலை. ஆனா லும் வாரந்தவறாமல் குளிக்கவேண்டும். குளிக்காமல் இருக்க லாம் என்ற நினைப்பு சீராக நடைபெறும் எந்தக் குடும் பத்திலும் உண்டாகவே உண்டாகாது. சமையலறையில் அடுப்பின் அருகே குளிக்க ஒரு தொட்டி இருக்கும். இது பரம்பரையாக வரும் வழக்கம். ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் பரம்பரை வழக்கத்தை இலேசாக மதிக்கமுடியாது.

நாங்கள் ஒவ்வொருவராக வெந்நீரில் குளிப்போம். உடம் பில் தேய்த்த சோப்பின் வாசனையும் அடுப்பில் கொதிக்கும் மொச்சையின் வாசனையும் கலந்து வீசும். குளித்து ஒவ்வொரு

வராக புதிய உடை உடுப்போம். இவை எல்லாம் சீக்கிரம் முடிந்துவிட்டால், சாவதானமான விளையாட்டுகள் விளையாடவோ பக்கத்து வீடுகளில் ஒன்றில் ஒருமணி நேரம் இருக்கவோ, எங்கள் புஸ்தகாலயத்தில் பேசாமல் உட்கார்ந்து வாசிக்கவோ அனுமதி கிடைக்கும்.

ஞாயிற்றுக்கிழமைதோறும் காலையில் சிறிது நேரம் கழித்தே சாப்பிடுவோம். தவிட்டுநிற ரொட்டியும் வறுத்த மொச்சையும் தான் உணவு. பிறகு, தேவாலயத்துக்கும், ஞாயிற்றுக்கிழமை வகுப்புக்கும் புறப்படுவோம்; அதன் அவசியத்தை உணர்த்த, இரு குன்றுகளில் நிற்கும் இரண்டு கோபுரங்களிலிருந்து ஒன்பது மணிக்கு மணியோசை கேட்கும்.

நாங்கள் 10-15 ஆனதும் வீட்டைவிட்டுக் கிளம்புவோம்; 10-30 மணிக்குச் சற்று முன்பு கடைசிமணி அடிக்கும்போது நாங்கள் தேவாலயப் படிகள் ஏறுவோம். எங்களுக்குச் சிறிது முன்னலேயே என் தந்தை நடந்து செல்வார். மழை இல்லாதிருந்தால் அவர் ஒரு நீண்ட தொப்பியையும், நீண்ட கறுப்புக்கோட்டையும் அணிந்து கொண்டு, கையில் தங்கப்பூண் இட்ட தடி ஒன்றை ஏந்திச் செல்வார். காலை அலுவலினால் என் அன்னையின் கன்னங்கள் சிவந்திருக்கும். எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறந்த உடை இருக்கும். அதைத் தேவாலயம் செல்லும்போது அணிந்திருப்போம்.

தேவாலயத்தில் உட்கார்ந்து கொள்ளும் விதத்தைப் பற்றியும் நடந்து கொள்வது பற்றியும் நாங்கள் சில விதிகளை அநுஷ்டித்து வந்தோம். ஆறுவயதுக் குட்பட்ட குழந்தைகள் பாத பீடத்தில் உட்கார்ந்து பிரசங்க நேரத்தில் படங்களைப் பார்த்துக்கொண்டிருக்கலாம்; படங்களும் வரையலாம். ஆறுவயதிலிருந்து பத்துவயதுக்குட்

பட்ட சிறுவர் சிறுமியர் ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடப் புஸ்தகங்களை வாசிக்கலாம். பத்து வயதுக்கு மேற்பட்டவர்கள் மௌனமாக உட்கார்ந்துகொண்டு, கவனிப்பதாகப் பாசாங்காவது செய்யவேண்டும். ஸ்தோத்திரப் பாடல்கள் பாடும்போதும் பிரார்த்தனையின்போதும் அனைவரும் முடிந்தவரை கலந்துகொள்ளவேண்டும்.

சங். ஞானதன் பிஷர் காலத்திலிருந்ததுபோல என் குழந்தைப் பருவத்தில் தேவாலயத்தில் நாடகபாணிக்கு அதிக வழியில்லையென்றாலும், ஏதாவது விசேஷமாகச் சிலசமயங்களில் நேரிடும். ஒருதரம் என் சகோதரன் எட்வர்ட், ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடப் புஸ்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தவன், தான் எங்கிருக்கிறான் என்ற நினைவில்லாமல், வாய்விட்டுச் சிரித்து விட்டான். ஆனால் அது சாதாரண விஷயம் என்று சொல்லும்படி. மற்றொருநாள் எங்களையெல்லாம் அவன் மலைக்க வைத்து விட்டான். எங்களிடமில்லாத ஒருவிதத் துணிச்சலுடன் அவன் ஒருநாள் காலை வெள்ளைக் கால்சட்டையை அணிந்து கொண்டு வெளியேபோய்த் தரையில் உட்கார்ந்து கொண்டான். பின்புறம் பார்க்கவொண்ணாத அளவு சட்டை அழுக்கடைந்து விட்டது. என் தந்தை வீட்டை விட்டு வெளியே வந்து அக்காட்சியைக் கண்டபோது எங்களுக்கு மூச்சு வரவில்லை. ஆனால் நாங்கள் எதிர்பார்த்தது போல அவர் அவனை உடனே தண்டிக்கவில்லை. அதே உடுப்பில் அவனைத் தேவாலயத்துக்கு வரச்சொல்லி, பிரார்த்தனையின் போதெல்லாம் உயர்ந்திருந்த பாத பீடத்தின் மீது அவனை நிற்கும்படி செய்தார். அவனுடைய கோலத்தை எல்லாரும் பார்க்கும்படியாயிற்று. அன்று எங்களுக்கு உண்டான அவமானம் சொல்லத் தேவையில்லை.

எனது பாட்டியும் நாடகம் உண்டாக்கினாள். இப்போது அதை நினைத்தால் சிரிப்பாயிருக்கிறது. ஆனால் அப்போது

பரம சங்கடமாயிருக்கும் எங்களுக்கு. அவளுக்கு வயதாக ஆகச் செவிடும் அதிகமாயிற்று. அவளுக்குத் தேவாலய விஷயத்தில் ஒரு பழக்கமுண்டு. மதகுருவின் போஷணைக் காக ஒவ்வொரு வருஷமும் ஐம்பது டாலர்கள் கொடுத்து வந்தாள் அவள். அக்காலத்தில் அவ்வளவு பெரிய தொகை யைக் கேள்விப்பட்டதில்லை. ஸ்ரீமதி ஹாரியட் மார்ட்டன் என்று ஒரு செல்வி இருந்தாள். அவள் மட்டும் தான் என் பாட்டியைப்போல வருஷம் ஐம்பது டாலர்கள் கொடுப்பது வழக்கம். அதனால் ஞாயிற்றுக்கிழமைகளில் இருவரும் தேவாலயத்தில் தட்டில் காசு போடுவதில்லை.

நல்ல காரியத்தில் என் பாட்டிக்கு எதிரியாக விளங்கிய ஸ்ரீமதி ஹாரியட் ஒருநாள் திடீரென்று தட்டிலும் காசு போட ஆரம்பித்தாள். என் பாட்டிக்கு ஏற்பட்ட வருத்தத்தை நன்கு ஊகிக்கலாம். அவளும் விட்டுக் கொடுக்காமல் தட்டில் காசுபோட ஆரம்பித்தாள். ஆனால் ஸ்ரீமதி ஹாரியட்மார்ட்டன் போடும் காசுக்கு ஒரு பைசா அதிகமாகப்போட என் பாட்டி விரும்பவில்லை. இந்த வைராக்கியத்தினால் பெரிதும் பாதிக்கப் பட்டவள் அவளுக்குப் பக்கத்தில் உட்காரும் பேத்தியாகும்.

ஸ்ரீமதி மார்ட்டன் தேவாலயத்தின் நடுவழிக்கு அடுத்த பக்கத்தில் ஒரு வரிசை முன்பாக உட்கார்ந்திருப்பாள். என் பாட்டியை அடுத்து உட்காரும் குழந்தை ஸ்ரீமதி மார்ட்டன் என்ன நாணயத்தைத் தட்டில் போட்டாள் என்று கவனித் துப் பாட்டிக்குச் சொல்லவேண்டும். ஆனால் பாட்டிக்குக் கேட்பது கடினமாக ஆக நிலைமை சமாளிக்க முடியாத அளவுக்குப் போய்விடும். சில சமயங்களில் தனது செவிட் டுத்தனத்தை மறந்து எல்லோருக்கும் கேட்கும்படியாக, "இன்றுகாலை ஹார்ட்டி மார்ட்டன் எவ்வளவு கொடுத்தாள்?" என்று பாட்டி வினவுவாள்.

தேவாலயத்தில் நடந்த பிரார்த்தனையினால் எவ்வளவு தூரம் எங்களுக்கு மதப்பற்று உண்டாயிற்று என்று எனக்

குத் தெரியாது. பிரசங்கங்கள் நீண்டு மறைபொருளாய் இருந்தன. நான் பெரியவளான பிறகு நான் கேட்ட பிரசங்கங்களில் எதுவும் குறிப்பிடத்தக்கதாயிருந்ததில்லை. ஆனால் பயபக்தியுண்டாக்கும் சூழ்நிலை, எல்லோரும் ஒன்றுய்ச் சேர்ந்து அநுஷ்டிக்கும் வழக்கம், நன்மை செய்து நல்லவராய் வாழும் உணர்ச்சி—இத்தகைய ஞாபகத்தை நான் மறக்க மாட்டேன். தேவாலயத்தின் சுற்றுப்புறமும் என் மனதில் பதிந்து கற்பனையைத் தாண்டிவிட்டது. எல்லாவற்றையும் விட சுவிசேஷத்தை மதகுரு அழகான குரலில் வாசித்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது.

தேவாலயத்திலிருந்து திரும்பியதும் நாங்கள் ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடத்துச் செல்வோம். அங்கிருந்து வந்ததும், உடுப்பை மாற்றிக்கொண்டு சாப்பாட்டுக்கு உட்காருவோம். சாப்பிட என்ன வரும் என்பது எங்களுக்கு நன்ருகத் தெரியும். முக்கிய உணவு உருளைக்கிழங்கும் மீனும் சேர்த்துச் சுட்ட வடைகளே. வெள்ளையாகவும் மஞ்சளாகவும் வட்டக் கோடுகள் தோன்றும்படி வெட்டி வேகவைத்த முட்டைகளோடு அவை தட்டுகளில் மேஜைக்கு வரும். காடியில் தோய்த்த ஈர வெங்காயங்களும், அழகாகப் பொரித்து வெண்ணெய் தடவிப் பெரியதட்டுகளில் வைத்த ரொட்டித் துண்டுகளும் வரும். இந்தத் தட்டுகள் ஒவ்வொன்றும் வெள்ளை வெளேரென வெளுத்த துண்டுத் துணியால் மூடியிருக்கும். கடைசியில் ஏதாவதொரு இனிப்பு ஊறுகாயாவது, கேக்காவது கிடைக்கும். இந்த வகை உணவுதான் எங்கள் வீட்டில் நெடுங்காலமாக ஞாயிற்றுக்கிழமை உணவாக இருந்தது. அதை ஆக்குவதற்கு அதிக நேரம் ஆகாது; எனவே, யாரும் அதைச் சொல்லிக் கோயிலுக்குப் போகாமல் இருக்க முடியாது. அதைச் சனிக்கிழமையே ஆக்கியும் வைத்துவிடலாம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் குழந்தைகள் தாங்கள் விரும்பிய புஸ்தகங்களை வாசிப்பதற்கு அநேக வீடுகளில் தடை

இருந்தது போல எங்கள் வீட்டில் இல்லை. ஞாயிறன்று மாலைப்பொழுதை வாசிப்பதில் கழிக்க எங்களுக்கு என் பெற்றோர்கள் ஊக்கமளித்து வந்தார்கள். எங்களுடன் வருஷத்தில் ஆறு மாதங்கள் தங்கியிருந்த என் பாட்டி அடிக்கடி எங்களுக்குக் கடல் கதைகள் கூறுவாள். மாலை மூன்று மணிக்கு தேவாலயத்தின் சமீபத்தில் கிறிஸ்தவ இளைஞர் கூட்டம் நடக்கும். அதில் எங்களுக்கு அவ்வளவு சுவாரஸ்ய மில்லையெனினும் நாங்கள் எப்போதும் கூட்டத்துக்குச் சென்றோம். சுவிசேஷத்திலிருந்து செய்யுள்களைப் பாராமல் சொல்லுவோம். கூட்டத்துக்கு முன்போ, பின்போ குடும்ப சகிதம் நாங்கள் வண்டியில் ஏறிச் சவாரி செய்வோம். சவாரி எக்காரணத்தைக் கொண்டாவது இல்லையென்றால், சிறுவர்கள் அவர்களுடைய நண்பர்களுடன் வெளியே உலாவச் செல்வதுண்டு.

ஆனால் எங்கள் வீட்டில் ஒரு விதியை மட்டும் மாறாமல் அனைவரும் ஞாயிறன்று அநுஷ்டித்து வந்தோம். கட்டாய மாக நடக்கவேண்டிய வேலையைத் தவிர மற்றெந்த வேலை யையும் நாங்கள் ஞாயிறன்று செய்வதில்லை. என் தாயார் உடுப்பு கிழிந்துவிட்டால்கூட ஊசி நூலை ஞாயிறன்று எடுக்கமாட்டாள். அதற்காகச் சனிக்கிழமையன்றே மறு நாளைக்கு வேண்டிய உடுப்புகள் சரியாக இருக்கின்றனவா என்று ஜாக்கிரதையாகப் பார்வையிடப்படும்.

அத்தியாயம் 5

இரட்சண்ணியத்தால் உண்டாகும் கலக்கம்

எனக்குப் பன்னிரண்டு வயதானபோது, எனக்குத் தோன்றும் ஆசையில் திடீரென பெரிய மாறுதல் ஏற்பட் டது. ஒரு புதிய புஸ்தகம், பிறந்த நாள் கொண்டாட்டம், என் தந்தையுடன் வெளியே போவது போன்ற விஷயங் களையே நான் அதுவரை விரும்பிவந்தேன். பன்னிரண்டா

வது வயதில் நான் கிறிஸ்தவளாக வேண்டுமென்று ஆசை என்னை உந்திற்று.

மனந்திரும்புதல் ஒருவித மதாபிமான அநுபவமென்று அதில் தத்துவ ஞானியும் மனோதத்துவஞானியும் இக்காலத்தில் அக்கறை காட்டுகிறார்கள். அக்காலத்தில் அவ்விதக் கருத்து யாருக்கும் இருந்ததில்லை. எங்களைப்போன்ற கிராமாந்திர வாசிகளுக்கு தத்துவ சாஸ்திரத்தைப் பற்றி அதிகம் தெரியாது. மனோதத்துவம் என்ற வார்த்தையையே அக்காலத்தில் பலர் கேள்விப்பட்டது கிடையாது. ஒருவனுடைய வாழ்க்கையில் மனம்திரும்புதல் அவசியமாக ஏற்படவேண்டியதென்று அக்காலத்தில் கருதப்பட்டது. சாதாரணமாக யௌவன காலத்தில் அது ஏற்படும். சிலசமயங்களில் துரதிருஷ்டவசமாய் பெரியவனாகும்வரை அதைப்பற்றிக் கவனிக்காமல் இருந்து ஆபத்துக்கு இடங்கொடுப்பவரும் உண்டு. சிறுவர்களுடைய மனந்திரும்புதலில் மதகுருக்கள் விசேஷ கவனம் செலுத்தி வந்தார்கள். அதற்கு ஒத்தாசையாக வேண்டிய ஏற்பாடும் ஒவ்வொரு வருஷமும் செய்யப்பட்டு வந்தது. ஜனவரிமாதம் முதல் வாரத்தில் பிரார்த்தனை முக்கியமாக அதற்கு உபயோகப்பட்டது. அவ்வப்போது பிரத்தியேகக் கூட்டங்களும் நடைபெறுவதுண்டு.

எனது யௌவனபருவத்தில் ஜனவரிமாதம் முதல்வாரம் வருஷத்திலேயே மிகவும் வசீகரமான காலமாயிருந்தது. அக்காலத்தில் உணர்ச்சியும் கலக்கமும் மிகுந்திருக்கும். மற்ற நாட்களில் எங்கள் கவனத்துக்குரியவையாயிருந்த பாடங்களையெல்லாம் அந்த ஏழு நாட்களுக்குப் புறக்கணித்துவிடுவோம். எங்களுடைய அமரத்துவமான ஆத்மாக்களுக்காகப் பாடங்களைப் பலியிட்டுவிடுவோம் என்றே சொல்லலாம். பள்ளிக்கூடத்தில் வாழ்க்கை இயற்கையாக இராது. பிரார்த்தனைக் கூட்டத்துக்கு முன்பு, அத்தியந்த நண்பர்களுடன் தீவிரமான யோசனைகள் செய்யப்படும். அந்த ஏழுநாட்களிலும் இடைக்கிடையே அத்தியந்த நண்பர் ஒருவர் இருவர் தாம் முந்திய

நாள் மாலை மனந்திரும்பியது பற்றிக் கண்ணீர் வடித்துக் கூறுவதைக் கேட்கலாம்; சிலர் மனந்திரும்ப முடியவில்லையே என்றும் கண்ணீர் உகுத்துச் சொல்வதையும் கேட்கலாம். பலர் மனம்போன போக்கில் கற்பனை யுலகில் திரிய விரும்புவதையும் அறியலாம்.

ஜனவரி மாதக் கூட்டங்கள் சாதாரணமாக ஏழு மணிக்குத் தொடங்கும். அதனால் கடவுள் கடாட்சத்தைக் கூட்டம் கலைந்த பிறகு பெற விரும்புவர்களுக்குப் போதிய நேரம் கிடைக்கும். கூட்டத்தில் ஸ்தோத்திரப்பாடல்கள் பாடுவார்கள். மதகுருக்கள் தீவிரமாகப் பிரார்த்தனை செய்வார்கள். மாலையின் உணர்ச்சிவேகத்துக்கு அப்பிரார்த்தனை ஓர் அளவுகோலாக விளங்கும். சில சமயங்களில் அப்பிரார்த்தனைகளைக் கேட்கும் போது கட்டாயம் கடவுள் அப்பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்ப்பார் என்று எங்களுக்குத் தோன்றும். பிரார்த்தனைக்குப் பிறகு பிரசங்கம் ஆரம்பமாகும். அதுவும் பிரார்த்தனை போலவே இருக்கும். இரட்சண்ணியம் எப்படியும் ஏற்படும் என்பதையே பிரசங்கத்தில் முக்கியமாக வற்புறுத்துவார்கள். இரட்சண்ணியம் கிடைக்கும் நாளை நாம் தள்ளிப்போடலாம். பாபத்தில் மற்றோர் ஆண்டு உழன்று வரலாம். எனினும் கடைசியில் நாம் முழந்தாட்படிந்து கடவுளிடம் மன்னிப்புப் பெற்றால்தான் மனச்சாட்சிக்குப் பூர்ண சமாதானமும் பெருகிய ஆனந்தமும் கிடைக்கும் என்பதைத் தெளிவுபடுத்துவார்கள்.

கடைசியில் அழைப்பு விடும்போது மாலைக்கூட்டத்தின் முக்கிய கட்டம் தோன்றும். கூட்டத்திற்குப் பிறகு உண்டாகும் உச்சஸ்தாயி அதைத்தான் பொறுத்திருக்கிறது. தமது பாபச்செயல்களை உணர்ந்து நல்வாழ்க்கையை நடத்த விரும்புவோர்கள் எழுந்து நிற்பார்கள். இவர்கள் முதல் படி ஏறியவர்களாகக் கருதப்படுவார்கள். உணர்ச்சி மேலிட்டு முன்னே நடந்து வருபவர்கள் பூர்ணமாக மனத்தாபம் அடைந்தவர்களாகக் கருதப்படுவார்கள். கூட்டத்துப் பிறகு

நடக்கும் அநுஷ்டானங்களில் அவர்கள் கலந்து கொள்ள லாம். அநுஷ்டானங்களில் கலந்து கொள்ளத் தயங்குபவர்கள் காப்பாற்றப்பட்டதாய்க் கருதப்பட்டது.

கூட்டத்துக்குப் பிறகு உண்டாகும் நிலைமை மிகவும் சங்கோஜமானது என்பதில் சந்தேகமில்லை. அது வரை யாருடனும் அதிகமாகப் பழகாதவர்களும் கூட வாய் விட்டுத் தங்களுடைய சொந்த விஷயங்களைப் பிரலாபித்து அழுவார் கள், பிரார்த்திப்பார்கள். முழந்தாளிட்டுக் கடவுளை வணங்கு மாறு ஆக்ஞை பிறந்ததும் சங்கடம் அதிகமாகும். ஆத்மாக்கள் பரிசுத்தமாயினவா என்று பிரார்த்தனைக்குப் பிறகு மதகுருக் கள் கேட்கும்போது கலக்கம் இன்னும் அதிகமாகும்.

மறுநாள் காலை வீட்டிலே போஜனத்தின்போது மற்றக் குடும்பத்தினரைச் சந்திக்கும்போது உண்டாகும் மனக்கலக்க மில்லையென்றால் யௌவனபருவத்தில் இப்பிரத்தியேக பிரார்த்தனைகளுக்கு இன்னும் அதிகமாகக் கூட்டம் சேரும் என்று சொல்லத்தோன்றுகிறது. தண்டனைக்குப் பிறகு முகத்தைக் காட்டுவதென்பதே சங்கடமான விஷயம். ஆனல் இரட்சண்ணியத்துக்குப் பிறகு மற்றவர்களைச் சந்திப்பது அதைவிடக்கடினமான காரியம். பரிசுத்தமடைந்தவன் சாப்பாட்டுக்கு வந்ததும் எல்லோரும் மௌனமாயிருப்பார்கள். அமைதி நிலவும். என் தந்தை ஆறுதலுக்காக ஏதாவது சொல்லிவைப்பார். அதனல் கலக்கம்தான் அதிகமாகும். பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வரும் வழக்கமுடைய என் பாட்டி விசாரிக்கத் தொடங்குவாள். என் அன்னை கருணை பொருந்தியவள்தான், ஆனல் உற்றுக்கவனித்துக் கொண் டிருப்பாள். பரிசுத்தமடைந்தவனுடைய நடத்தையில் மாறு தல் இருக்கிறதா என்று மற்ற சகோதர சகோதரிகளும் கவ னிப்பார்கள். நாங்கள் வாழ்ந்த சமூகத்துக்குப் பழக்கமான அடக்க ஒடுக்கத்தினல் அந்நிலைமையைச் சமாளிப்பது மிகவும் கடினமாயிருக்கும்.

மூன்றும் பாகம்

கப்பலோட்டும் பழக்கம்

அத்தியாயம் 1

கடலோரத்துப் பிள்ளைகள்

(1)

கடலோரவாழ்க்கையில் உண்டாகும் உள்ளத்துடிப்பை நாங்கள் அறிந்திருந்தோம். வரும் கப்பல்கள் நீரோட்டத்திற்காகக் காத்திருப்பது, பிறகு துறைமுகத் தீவின் சமீபத்தில் நங்கூரம் போடுவது, அல்லது ஓரமாக வந்து கிராமத்துக் கடைகளுக்கு வேண்டிய விலைபொருள்களை இறக்குமதி செய்வது, மரம் ஏற்றிச்செல்லுவது போன்ற விஷயங்களை அக்காலத்திலும் நாங்கள் கண்டோம்.

பிரகாசமான கைக்குட்டைகளைக் கழுத்தில் கட்டிக் கொண்டு எங்களுக்குப் புரியாத மொழியில் பேசிக்கொண்டு வரும் கரிய மனிதர்கள் ஓட்டும் "அந்நியக் கப்பல்" பார்படாஸிலிருந்து எப்போதாவது வந்தால் அதனால் உண்டாகும் உற்சாகத்தை எழுதி முடியாது.

பாஸ்டனிலிருந்தோ நியூயார்க்கிலிருந்தோ "வியாபாரக் கப்பல்" வந்தால் எனக்கு முந்திய சந்ததியாரின் குழந்தைகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகும் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அக்கப்பலின் தலைவன் வருடந்தோறும் கடலோரங்களிலுள்ள சிறு நகரங்களுக்கு விலைபொருள்களைக் கொண்டு வந்து விற்பானும். ஆரஞ்சு, ஆப்பிள், பேரீச்சம் பழம், அத்திப்பழம் முதலியவற்றையெல்லாம் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, பதிலுக்குப் பணம்தான் வேண்டுமென்று சொல்லாமல் இரும்புத் துண்டுகள் முதலியவற்றையும் பெற்றுக் கொள்ளுவானும். அவன்

கொண்டுவரும் பொம்மை வண்டிகள், கைத்துப்பாக்கிகள் ஆகியவற்றைச் சிக்கனமாகச் சிறுபாடு சேர்த்து வைத்த வர்கள் வாங்கிக் கொள்வார்களாம். அவன் கப்பலுக்குள் ஆசையால் உந்தப்பட்ட ஆண்களும் பெண்களும் அங்கு காணும் அழகான துணிமணிகளைக் கண்டு வாங்கப் போதிய பணமில்லையே என்று ஏங்கி நிற்பார்களாம். எங்கள் காலத்திலும் இம்மாதிரிப் பண்டமாற்று ஓரளவுக்கு நடந்து வந்தது.

எனக்குப் பன்னிரண்டு வயது இருக்கும்போது, என் தந்தை கிராமத்திலுள்ள மற்றும் மூன்றுபேர்களுடன் சேர்ந்து "கோல்டு ஹன்டர்" என்ற ஓர் பாய்மரக்கப்பலை வாங்கினர். பல்வேறு காரியங்களைச் சாதிக்குமாறு கப்பல் தலைவனுக்குக் கட்டளையிட்டுக் கப்பல் பாஸ்டனுக்கு அனுப் பப்பட்டது.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு அக்கப்பல் கொண்டு வந்த பொருள்கள் முன் காலத்தைப்போல அவ்வளவு நூதன மாக இல்லாமலிருக்கலாம் என்றாலும் அப் பொருள்களை இறக்குமதி செய்யும்போது எங்களுக்குண்டான உள்ளக் கிளர்ச்சி எவ்விதத்திலும் குறைந்ததல்ல. மாவுப் பீப்பாய் கள், தானிய மூட்டைகள், வெல்லக் கட்டிகள், காடிச் சாடிகள் முதலிய பொருள்களை இறக்குமதி செய்யும்போது நான்கு குடும்பங்களின் சிறுவர் சிறுமியர்களும் துறைமுகத் தில் நின்று பிரமிப்புடன் வேடிக்கை பார்த்தோம். எங்கள் எண்ணிக்கை அதிகம். அப்பொருள்களெல்லாம் எங்கள் வீடுகளிலுள்ளவர்களுக்கும், மிருகங்களுக்கும் குளிர்காலத் தில் உணவாகும்.

பழங்கள் அதிகமாகக் கிடைக்காத அந்நாட்களில் இறக்கு மதியான பொருள்களில் முக்கியமானவை ஆரஞ்சுகள், வெண்திராட்சைப் பழங்கள், பெரிய வாழைக்குலை முதலி யன. திராட்சைப் பழங்கள் மரத்தூள்களுக்கிடையில்

இரண்டு பெரிய சாடிகளில் வைக்கப்பட்டிருந்தன. அப்பெரிய வாழைக்குலை மரச்சட்டங்களால் செய்திருந்த கூண்டில் இருந்தது. எல்லோரும் கண்டு ஆச்சரியப்படட்டுமென்று என் தந்தை வாழைப்பழங்களைத் தருவித்திருந்தார். எங்களுக்கு எல்லாம் வாழைப்பழங்கள் என்றால் வெகு பிரியம். ஆனால் குடும்பத்தில் எல்லோரும் உண்பதற்கு வேண்டிய அளவில் ஊரிலுள்ள கடைகளில் வாழைப்பழங்களை வாங்குவது இயலாத காரியம். அசாத்திய விலை. ஆகையால் எங்கள் ஆசை பூர்ணமாய் பூர்த்தியாகவில்லை.

வாழைக்குலையைக் கட்டுகளிலிருந்து எடுத்து எங்கள் வீட்டு உத்திரத்தில் தொங்க விட்டதும், ஊரிலுள்ள மற்றச் சிறுவர்களைவிட எங்களுடைய செல்வாக்கு உயர்ந்ததென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. தெருவிலிருந்து பார்த்தால் வாழைக்குலை தொங்குவது தெரியும். ஆகவே பலர் கூடி அதைப் பார்க்கலாயினர்.

ஒருநாள் மத்தியானம் என் தந்தை அந்தக் குலையைப் பார்த்துப் பழுத்த பழங்களை அறுத்து விடலாமென்று யோசனை கூறினர். எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்க அவர் யத்தனித்தார் என்பது எங்களுக்குத் தோன்றவில்லை. ஒரு பெட்டியைக் கொண்டுவந்து, அதன்மீது ஏறி, தமது சட்டைப் பையிலிருந்து கத்தியை எடுத்தார். கீழே மடியைப் பிடித்துக்கொண்டு நின்றேன். ஐந்து, ஆறு, எட்டு, பன்னிரண்டு பழங்களை அறுத்து என்மடியில் போட்டு எங்கள் நண்பர்களுக்கும் கொடுக்கும்படி அவர் கூறியபோது எனக்கு உண்டான ஆச்சரியம் இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. அன்றிலிருந்து வாழைப்பழத்தைப் பண்பட்ட மனத்தவர்போல் அலட்சியமாகப் பார்க்க முடிவதில்லை எனக்கு. அதைப் பார்க்கும் பொழுதெல்லாம் என் தகப்பனரின் உதாரகுணமும், என் குடும்பத்தின் கௌரவமான வாழ்க்கையும் நினைவுக்கு வரும்.

(2)

கடலோர வாழ்க்கையில் தோன்றும் சிறிய சம்பவங்களுக்கும் வேடிக்கைகளுக்கும் கணக்கில்லை. எங்கள் காலத்திலும் எங்களிடையே வயதான கப்பல் தலைவர்கள் இருந்தார்கள். வானத்தைப்பற்றியும் கடலைப் பற்றியும் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. விதவிதமான 'கதைகளைச் சொல்லுவதோடு அவர்கள் சீதோஷ்ண ஸ்திதியின் மாறுதல்களில் உள்ள அதிசயங்களை விளக்குவார்கள். காற்று இடமாகச் சுழன்று அடித்தால் என்ன நேரிடுமென்றும், கடற்புள் உள்நாட்டை நோக்கிப் பறந்தால் என்ன அர்த்தமென்றும், மேகம் இல்லாது வானம் "விரிச்" சென்றிருந்தால் பிறகு என்ன நேரிடுமென்றும் நாங்கள் முன் கூட்டியே அறிவிக்கப் பழகிக்கொண்டோம்.

வசந்த காலத்தில் நீரோட்டத்தினுல் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை நாங்கள் அறிந்திருந்தோம். மார்ச் மாதத்தில் பௌர்ணமியின் போது தோணிகள் துறைமுகத்தை விட்டுத் தள்ளப்படுமா, கடலோரத்தில் உள்ள கட்டைகள் கடலில் மிதக்குமா என்று ஆசையுடன் எதிர்பார்ப்போம். ஏப்ரல், மே மாதங்களில் இரவில் மீன்கள் கடலில் கலக்கும் ஆறுகளுக்கு முட்டையிட அபரிமிதமாய் வரும் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். அந்நாட்களில் பொழுதடைந்ததும் உறங்கப் போய்விடுவோம்; விடியற்காலையில் மூன்று மணிக்கு என் தந்தை எங்களை எழுப்புவார். பக்கெட்டுகள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு ஒருமைல் தூரம் நாங்கள் நடப்போம். எங்களுக்குப் பிடித்த ஆற்றோரத்துக்குச் செல்வோம். அப்போது கடல் அலை பொங்குவது தணிந்துபோயிருக்கும். வந்த அலைகளோடு மீண்டும் மீன்கள் கடலுக்குள் போயிருக்கமாட்டா. ஆகவே வேண்டும் மீன்களைப் பிடித்துவருவோம்.

குளிர்காலத்தில் கடல் பொதுவாக உறைந்த பனியால் மூடப்படும். ஜனவரி மாதத்திற்கெல்லாம், சில சமயங்களில்

கிறிஸ்துமஸின் போதே, பெரிய இரும்புத் தகடுபோல உறைந்தபனி வெகுதூரம் கடலை மறைத்துவிடும். ஒரு நாள் நாங்கள் விழித்தெழுந்து பார்க்கும் போது எங்கள் ஊருக்கும் ஏழு மைல்களுக்கு அப்பாலுள்ள நீளத் தீவுக்கும் நடுவே தண்ணீரையே காணமுடியாது. உள் குடாவிலும் வெளிக்குடாவிலும் நாங்கள் வழுக்கியோடி விளையாடுவோம். உறைந்த பனி மூடி ஒரு வாரத்துக்குமேல் ஆனதும் சக்கரமில்லாத வண்டிகளில் குதிரைப் பந்தயம் நடத்துவதுண்டு. தீவிலிருந்து மரம் வெட்டிக்கொண்டு வருவார்கள் விவசாயிகள். சில சமயங்களில் எங்கள் பெற்றோர்களுடைய அநுமதி பெற்று நாங்களும் விவசாயிகளுடன் சென்று மரத்துண்டுகள் மீது உட்கார்ந்துகொண்டு உறைபனியைக் கடந்து வருவோம்.

உறைபனி, தோன்றுவதை விட வேகமாக, உடைந்து கடலை நோக்கிச் செல்லும். மார்ச், ஏப்ரல் மாதத்தில் காலையில் சாம்பல் நிறம் கலந்த நீலநிறம் இங்குமங்குமாகப் பனிக்கடலில் தோன்றும். கடலில் வெடிக்கும் சப்தம் உண்டாகும். பிறகு நீரோட்டத்துடன் கலந்து பனிக்கட்டிகள் ஒன்றோடொன்று மோதிச் செல்லும். பெற்றோர்கள் அஜாக்கிரதையாயிருந்தால் அவர்களுடைய சிறுவர்களில் துணிச்சலானவர்கள் ஒரு பனிக்கட்டியிலிருந்து மற்றொன்றுக்குத் தாவி விளையாடுவார்கள். எங்கள்பெற்றோர்கள் அப்படியில்லை.

வசந்த காலத்திலும் கோடையிலும் செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் காலையில் மீன் படகு வரும். எங்கள் கப்பல் தலைவன் காப்டன் ஆண்ட்ரு கோல் மீன்களைச் சேகரித்துக்கொண்டு வெளிக்குடாவிலிருந்து வருவார். எங்கள் நான்கு வீடுகளிலுமிருந்து சிறுவர்கள் கடலோரத்திற்கு வந்து நின்றுகொண்டிருப்பார்கள். பச்சைப் பசேலென விளங்கும் கடல் தண்ணீர் துறைமுகத்தில் சலார் சலார் என வீசவும், வயிறு நிறையக் கிடைக்கும் என்று

கடல் புட்கள் பறக்கவும், அச்சிறுவர் சிறுமியர் அங்கே கப்பலில் போகக் காத்துக் கொண்டிருப்பார்கள்.

(3)

நாங்கள் வசித்த இடத்தில் பத்திரமாயிருந்தோம் என்ருலும் கடலினுல் உண்டாகக் கூடிய ஆபத்துகளை நாங்கள் அறிந்திருந்தோம். காற்று மழையினுலும் வெள்ளத்தினுலும் ஏற்படக்கூடிய விபத்துகளைப்பற்றி ஆற்ருேரம் வசிக்கும் மக்களின் குழந்தைகளுக்கும் எங்களைப் போலத்தான் விவேகம் நிறைந்திருக்கவேண்டும். சமுத்திரங்களில் கப்பல்கள் மூழ்கிவிடுவதால் உண்டாகும் விளைவுகளைப்பற்றிய கதைகளை நாங்கள் கேட்டிருந்ததால், குளிர் காலங்களில் விபத்துகளைப்பற்றி வரும் செய்திகள் எங்களுக்கு ஆச்சரியத்தை அளிப்பதில்லை.

கலங்கரை விளக்கத்திலிருந்து கீழே விழுந்து நீரில்மூழ்கி இறந்த சிறுவர்களின் வரலாறுகளையும், கலங்கரை விளக்கத்தின் அறையில் கணவனின் பிரேதம் கிடக்கும்போது மூன்று நாட்கள் வரை புயலில் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டிருந்த வீரப் பெண்மணியின் சரிதையையும் நாங்கள் வாசித்திருந்தோம். கப்பல்கள் கடலில் அலைக்கழிக்கப்படும், அதனுல் தூரத்தில் கிடக்கும் தீவுகளில் மக்கள் குளிர்காலத்தில் சிலசமயங்களில் பட்டினியால் வாடவேண்டியிருக்கும் என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். துக்கம் தனிமனிதனைப் பொறுத்ததல்ல, வாழ்க்கையில் சாதாரணமாக ஏற்படக் கூடியது, அவசியமாக ஏற்படும் என்ற எண்ணம் எங்களையறியாமலே எங்கள் மனதில் பதிந்து விட்டதில் ஆச்சரியமில்லை. வாழ்க்கையில் துக்கம் மட்டும் மல்ல அதைச் சகித்துக்கொள்ளும் தன்மையும் தவிர்க்கமுடியாதது என்ற எண்ணம் மற்றக் குழந்தைகளைக் காட்டிலும் எங்கள் உள்ளத்தில் இளமையிலேயே ஊறிவிட்டது என்று நினைக்கிறேன்.

அத்தியாயம் 2

புஸ்தகமில்லாமல் பூகோள சாஸ்திரம்

பூகோள சாஸ்திர நூல்களைப் பற்றியும் அவற்றின் ஆசிரியர்களைப் பற்றியும் கிராமப்பள்ளிகளில் வாசித்த எங்களுக்கு அகம்பாவமான எண்ணம் தோன்றும். முதலாவதாக, பூகோள சாஸ்திர நூல்களில் சில சொற்களைப் பற்றிய விளக்கங்கள் பாராமல் சொல்லத் தெரிய வேண்டுமென்ற விதி அர்த்தமற்றதாகவும் பயனற்றதாகவும் எங்களுக்குத் தோன்றிற்று.

"தீவு என்பது சுற்றிலும் நீரால் சூழப்பட்ட சிறிய அல்லது பெரிய நிலப்பகுதி."

"குடாக்கடல் என்பது நிலத்தினுள் புகுந்திருக்கும் கடலின் ஒரு புஜம்."

தீவைப்பற்றி அந்த உயிரற்ற விளக்கத்தை மனதில் பதியவைக்க வேண்டிய அவசிய மென்ன? பூகோள சாஸ்திர நூலில் இருக்கும் வார்த்தைகளை அப்படியே சொல்லவில்லையென்றால் பள்ளிக்கூடத்தில் நேரங்கழித்து இருந்து, அந்தப் பலகையில் ஐம்பது தரம் எழுதச் சொல்லுவார்கள். ஆனால் அதை விட உற்சாகமான முறையில் எங்களுக்கு அதற்கு முந்தியே மார்ட்டினிக் தீவும் அங்கு வீசும் புயல் காற்றும், மொஸாம்பிக் தீவும் பவளத்தீவுகளும் பரிச்சயமாயிருந்தன. நாங்கள் வசித்ததே ஒரு குடாக்கடலோரத்தில்.

இரண்டாவதாக, உலகத்தில் மிகவும் சுவாரஸ்யமான இடங்களை வர்ணிப்பதில் எங்களுக்குத் தெரிந்த பூகோள சாஸ்திரப் புஸ்தகத்தின் ஆசிரியர் எங்களுக்கு ஏமாற்றத்தை அளித்தார்.

"தென் ஸ்பெயினில் காடிஸ் முக்கியமான துறை முகம். பிரசித்திபெற்ற ஜிப்ரால்டர் கால்வாய்க்கும் அதற்கும் அதிக

தூரம் இல்லை. அயல் நாட்டு வர்த்தகத்துக்கு அது பெயர் போனது. அங்கிருந்து ஏற்றுமதியாகும் முக்கிய பொருள்கள் பட்டு, பழங்கள், மதுபானம், பவளங்கள் முதலியன," என்று அந்த ஆசிரியர் எழுதியிருந்தார்.

நான் அந்த. ஆசிரியருக்குப் பலவிஷயங்கள் சொல்லி யிருப்பேன். என்னுடைய பாட்டனுர் மத்யதரைக்கடல் வழியாக இந்தியாவுக்கும் சீனுவுக்கும் கப்பலில் போய் வரும் போது என் பாட்டி பல மாதங்கள் அந்த வசீகரமான நகரில் வசித்துவந்தாள். காடிஸ் ஒரு தீவிலுள்ள வெள்ளை நகரம். கடல் அலைகளால் விபத்து நேராவண்ணம் இருக்க, பெரிய வெள்ளைச் சுவர் கடற்கரையில் கட்டப்பட்டிருந்தது. இவ் விஷயம் ஆசிரியருக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனல் எனக்குத்தெரியும். அப்பட்டினத்தின் பெரிய துறைமுகத் தில் என் பாட்டனுர் கப்பல் நங்கூரம் பாய்ச்சியிருக்கும் போது இரவில் நிலா வொளியில் பார்த்தால் அப்பட்டினம் கடலில் மிதக்கும் ஒரு பெரிய வெள்ளைப் பூ எனத்தோன்றும்.

கடைசியில், பூகோள சாஸ்திரப் படங்கள் எரிச்சலை உண்டு பண்ணின. உதாரணமாக, ஷாங்ஹாய் துறைமுகத் துக்கு வடகிழக்கே யாங்ட்ஸிகியாங் நதி முகத்துவாரத்தில் லாங் மிங் என்ற தீவு இருக்கிறது. இந்த முக்கியமான இடத் தைப் படத்தில் குறித்திருந்தார் பூகோள சாஸ்திரி. உண்மை தான். ஆனல் அதனுடைய பெயரை அதில் எழுதவில்லை. என் பள்ளியிலுள்ள மாணவர்கள் அனைவரும் அது மன்னிக்க முடியாத தவறு என்று கூறிவிட்டார்கள்.

ஏனெனில், லாங் மிங் தீவு எங்களுடைய கிராமத் துடன் பிரிக்க முடியாமல் பிணைக்கப்பட்டிருக்கிறது. 1850-ம் ஆண்டின் போது அந்தத் தீவின் கவர்னரையும், அதிலிருந்த 250 பிரஜைகளையும் தனது சாமார்த்தியத்தால் நீலக்குன்று மாலுமி ஒருவன் சமாளித்தான். அப்போது ஓர் இளைஞ னகவே இருந்தான் அவன். பிற்காலத்தில் மாஸச்சுஸெட்ஸி

ளுள்ள ப்ருக்லினின் காப்டன் ஆர். ஜி. எப். காண்டேஜ் எனப் பெயர் பெற்றான்.

ஒரு கடும்புயலின்போது அவனுடைய கப்பல் ஸூங் மிங்குக்கு அருகே ஒரு பாறையில் மோதுண்டு இரண்டாக உடைந்து விட்டது. ஒரு நீளமான படகில் அவனையும் இருபத்து நான்கு பேர்களையும் ஏற்றி அனுப்பிவிட்டு, கப்பல் தலைவனும் இன்னும் எட்டுப்பேர்களுமாக ஒரு சிறிய படகில் ஏறி ஷாங்ஹாய் நோக்கிச் சென்றனர். காற்றில் இரு படகுகளும் பிரிந்து விட்டன. அதிகக் கனமான நீளப் படகு ஸூங் மிங்கை அடைந்தது. இளைஞன் அதைச் சிறை என்று நினைத்தான்.

உடனே படகை நோக்கிப் பல சீனர்கள் ஈட்டிகளுடன் வந்ததைக் கண்டு அஞ்சாமல், அவர்களில் ஒருவனுக்கு மெக்ஸிகன் பவுனை லஞ்சம் கொடுத்து அவ்வூர் கவர்னரிடம் அழைத்துச் செல்லுமாறு வேண்டினான். தன்னுடைய படகில் இருபத்துநான்கு பேர்களுடன் மீண்டும் கடலில் செல்லுவது ஆபத்தான காரியம் என்பதை அவன் உணர்ந்தான். வேறு படகு ஒன்றைக் கவர்னரிடம் இரவல் வாங்க அவன் உத்தேசித்தான்.

கவர்னர் மாளிகையை அடைந்து கவர்னரைக் கண்டதும் அவனுக்குள்ள இடையூறுகள் சமாளிக்க முடியாதவையாகத் தோன்றின. நீலக்குன்று மாலுமியும் ஸூங்மிங் அதிபதியும் எந்த மொழியில் பேசுவது ? சைகைகள் பயன்றன. கவர்னர் சில வார்த்தகளைச் சீன பாஷையில எழுதிக்கொடுத்தான். மாலுமி சில வார்த்தைகளை இங்கிலீஷில் எழுதினான். வந்தவர்களுக்கு உபசாரம் செய்யவில்லை என்று கவர்னர் நினைத்தான்போலும். சர்க்கரைக் கொம்மட்டி ஒன்றைத் தருவித்து விருந்தாளிகளுக்கு வழங்கினான்.

அதைத் தின்னும்போது அமெரிக்க மாலுமிக்கு ஒரு யோசனை உதித்தது. அவனுக்கு முன்னிருந்த மேஜை மீது

பழத்தோலும் விதைகளும் கிடந்தன. ஒருபழத்தோலை எடுத்து தன் கத்தியால் அதைக் கப்பலின் அடித்தளம்போல் தோன்று மாறுசீவினன். அதன்மீது மூன்று தீக்குச்சிகளைப் பாய்மரங்கள் போல வைத்தான். இரண்டு சிறிய பழத்தோல்களை எடுத்துப் படகுகளாகச் செய்தான். அவற்றையும் முப்பத்து நான்கு விதைகளையும் பழக்கப்பல் மீது வைத்தான். மேஜைக்கு இடதுபுறத்தில் ஸுங் மிங்கை அடுத்துள்ள பாறைகளைக் காட்டப் பற்பல பழத்தோல்களைப் போட்டான். பிறகு திடீரென அவன் கப்பலைப் பாறையில் மோதிக் கப்பலை இரு துண்டுகளாக உடைத்தான்.

பச்சாத்தாபத்துடன் மூச்சுவிடாமல் கவர்னர் அவனுடைய செய்கையைக் கவனித்து வருவதை அவன் உணர்ந்தான். அவன் இன்னும் தன் செய்கையைப் பூர்த்தி செய்யவில்லை. உடைந்த கப்பலிலிருந்து இரு படகுகளை எடுத்தான். பெரிய படகில் இருபத்துநான்கு விதைகளை வைத்தான். அவன் வைத்த விதத்திலிருந்தே பார்ப்பவர்களுக்கு அப்படகு அத்தனை பேர்களையும் தாங்காது என்பது தெளிவாயிற்று. பிறகு அதை அவன் மெதுவாக மேஜை மீது ஒட்டி, "ஸுங் மிங்" என்று உரக்கக் கூவினன். சிறிய படகில் எட்டு விதைகளை வைத்து அதையும் ஒட்டி, தரையில் விழும்படி செய்து விசனத்துடன் "ஷாங் ஹாய்" என்று கூறினன்.

ஸுங் மிங் கவர்னர் இந்த நாடகத்தைப் புரிந்து கொண்டான் என்பது உடனே தெளிவாயிற்று. அமெரிக்க விருந்தாளிகள் மீதும் அவனுக்குக் கருணை பிறந்தது. அவர்களுக்கு மரியாதை செய்யலானன். ஆனல் காண்டேஜ் நேரத்தை வீணக்கிக் கொண்டிருக்க முடியாது.

பையிலிருந்து ஒரு மெக்ஸிகன் டாலரை எடுத்துக் காண்பித்து, "ஷாங் ஹாய்?" என்று அவன் கேட்டான். கவர்னருக்கும் மாலுமியை அழைத்து வந்த சீனனுக்கு

யிடையே ஏதோ பேச்சுவார்த்தை நடந்தது. மாலுமியின் கோரிக்கையை அவர்கள் புரிந்து கொண்டார்கள். கவர்னர் டாலரை வாங்கி, மேஜைமீது வைத்து மெதுவாகத் தனது விரல்களில் பத்து எண்ணினான். பத்து டாலர்களுக்கு அவர்களை ஷாங் ஹாய்க்கு அழைத்துச் செல்வதாக அவன் தெரிவித்தான். அவனும் பழத்தோல்களையும் விதைகளையும் உபயோகப்படுத்தித் தன் கப்பலில் பத்துப்பேர்களை அழைத்துச் செல்வதாகவும் பின்னால் நீளப் படகு வரலாம் என்றும் கூறினான்.

இவ்வளவு பிரக்யாதி அடைந்த தீவின் பெயரை பூகோளசாஸ்திரி குறிக்கவில்லையென்றால் எங்களுக்குக் கோபம் வருவது சகஜம்தானே!

அத்தியாயம் 3

என் பாட்டனரின் கப்பற் சேதம்

என் பாட்டனர் 1823-ம் ஆண்டில் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்தார். அக்குடும்பத்தில் பிறந்த ஐந்து புத்திரர்களும் அவர்களுடைய பிதாக்களைப் போலவே கப்பல் மாலுமிகளானர்கள். சீக்கிரமே பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டுப் பதினரும் வயதில் என் பாட்டனர் தமது கடினமான தொழிலில் புகுந்தார். விபத்துகள் பலவற்றுக்குள்ளாகி, இறுதியில் தமது இருபத்து ஆரும் வயதில் அவர் சொந்தக் கப்பல் ஒன்று வாங்கி அதன் தலைவரானர்.

பல துறைமுகங்களிலும் பல சமுத்திரங்களிலும் அவருக்குண்டான அநுபவங்களில், அயர்லாந்துக்கருகே 1847-ம் ஆண்டில் அவருடைய கப்பல் சேதமாகி அவர் தவித்தது தான் முக்கியமானது. அப்போது "ஸாரா இ. ஸ்நோ"

என்ற கப்பலில் அவர் பிரதம உத்தியோகஸ்தராயிருந்தார். அக்கப்பல் பாஸ்டனிலிருந்த ஒரு கம்பெனிக்குச் சொந்தமானது. கப்பல் தலைவனும் மற்ற மாலுமிகளும் நீலக் குன்றைச் சேர்ந்தவர்கள். கடைசியாகக் கப்பலில் வேலைக் கமர்ந்தவர் என் பாட்டனாரின் பெரிய தம்பி. "ஸாரா இ. ஸ்னே" ஜனவரி மாதம் 3-ம் தேதியன்று அயர்லாந்துக்கு தானியம் ஏற்றிக்கொண்டு நியூயார்க்கை விட்டுப் புறப்பட்டது. அயர்லாந்தில் 1848-ல் ஏற்பட்ட கடுமையான பஞ்சம் அப்போதே அங்கு தொடங்கியிருந்தது.

ஜனவரி மாதம் 24-ம் தேதியன்று அக்கப்பல் ஒரு பெரிய புயல் காற்றினால் தாக்குண்டு சேதமாயிற்று. கப்பல் தலைவரையும் இருபத்தொன்பது பேர்களையும் கடல் அடித்துக் கொண்டு போயிற்று. மூன்று பேர்கள் தான் பிழைத்திருந்தார்கள். என் பாட்டனார், அவருடைய தம்பி, இன்னும் ஒருவன். மற்றொருமுறை அலைகள் உடைந்த கப்பலைத் தாக்கியபோது என் பாட்டனாரின் தம்பியும் அடித்துக் கொண்டு போகப்பட்டார். அதற்கு அரைமணி நேரம் கழியு முன் என் பாட்டனார் தனிமையில் விடப்பட்டார்.

நான்கு நாட்கள்வரை உடைந்துபோன கப்பலில் அவர் மிதந்துகொண்டிருந்தார். உணவோ, தண்ணீரோ கிடையாது. ஒருசமயம் தளர்ந்துபோய்த் தூங்கி விட்டு விழித்த போது தம்மைச் சுற்றிக் கட்டிக்கொண்டிருந்த கயிறு அவிழ்ந்து போயிருப்பதைக் கண்டார். 28-ம் தேதி காலை அவர் விழித்துப்பார்க்கும்போது அடுத்துள்ள தீவின் கரையோரத்திலிருந்து தாம் நான்கு மைல்கள் அப்பால் இருப்பதை அவர் உணர்ந்தார்.

அந்தத் தீவு கால்வேயிலிருந்து சில மைல்கள் தூரத்திலுள்ளது. அத்தீவிலிருந்த விவசாயிகள் ஒரு படகில் வந்து தக்க தருணத்தில் என் பாட்டனாரைக் காப்பாற்றினார்கள். ஆனால் அவருடைய துர்ப்பாக்கியம் அத்துடன் முடியவில்லை. அவருக்கு ஜன்னி ஜுரம் கண்டுவிட்டது. இரண்டு வாரங்

கள் வரை அவர் காருண்யம் நிறைந்த விவசாயிகளின் குடிசையில் செத்த பிணம்போலக் கிடந்தார். சிறிது குண மடைந்தவுடன், அயர்லாந்திலுள்ள அமெரிக்க ஸ்தானாதி பதிக்கு விஷயத்தைத் தெரிவித்தார். பிறகு அவரை ஓர் ஐரிஷ் பிரபுவின் மாளிகைக்கு எடுத்துச் சென்றார்கள். அங்கே அவருக்கு ராஜபோகம் கிடைத்தது, திரும்பி வீடு நோக்கிப் பயணமாகும் வரை.

ஏப்ரல் மாதத்தில் அவர் நியூயார்க் திரும்பினார். நீலக் குன்றில் அதற்குள் "ஸாரா இ. ஸ்னோ"வுக்கு நேர்ந்த விபத்தைப்பற்றிச் செய்தி பரவியிருந்தது. கப்பலில் இருந்த மாலுமிகள் அனைவர்களும் அவ்வூரைச் சேர்ந்தவர்களாதலால், ஊர் ஜனங்கள் கவலைப்பட்டார்கள். என் பாட்டனார் ஊருக்குத் திரும்பியபோதுதான் இறந்தவர்களுக்காகத் தேவாலயத்தில் பிரார்த்தனை நடந்து வந்தது. தேவாலயத்துக்குச் சென்றவர் என் பாட்டியைக் கண்டு, அவள் மீது காதல் கொண்டார்.

அத்தியாயம் 4

என் பாட்டியின் அநுபவம்

என் பாட்டிக்கு 1849-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம்தேதி நீலக்குன்றுத் தேவாலயத்தில் திருமணம் நிறைவேறியது. அப்போது என் பாட்டனுருக்கு 1,500 டன்கள் எடையுள்ள கப்பல் சொந்தமாக இருந்தது. அதற்கு அவர் "மணப் பெண்" எனப் பெயரிட்டார். ஒரு நியூயார்க் கம்பெனிக்காக என் பாட்டனார் அதில் என் பாட்டியோடு பெர்முடாவுக்கு மாவு ஏற்றிச்சென்றார். பிறகு அங்கிருந்து அட்லாண்டிக் மகாசமுத்திரத்தைக் கடந்து லிவர்ப்பூலுக்குச் செல்ல அவர்கள் யோசித்தார்கள். அங்கிருந்து காடிஸுக்குச் சென்று அங்கு சிறிதுகாலம் இருந்துவிட்டு, மத்தியதரைக்

கடல், செங்கடல், இந்து மகாசமுத்திரம் வழியாகக் கல்கத்தா செல்வதென்றும் அங்கிருந்து சீனக் கடற்கரை வழியாக ஹாங்ஹாங்குக்குப் போவதென்றும் எண்ணியிருந்தார்கள். பின்னர், எல்லாம் சரியாக இருந்தால், அங்கிருந்து அரிசி ஏற்றிக்கொண்டு, பசிபிக் கடலைக் கடந்து, தங்கச் சுரங்கங்கள் தோண்டிக்கொண்டிருந்த கலிபோர்னியாக் கடற்கரைக்கு வருவார்கள். இதற்குள் கிட்டத்தட்ட இரண்டு வருஷம் ஆகிவிடும். ஆகவே தங்கப் பாறைகளை ஏற்றிக்கொண்டு தென் அமெரிக்காவைச் சுற்றிக்கொண்டு நியூயார்க் வழியாக நீலக்குன்று வந்து சேர்வார்கள் என்பது ஏற்பாடு. இடைக்கிடையே அந்தந்தக் கடற்கரைகளிலுள்ள துறைமுகங்களுக்கிடையே வர்த்தகமும் செய்வார்கள். இது தான் "மணப்பெண்" என்ற அக்கப்பலில் முதற் பயணத்தின் ஏற்பாடு.

நான்கு நாட்கள் கடலில் பிரயாணம் செய்த பிறகு ஹாட்டராஸ் முனைக்குச் சமீபத்தில் கப்பல் ஒரு பயங்கரமான புயலில் சிக்கியது. அது பற்றி என் பாட்டி சொல்லச் சொல்ல நான் ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறேன். புயல் எழுந்ததும் ஒரு நாள் காலையில் ஐந்து மணிக்கு என்பாட்டனார் பாட்டியின் அறைக்குச்சென்று தமது கம்பளி உடைகளைக் கொடுத்து அவளை உடுத்துக்கொள்ளச் சொன்னார். அவள் நடுநடுங்கிக் கொண்டே உடுத்து முடிவதற்குள் கப்பல் சாய்ந்துவிட்டது.

அவளைப் பாய் மரத்துக்குத் தூக்கிச் சென்றார் என் பாட்டனார். அங்கே பாய்மரத்தில் கட்டியிருந்தவற்றைக் காற்று அறுத்தெறியவும், அவள் உடைகளை மலைபோல் எழுந்த அலைகள் கிழித்தெறியவும் அவள் முப்பத்தாறு மணி நேரம் துன்பக்கடலுள் ஆழ்ந்து கிடைந்தாள். குழப்பம் சொல்லமுடியாது. மாலுமிகளின் கூக்குரல் ஒரு புறம். கப்பலில் பல பகுதிகள் உடைவதும் நெறிவதுமாகிய ஒரே இரைச்சல். சிலர் சபிப்பதும் சிலர் ஜெபிப்பதும். இவற்றையெல்லாம் பாட்டி எங்களிடம் தெரிவித்திருக்கிருள். அலைகள்

அடுக்கடுக்காய் வந்து மோதி மூழ்கடித்து மூச்சுத்திணறவைத் தனவாம். பட்டினியும் குளிரும் படாதபாடு படுத்தின. எரி கின்ற உடம்பால் வரும் வேதனை அதைவிடப்பாடு. அந்தக் கடலிலே அலைகள் தலைமேலே அடிக்க அவள் அழுந்திய அந்த அனுபவத்தினுல்தான் என்பாட்டி செவிடாகி அறுப தாண்டுகள் வருத்தமுற்றிருந்தாள் என்பது எங்களுக்குத் தெரிந்ததே. முதலில் மரணத்துக்குப் பயந்தவர்கள் பிறகு இறந்தால் தேவலையென்று நினைக்கும் நிலைமை ஏற்பட்ட பிறகே ஒரு பிரிட்டிஷ் கப்பல் தோன்றிற்று.

பிரிட்டிஷ் கப்பல் நெருங்கிப் படகு மூலமாக அவர்களைக் காப்பாற்ற முயற்சி செய்யவில்லை. அவ்வளவு இருட்டாக இருந்தது, புயல் நின்ற பிறகும்கூட. பிறகு ஓர் அற்புதம் நிகழ்ந்தது என்பாள் என்பாட்டி. ஒரு விண் வீழ் கொள்ளி தோன்றிற்று. அதன் வெளிச்சத்தில் பிரிட்டிஷ் கப்பல் தலைவன் படகுகளை அனுப்பி என் பாட்டனுரின் கப்பலில் தவித்துக்கொண்டிருந்தவர்களைக் காப்பாற்றினுர்.

என் பாட்டி சொன்ன விண் வீழ் கொள்ளி ஏதோ ஒரு பெரிய தீப்பந்தம் என்றும் அது என் பாட்டியிருந்த உடைந்த கப்பலுக்கு மேலே வானத்தில் தொங்கிக்கொண்டிருந்த தென்றும் சிறு பிள்ளையாயிருக்கும் போது நினைப்பேன். நான் நினைத்தது தவறு என்று பிறகு கண்டபின் எனக்குச் சிறிது வருத்தந்தான்.

என் பாட்டியும் பாட்டனுரும் மணமுடித்த இரண்டாவது மாதத்திற்குள் இவ்வாறு வீடு திரும்ப வேண்டியதாயிற்று. வீட்டில் அவர்கள் நெடுநாள் இருக்கவில்லை. பழைய கப்பலை இன்சூர் செய்திருந்ததனுல் பணம் கிடைத்தது ; நியூ இங்கி லாந்து வாசி என்பதால் திடம் இருந்தது. எனவே எலிஸா ஆன் சேஸ் என்னும் நாமம் பூண்ட புதுக்கப்பல் வாங்கிக் கொண்டு மீண்டும் அவர்கள் புறப்பட்டு விட்டார்கள். மாலு மியை மணந்த அக்காலப் பெண்கள் போல என் பாட்டியும்

தன் கணவர் போகும் இடமெல்லாம் தானும் போகத்துணிந்தாள். பன்னிரண்டு ஆண்டுகள் அவள் என் பாட்டனருடன் கப்பலிலேயே சுற்றி வந்தாள்; பிள்ளைப் பேறுகாலத்துக்கு மட்டுமே தன் ஊருக்கு வருவாள். முன்போல் விபத்துக்கள் வரவில்லை. வெளிநாட்டுத் துறைமுகங்கள் பலவற்றில் கப்பலில் இருந்துகொண்டு புஸ்தகம் வாசிப்பதும் தையல் தைப்பதும் அவள் பொழுது போக்கு. வெளிநாட்டுப் பட்டணங்கள் பலவற்றில் அவள் தங்கியிருக்கிறாள். மசூதிகளையும் ஐரோப்பாவின் கிறிஸ்துவ ஆலயங்களையும் அவள் கண்டிருக்கிறாள். பியூரிட்டன் மதத்தைச் சார்ந்த அவள் விரும்பத்தக்க வேற்று நாட்டு அனுபவமும் பெற்றாள்.

இத்தகைய வாழ்க்கை அவளுக்கும் அதன் பயனில் வளர்க்கப்பெற்ற மற்றவர்களுக்கும் எத்தகைய செல்வமாகும்! இதைவிட வேறு என்ன பெறவேண்டும்? என்பாட்டி கடல்கடந்து சென்று வாழ்ந்து பெற்ற அனுபவத்தின் அகலமும் ஆழமும் குழந்தைப்பருவத்திலேயே நான் அறிந்து வளர்ந்தேன்; இளமைப்பருவத்தில் வருந்தி உழைக்கும் நிலையையும் அதனால் ஏற்படும் கட்டுப்பாட்டையும் அறிந்தேன்; ஆகவே பெரிய நன்மை உண்டாவது திண்ணம். என்பாட்டியின் வாழ்க்கை அவள் தலைமுறையில் அவள் வாழ்ந்த இடத்தில் இன்னும் எத்தனையோ பேர்களுக்கும் ஏற்பட்டதுதான். அவளைப்போல் அவர்களும் எளியவர்களாய்ப் பிறந்து வளர்ந்தவர்களே. அவர்களுடைய வழிவந்தவர்களுக்கு அவர்களுடைய அனுபவம் தந்த செல்வம் அளவிடமுடியாது. மெயின் ராஜ்யம் 1820-ல் தான் மாஸச்சுஸெட்ஸிலிருந்து பிரிந்தது. ஆகவே கப்பல் நிறைந்து வளம் கொழித்த நாட்களில் அது இளம் ராஜ்யமே. என்பாட்டி போன்றவர்களுடைய வாழ்க்கை அனுபவத்தால் அதன் கடற்கரைப் பட்டிணங்களும் ஊர்களும் இன்றளவும் தெரியக்கூடிய தனிக்குணம் படைத்து விளங்கலாயிற்று.

பாகம் 4

கல்வியின் நோக்கங்களும் முறைகளும்

அத்தியாயம் 1

வீட்டுக் கல்வி

(1)

எங்கள் குடும்பத்தில் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் மட்டுமின்றி வீட்டிலும் கல்வி பயின்றார்கள். என் தந்தையைப் பற்றி முன்பு குறித்ததிலிருந்தே இது விளங்கியிருக்கும். உண்மையில் வீட்டில்தான் கல்வி அதிகமாகப் பயின்றார்கள். அவர்கள் புத்தி விசாலமாவதற்காக வெவ்வேறு திட்டங்களை என் தந்தை புகுத்தியிருந்தார். அவரே விதை விதைத்து, பயிரை வளர்த்துப் பார்த்து இன்புற்றார் என்று சொல்லலாம். எனினும் என் அன்னை களை எடுத்து, தண்ணீர் ஊற்றிப் பயிரைப் பாதுகாத்தாள்.

"என்றைக்கு வேண்டுமானாலும் ரோமாபுரிச் சக்கரவர்த்திகளைப்பற்றி உங்கப்பா கேட்பார். அரைமணி நேரம் அதை வாசி" என்பாள் அவள்.

"ஞாபகமிருக்கட்டும் விறகுக் குவியலின் அளவைக் கன அடிகளில் கண்டுபிடிக்கும்படி உங்கப்பா சொன்னாரல்லவா?" என்று ஞாபகமூட்டுவாள்.

"நாளைக்குச் சொல்லவேண்டிய (இலக்கண) வேற்றுமைகளை இன்றைக்கே சொல்லி உங்கப்பாவுக்கு ஆச்சரியமூட்டினால் என்ன?" என்பாள்.

எனது இளமைப்பருவத்தில் இம்மாதிரித் தாக்கீதுகளை நான் சகஜமாகக் கேட்டிருக்கிறேன்.

வாசிக்க எனக்கு என் தாயார் கற்றுக் கொடுத்தாள். அதாவது நானே வாசிக்கத் கற்றுக் கொள்ளும்படி அவள் ஒரு திட்டம் வகுத்தாள். நன்ருக நடக்கும் குடும்பத்தில் நான்கு வயதுக் குழந்தைக்கு அட்சரங்கள் தெரிந்திருக்க வேண்டுமென்பது நீலக்குன்றின் சம்பிரதாயம். நான் எழுத்துக்களைக் கற்றுக்கொண்டதும், பென்சிலையும், காகிதத்தையும் உபயோகிக்க வேண்டுமென்று எனக்குள்ள ஆசையையும், அறிவையும் என் தாய் தூண்டிவிட்டாள். சிறிய கதைப்புஸ்தகம் ஒன்றைக் கொடுத்து அதிலுள்ள வார்த்தைகளை அதிலுள்ளபடியே காகிதத்தில் எழுதுமாறு எனக்கு அவள் யோசனை கூறினுள். இவ்வாறு நான் வாசிக்கப் படித்தேன் என்பது எனக்கு எப்படி எப்படி விளங்க ஆரம்பித்தது என்று எனக்கு இப்போது நினைவில்லை; எப்போதாவது தெரிந்திருந்ததா என்றும் சொல்வதற்கில்லை. நான் வாசிக்கப் படித்தேன் என்பது ஒரு நாள் எனக்குத் திடீரென்று தெரிந்தது போன்றிருக்கிறது.

கோடைக்காலத்தில் தவிர, ஒவ்வொரு நாள் இரவும் சாப்பாடு முடிந்ததும், என் தகப்பனுர் அவருடைய பெரிய நாற்காலியில் உட்கார்ந்து கொள்வார். பெரிய சந்தேகம் தோன்றினுல் தான் நாங்கள் அவரைக் கலந்தாலோசிப்போம். என் தாய் தைக்கவேண்டிய துணிகளை நிறைய ஒரு கூடையில் எடுத்துக்கொண்டு வந்து உட்காருவாள். நாங்கள் கல்லூரிக்குச் செல்லும் காலத்தில் அக்கூடையில் அவளுடைய புத்தகங்களும் தவருமல் வரும். சாப்பிடும் அறையில்தான் நாங்கள் வாசிப்பது வழக்கம். விளக்கைச் சுற்றி ஒவ்வொருவரும் அவரவர்களுக்குரிய இடத்தில் உட்கார்ந்து கொள்ளுவோம். சிறிய குழந்தைகள் சிக்கிரமாகப் படுக்கப்போகும்; படுப்பதற்கு முன் பதினைந்து நிமிஷங்கள்தான் வாசிக்கவோ, கணக்குப் போடவோ வேண்டுமென்ருலும் அவர்களும் எங்களுடன் உட்கார்ந்தாகவேண்டும்.

நானும் என் சகோதரிகளும் உயர்தரப் பள்ளிக்குச் சென்று லத்தீன் படிக்க ஆரம்பித்தபோது என் தாயார் மிகவும் சந்தோஷத்துடன் அதைச் சொல்லிக் கொடுப்பாள். கிரேக்க பாஷையைச் சொல்லிக் கொடுப்பது என் தந்தைக்கு விடப்பட்டது. அவள் தையல் கூடை தன் அருகே ஒரு புறம் இருக்க, புஸ்தகத்தை முன்னால் விரித்து வைத்துக் கொண்டு உட்காருவாள்; எத்தனையோ கிழிந்த மேஜோடுகளைத் தைத்துக் கொண்டிருப்பாள்; ஆயினும் புஸ்தகத்திலும் ஒரு கண் இருக்கும். படிக்கும்போது நாங்கள் தடுமாறினால் திருத்துவாள்; தப்பிதம் செய்தால் கடிந்துகொள்வாள். **Gallic Wars** என்ற புஸ்தகத்தை நாங்கள் மும்முரமாக மொழிபெயர்க்கத் தொடங்கியதும், அதிலுள்ளவற்றை நாங்கள் சுற்றி வளைத்து அர்த்தம் செய்து கொள்வதையும் மிகக்கஷ்டப்பட்டு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதையும் என் அன்னை சற்றும் இரக்கமின்றிக் கண்டிப்பாள். படிப்பில் அவளிடம் கருணையை எதிர்பார்க்க முடியாது.

"உன் மொழிபெயர்பைக் கேட்டால் கல்லறையிலிருக்கும் ஓர் கெட்டோரிக்ஸின் உடம்பும் வருந்தும்" என்பாள் என் அன்னை, கிழிந்த கம்பளிக் கால்சட்டையை விளக்குக்கு நேரே கையில் தூக்கிப் பிடித்த வண்ணம்.

கிராமத்தின் கல்லூரியில் இரண்டாவது ஆண்டு வாசிக்கையில் கிரேக்க மொழி படிக்கத் தொடங்கினேன். அப்போது முதல் என் தந்தை என் வீட்டில் எனக்கு ஆசிரியரானார். உச்சரிப்பு விஷயத்தில் சற்றும் இரக்கம் காட்டமாட்டார்; ஹோமர் கவியின் தெய்வங்களைப் போலவே அவரும் கடுமையாக இருப்பார். இலக்கண முறைகளையெல்லாம் பிழையில்லாமல் மனப்பாடம் செய்து ஒப்பித்து எழுதவும் வேண்டும். இதைவிட எளிமையானதும் சந்தோஷமானதுமான மொழிபெயர்ப்பு வேலை செய்யக்கூடிய நிலைக்கு என் படிப்பு முன்னேறிய பின், பழங்காலப்

பெரியோர்களுடன் இரண்டாண்டு நாங்கள் ஒன்றுபோல் உயர்ந்த விஷயங்களைப் பற்றி ஆனந்தமாக உரையாடிக் கொண்டுவந்தோம்.

(2)

எந்தக் காலத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் இந்த மாதிரி இரவு வேளையில் பாடம் படிப்பது சகஜம் என்று நான் சொல்வதைச் சிலர் ஆட்சேபிக்கலாம். அவ்வாறு ஆட்சேபிப்பவர்களுக்கு முதலில் அமெரிக்க நாட்டுப்புறத்தில் இனத்தாலும் பழக்க வழங்கங்களாலும் ஆங்கிலேயரான மக்கள் பரம்பரையாய், தங்கள் கட்டுக் குலையாமல், ஒன்றுபோல் வாழ்ந்து வந்த விதம் தெரியாது. இரண்டாவது, ஆதி அமெரிக்கச் சூழ்நிலையும் நாட்டுக்குக் கிடைத்த அறிவுச் செல்வமும் ஒன்ருய்க் கலந்ததையும் அவர்கள் அறியார்கள். 1630-ல் அமெரிக்காவுக்குக் குடியேற வந்த பியூரிட்டன் மதக் கூட்டத்தாருள் தலைவர்களாக இருந்தவர்களில் முந்நூறு பேருக்குமேல் கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலைப் பட்டதாரிகளாக இருந்தனர் என்பதும் கவனிக்கத்தக்க விஷயம் அன்ரே? நியூஇங்கிலாந்திற்கு அவர்களால் முக்கியமான ஒரு இயல்பு ஏற்பட்டது. அதனை நியூ இங்கிலாந்தினர் பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்ருண்டுகளில் தங்களோடு கொண்டு சென்று மத்திய மேற்கு பூமியிலும் மேற்குக்கோடி பூமியிலும் பரப்பினர்கள். கையும் கருத்தும், பண்பட்ட பழக்க வழக்கங்களும் அவசியமான பயிர்த்தொழிற் பழக்கமும் குடும்பப் பொறுப்பும் ஒன்ருயிருப்பதையும், இணைந்திருப்பதையும், கலந்திருப்பதையுமே அவர்கள் இயல்பு காட்டிற்று. மனதுக் கடுத்த விஷயங்களில் என்றும் வாடாத உயர்வும், புனிதத் தன்மையும், மெய்வருந்த இடைவிடாது உழைக்கும் உழைப்பும் ஒன்ருய் இருப்பது, இரு நூற்ருண்டுகளுக்கு மேலாக, ஆங்கிலேயர் வழிவந்த அமெரிக்கருக்குச் சிறிதும் வித்தியாசமாகத் தெரியவில்லை.

(3)

வீட்டில் நாங்கள் பயின்ற கல்வி புஸ்தகங்களோடு நின்று விடவில்லை. தினசரி நாங்கள் செய்து வந்த அலுவல்கள் மூலமாகவும் நாங்கள் கல்வி பயின்று வந்தோம். அதைவிட அதிகமாக எங்கள் சூழ்நிலையிலிருந்து கற்ருேம்; சுற்றுப்புறத்தில் நடமாடும்போது புத்திசாலித்தனத்துடன் கூர்ந்து கவனித்து அறிவை விருத்திசெய்து கொள்ள இளமையிலிருந்தே எங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. நாங்கள் விவசாயிகள் அல்ல எனினும், கிராமத்தில் வசித்த மற்றக் குடும்பங்களைப்போல நாங்களும் எங்களுடைய சில ஏக்கர் நிலத்தில் பெரும்பகுதியை நாங்களே உழுது பயிர் செய்தோம். வெங்காயம், பீட்ரூட் முதலியவற்றின் வேற்றுமை எங்களுக்குப் பிறந்தவுடனே தெரிந்திருந்தது போலத் தோன்றிற்று; அவ்வளவு எளிதாக நாங்கள் வெவ்வேறு இனங்களை அறிந்து பேசினேம். வசந்த காலத்தில் கலப்பையின் கொழுச்சென்ற வழியைக் கவனித்துக் கொண்டிருப்போம்; அதிக வளம் இல்லாத நிலம் காய்கறித்தோட்டமாக மாறுவதைக் காண்போம். களையெடுப்பதற்கும் நிலத்தைக் கொத்துவதற்கும் நாங்கள் உதவி செய்வோம். மனக்கசப்பில்லாமல், உருளைக்கிழங்குப் பூச்சிகளைப் பொறுக்கி, அவற்றைத் தகரக்குவளைகளுக்குள் போடுவோம். மொச்சை பட்டாணி ஆகிய செடிகள் கொடிவீசிப் படர்வதற்குத் துணைசெய்வோம்.

என் தந்தை எங்களுக்கு மரங்களின் பெயர்களைச் சொல்லிக்கொடுத்தார். பறவைகள் என்ருல் அவருக்குப் பிடிக்கும். அவற்றைப்பற்றி அவருக்குத் தெரிந்ததெல்லாம் எங்களுக்குக் கற்றுக்கொடுத்தார். இவ்விஷயத்தில் மற்றவர்களைவிட நான் அவர் துணையை அதிகமாகப் பெற்றேன். அவருக்கு வயதான காலத்தில் உடல் நலம் குன்றியிருந்ததால் அவர் அதிகாலையில் நெடுந்தூரம் அமைதியாக உலாவப் போய்

விட்டு வருவார்; அப்போது நானும் தம்முடன் வரும்படி அவர் எனக்கு ஊக்கமளித்தார். வசந்தகாலத்தில் நாங்கள் காலைச் சாப்பாட்டுக்குமுன் புறப்பட்டு எங்கள் ஊன்றுகோல்களைச் சுழற்றிக்கொண்டு, மலை வழியே சாலைகள் அல்லது காட்டுப் பாதைகளுக்குப் போவோம். அச்சமயங்களில் நான் பறவைகளைப்பற்றிய பல அரிய விஷயங்களை அவரால் அறிந்து கொண்டேன்.

அத்தியாயம் 2

இளமையிலேயே ஆசிரியர்களைப் போற்றினேம்

(1)

1892-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் என் தந்தை வீட்டுக்குத் திரும்பும்போது கையில் பாஸ்டன் "ஹெரால்ட்" என்ற பத்திரிகையைக் கொண்டு வந்தார். வாசலைத்தாண்டி உள்ளே வரும்போது அவர் முகம் இருந்த விதத்தைப்பார்த்ததும் ஏதோ கவலைக்குரிய விஷயமிருந்ததென நாங்கள் புரிந்து கொண்டோம். நாங்கள் அதைப்பற்றி அதிக நேரம் யோசிக்க விடவில்லை அவர்.

"ஜான் கிரீன்லீப் விட்டியர் காலமானுர்," என்று என் தந்தை சமையலறையிலிருந்த என் தாயாரிடம் கூறினுர். மறுபடியும் உரக்க என்பாட்டியிடம் செய்தியைச் சொன்னுர். உடனே என் பாட்டியின் முகத்தில் ஆச்சரியமும் வருத்தமும் தோன்றின.

என் தமக்கை மைல்ட்ரெட்டுக்கு அப்போது வயது எட்டு. எனக்கு வயது ஆறு. நாங்கள் சிறுவர்களாயினும் எங்களுக்கு விட்டியரைப் பற்றித் தெரியும். ஆசிரியர் வினையாட்டின் மூலம் அவர் வழுக்கைத்தலையும் தாடியும் உடையவர் என்பதை அறிந்திருந்தோம். என் தாயார் அவருடைய நூல்களை வாசித்துக் காட்டி யிருக்கிருள். அத்துடன் அவர்

ஒரு கவி என்பதும் எங்களுக்குத் தெரியும். எங்களுடைய வயதிலும் நாங்கள் கவிகளை, ஏன் எல்லா நூலாசிரியர்களை யும் போற்றிவந்தோம். அவர்கள் அமரர்கள் என்பதை நாங்கள் உணர்ந்தோம். அவர்கள் என் தந்தையின் நேரத் தையும் கவனத்தையும் கவர்ந்தவர்கள்; எங்கள் ஞாபக சக்தி யைச் சோதிக்கும் பற்பல வித்தைகளுக்கும் விஷயதானம் அளித்தவர்கள்; மாலையில் வாசிக்கும் நேரத்தை எங்களுக்கு இன்பமாய் ஆக்கியவர்கள்.

எங்களுள் மூத்தவர்கள் மூன்று பேர் விட்டியரின் கவிதைகளில் ஒவ்வொரு செய்யுளை மனனம் செய்து இரவு படுக்குமுன் என் தந்தைமுன் கூறவேண்டு மென்று என் தாயார் அன்று மாலை யோசனை கூறியபோது நாங்கள் முணுமுணுக்கவில்லை. அதற்கடுத்த ஞாயிறன்று தேவாலயத்தில் மதகுரு விட்டியரின் ஸ்தோத்திரப் பாடல் ஒன்றைச் சொல்லிப் பிரார்த்தனையிலும் கவியின் பெயரைக் குறிப்பிட்டபோது, பெரிய மனிதர்களைப் பற்றி எங்களுக்குத் தெரிந்திருந்ததில் பெருமையுண்டாயிற்று.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மற்றொரு செய்தி அவ் வாறே எங்களைக் கலக்கி விட்டது. 1894-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்ஸன் இறந்துவிட்டார் என அறிந்தோம். என் பாட்டி மிகவும் கவலைப் பட்டாள். ஸ்டீவன்ஸன் எழுதிய "திரவியத்தீவு" முதலிய கதைகளை அவள் ஆவலுடன் வாசித்திருந்தாள். அத்துடன், அவ ருடைய வாழ்க்கை வரலாற்றை அவள் அறிந்திருந்தாள். ஸ்டீவன்ஸனின் பிரமிக்கத்தக்க வாழ்க்கையின் பல நுணுக் கங்களையும் அவள் ஆவலுடன் தன் நினைவில் போற்றி வந்தாள்.

கவி லாங்பெலோ, அவருடைய சகோதரர் ஸாமுவேல் ஆகிய இருவரிடமும் எங்களுடைய கிராமத்திலுள்ளோர் எல் லோருமே பிரத்தியேக அக்கறையும் பெருமையும் கொண்டி ருந்தோம். ஸாமுவேல் ஸ்தோத்திரப் பாடல்கள் எழுதினர்.

நான் பிறப்பதற்குப் பல வருஷங்களுக்குமுன் அவர் பல கோடை நாட்களை எங்கள் கிராமத்தில் கழித்திருந்தார். அவருடைய காருண்யத்தைப் பற்றியும் தனித்துள்ள பழக்கவழக்கங்களைப்பற்றியும் பல கதைகள் வழங்கிவந்தன. சிறுவர்களாகிய எங்களுக்கு "ஹிபவாதா", "எவாஞ்சலின்" முதலிய நூல்களை எழுதிய லாங்பெலோதான் அதிகம் பிடித்திருந்தது என்பது இயற்கையே. கவியே ஐம்பது வயதுக்குப் பிறகு சில மாதங்கள் குடாக் கடலுக்கு சமீபத்திலுள்ள ஒரு பழைய வீட்டில் தங்கியிருந்தார்.

லாங்பெலோ விஷயத்தில் எங்கள் குடும்பத்துக்குத் தனிப் பெருமையும் இருந்தது. என் அன்னையின் தகப்பனார் சிறுவனாக இருக்கும்போது கடலோரத்தில் கவியைக் கண்டார். "நட்சத்திர-மீனைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?" என்று கவி என் பாட்டனாரைக் கேட்டார். ஆமாம். நீலக் குன்றின் கடற்கரையில் நீலக் குன்றைச் சேர்ந்த ஒரு சிறுவனைப் பார்த்து அக்கவி கேள்வி கேட்டார்.

அந்தக் கேள்வியே எங்கள் அந்தஸ்தை உயர்த்தப் போதுமானது. போன நூற்றாண்டு இறுதியில் அவரே தலைசிறந்த கவியாக இருந்தார். ஆனால் எங்களுடைய குடும்பத்தின் கியாதியை அதிகப்படுத்தும் வகையில் லாங்பெலோ ஒரு விஷயத்தையும் குறிப்பிட்டார். அவருடைய கேள்விக்குப் பதில் வரும் முன்பே, அவராகவே சொன்னார்: "சிறுவர்களுக்கு எப்போதுமே எல்லாம் தெரிந்திருக்கும்" என்று.

(2)

என்னுடைய பதினோராவது வயதில் நானும் குடும்ப விளக்கு கொழுந்து விட்டெரிய என்னாலான உதவியைச் செய்தேன். 1898ம் ஆண்டில் நான் முதன் முதலாக ஓர் ஆசிரியையைச் சந்தித்தேன்.

அவர் லாரா இ. ரிச்சர்ட்ஸ். என் இளமைப் பருவத்தில் உயிருடன் இருந்த ஆசிரியர்களில் அவருக்கு இணையே யாரும் இல்லை என்று சொல்லலாம்.

"காப்டன் ஜனவரி" யின் பிரசித்திபெற்ற ஆசிரியை யாகிய அவர் அடுத்துள்ள எல்ஸ்வொர்த் நகரத்தின் தேவா லயத்தில் பேசுவதற்காக விஜயம் செய்தார். என் தந்தைக்கு எல்ஸ்வொர்த்தில் கோர்ட்டு வேலே. அவர் என்னே அங்கு அழைத்துச் சென்ருர். சாயந்திர வேளேயில் ஆசிரியை பேச்சைக் கேட்க என் அன்னேயின் சினேகிதை ஒருத்தி என்னே அழைத்துச் செல்வதாக ஏற்பாடு. அச்சமயம் மிகவும் குளிராக இருந்தது; பனிக்கட்டி நிறையப் படர்ந் திருந்தது.

நீண்ட தூரம் குளிரில் வண்டியில் போகும்போது என் தந்தை என்னுடன் அதிகம் பேசாமலிருந்தது எனக்கு மகிழ்ச்சி; நான் மாலே வேளேயில் ஆசிரியையைப் பார்க்கப் போவது பற்றியே கனவு கண்டுகொண்டிருக்க விரும்பினேன். பிற்பகலில் நாங்கள் எல்ஸ்வொர்த்தை அடைந்ததும் முன் சொன்ன அந்த சினேகிதை என் மூக்கு நுனி பனியால் வெடித்திருக்கிறது என்றதும், கனவுலகில் இருந்த எனக்கு என்மேல் அவள் கவலேயும் அன்புங் காட்டியது எரிச்ச லாகவே இருந்தது.

அன்று மாலே நான் அப்படியே சொக்கிவிட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

அக்காலத்தில் ஆசிரியர்கள், வசீகரம், நுண்ணறிவு, மேதை இவை கலந்த பிரத்தியேக சூழ்நிலேயில் வசித்துவந்த தாகப் பாவிக்கப்பட்டது. தேவாலயத்தில் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த நான் அடக்கத்துடனும் அவாவுடனும் மேதையைக் காண்பதில் பரம திருப்தி அடைந்தேன்.

ஆசிரியை பேச்சை முடித்தவுடன், எங்களுக்காகப் படிக்க முன்வந்தார். படி இறங்கி வந்து, தரை மட்டத்தில் போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார் அவர். இமை கொட்டாது நான் அவரையே நோக்கிக்கொண்டிருந்ததால்

அவருடைய கவனத்தை நான் கவர்ந்தேன் என்று நினைக்கிறேன். அது எப்படியாயினும் அவர் என்னை சமீபத்தில் வருமாறு அழைத்தார்.

"சிவந்த கன்னங்களுடைய பெண்கள் எப்போதும் எனக்குப் பிடிக்கும்," என்று சொல்லி அவர் என் கையைப் பற்றினார். "நான் வாசிக்கிறேன். நீ இச்சிறு நாற்காலியில் உட்காருகிறாயா?" என்று அவர் மேலும் சொன்னார்.

அன்றிரவு என் தாயின் சிநேகிதை வீட்டுக்குச் செல்லும்போது நான் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. நான் உணர்வற்ற பெண் என்றே அவள் நினைத்திருப்பாள். வீட்டுக்குத் திரும்பும்போதும் என் தந்தையுடன் நான் அதிகம் பேசவில்லை. என் சகோதரிகளுக்கும் நண்பர்களுக்கும் அன்று நடந்ததை விவரிக்கும்போதுதான் நான் தாராளமாகப் பேசினேன். அப்போதும் கூட அச்சம்பவத்தினால் உண்டான உணர்ச்சியை நான் விவரிக்கவில்லை. விவரிக்கவும் முடியாது.

அத்தியாயம் 3

கிராமப் பள்ளிக்கூடம்

தற்காலத் தரத்தின்படி பார்த்தால், நீலக்குன்றிலிருந்த கிராமப்பள்ளிக்கூடத்தில் நான் சரியாகக் கல்வி பயிலவில்லை. அக்காலத்தில் கிராமப் பள்ளிக்கூடம் அநேகமாகப் போதனா சாலையாகவே விளங்கிற்று. தனிப்பட்ட குண விசேஷங்களுக்குச் சலுகையோ, உள்ளத்திற்குச் சுதந்திரமோ அளிக்கவில்லை. பொது நன்மைக்காக நாங்கள் ஒவ்வொருவரும் தத்தம் சிரமத்தைப் பாராமல் ஒத்துப்போகக் கட்டாயப் படுத்தப்பட்டோம் என்றால், மனித வாழ்க்கையின் மாற்ற முடியாத விதியைத்தான் படித்தோம் என்று சொல்ல வேண்டும். தம் மனம்போல ஒருவர் எதையும் செய்யலாம்

என்ற முறையில் இயங்கவில்லை மனித வாழ்க்கை. மேலெழுந்தவாரியாகக் கவனிப்பவர்க்கும் இது புலனாகும்.

இன்றுபோலவே அன்றும் பள்ளிக்கூடம் ஒரு குன்றின் மீது இருந்தது. அதிலிருந்து ஊர் முழுவதையும் கடலையும் பார்க்கலாம். என்னுடைய தலைமுறையில் எல்லாரும் அதில் படித்தவர்களே. அதில் இரண்டு பெரிய அறைகள் இருந்தன. கீழே பத்து வயதுவரையுள்ள சிறுவர்கள் வாசித்தார்கள். மாடியில் பத்திலிருந்து பதின்மூன்று பதினான்கு வயதுவரையுள்ள சிறுவர்கள் வாசித்தார்கள். ஒவ்வொரு வகுப்புக்கும் உபாத்தியாயினியாக ஒரு மாது இருந்தாள். அவளுக்குக் கற்றுக்கொடுக்கும் வேலை அதிகமாகவே இருந்தது. முக்கிய பாடங்களே இருபதுக்கு மேல் ஒரு நாளைக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமாதலால், இதர விஷயங்கள் அவளுக்குத் தெரிந்திருந்தாலும் அவற்றில் கவனம் செலுத்த அவளுக்கு நேரமில்லை. அவற்றில் ஏதாவது நன்மை உண்டென்று கண்டாலும் அவற்றைக் கவனிக்க அவளுக்கு நேரம் கிடையாது.

இரு அறைகளிலும் இருந்த மேஜை நாற்காலிகள் ஸ்தல ஸ்தாபன இலாகாவின் வறுமைக்கு அத்தாட்சியாக இருந்தன. அவசியம் என்று கருதப்படுபவை தவிர வேறு ஒன்றும் கிடையாது. தீர்க்கதரிசி மோஸஸின் இரண்டு படங்கள்தான் அறைகளை அலங்கரித்தன. அத்துடன் முதுமொழிகள் கொட்டை எழுத்துக்களில் கரும்பலகைகளுக்குமேல் எழுதப்பட்டிருந்தன; வேண்டுமானால் அவற்றையும் அலங்காரம் என்று சேர்த்துக் கொள்ளுங்கள். கீழ் வகுப்பில் வலதுபுறம் சிறுமியர் இருந்தனர். அவர்களுக்கு முன்,

"இந்த உலகத்தின் வழியாய் நான் ஒரு முறைதான் செல்வேன். ஆகவே என்னால் முடிந்த நற்செய்கையையும் என்னால் முடிந்த அன்பையும் இப்போதே செய்வேனாக. காலந்

தாழ்த்த வேண்டாம்; கவனியாமல் இருக்க வேண்டாம்; இவ்வழியே மீண்டும் வரமாட்டேன்'' என்ற எழுத்துக்கள் பெரிதாகக் கரு நிறத்துடன் ஒவ்வொரு நாளும் விளங்கிக் கடமையை உணர்த்திக் கொண்டே யிருக்கும்.

இடதுபுறத்திலிருந்த சிறுவர்களுக்கு முன், அப்போஸ் தலர் ஜேம்ஸின் எச்சரிக்கை எழுதப்பட்டிருக்கும்:

"நாவு ஒரு சின்ன உறுப்பே; அது வீண்பெருமை பாராட்டுவதோ பெரிய காரியங்களாகும். ஒரு சின்ன நெருப்பினால் தூண்டப்படுவது எவ்வளவு பெரிது.''

மேல் வகுப்பிலும் இத்தகைய நல்லுரைகள் உண்டு. அங்கும் வலதுபுறத்திலேயே சிறுமியர் இருப்பர். அவர் களுக்கு:

"மனச்சாட்சி என்று சொல்லப்படும் சிறிய அந்த வானத்து விளக்கு நின் நெஞ்சில் அவியாமல் இருக்க முயற்சி செய்'' என எழுதியிருக்கும்.

பையன்களுக்கு:

"தன் முயற்சியில் ஒருவன் கண்ணுங் கருத்துமாய் இருக்கக் காண்கிறாயா? அவன் மன்னர்கள் முன்னிலையில் நிற்பான்; அவன் கேவலமான மனிதர் முன் நிற்க மாட்டான்.''

புஸ்தகம் சிலேட் இவற்றைவிட்டு யாரொருவர் ஏறெடுத்துப் பார்த்தாலும் இந்த முது மொழிகளும் மோஸ ஸின் படமுமே எதிர்ப்படும்.

இந்த முதுமொழிகளைப் போலவே எங்கள் உபாத்தியா யினிகளும் மாறுவது அபூர்வம். அவர்கள் அம்மொழிகளுக்கு இலக்கணமாகவும் அவற்றைக் கற்பிப்போராகவும் இருக்க வேண்டும் என்பது நினைப்பு. அவர்கள் உள்ளூரில் இருந்த

வர்கள். அடுத்துள்ள பள்ளிக்கூடத்தில் அவர்கள் உபாத்திமைத் தொழிலில் ஏதோ பயிற்சியடைந்தவர்கள். செயின்ட் பால் போதித்தும், நடந்தும் காட்டியதுபோல அந்த உபாத்தியாயினிகள் ஒரே குறிக்கோளுடன் தங்கள் பணியைச் செய்து வந்தனர். மாணவர்கள் தங்களுக்கு மரியாதை செய்யும்படி அவர்கள் நடந்தார்கள். குறிப்பிட்ட பாடத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். அதில் அவர்கள் வெற்றி பெற்றார்கள்.

கற்பதை நன்றாகக் கற்கவேண்டுமென்பதில் அவர்கள் பெருமையூட்டினார்கள்; ஒரு வார்த்தையை' மாணவர்கள் தவறாக எழுதக்கூடாது. பாடங்களில் தவறு ஏற்பட்டால் மாணவர்கள் வருத்தம் தெரிவித்துத் திருந்த வேண்டும்; பொருத்தமாகக் கண்ணீரும் வடிக்கவேண்டும். இவ்வளவுக்கும் மாணவர்கள் எதிர்நினைப்பின்றி இணங்கியிருந்தார்கள்.

அக்காலத்தில் எங்கள் ஆசிரியைகள் மதகுருமார்கள் செய்யும் வேலைக்குத் துணையாகத் தாங்களும் மதவிஷயங்களையும் அறநெறியையும் போதிக்கும்போதுதான் ஆசிரியைத் தொழிலில் உயர்ந்தும் சிறந்தும் விளங்குவதாகக் கருதப்பட்டார்கள். அவர்கள் சுவிசேஷத்தைப் பள்ளியில் எங்களுக்கு வாசிப்பார்கள். நாங்கள் அதிலிருந்து பல பகுதிகளை ஒப்பிப்போம்.

மத போதனைக்குப் பிறகு கீழ் வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் மாணவியும் ஒரு மூதுரையைக் கூறவேண்டும். அது நன்னடத்தையை வற்புறுத்துவதாக இருக்க வேண்டும். மூதுரைகளைக் கண்டு பிடித்துச் சொல்வது முற்றும் அவரவர் வேலை. நாங்கள் மூதுரைகளைப் புஸ்தகங்களிலிருந்து பொறுக்கியோ, பெற்றோர்களிடமிருந்து கேட்டு வந்தோ முன்பு படித்ததை நினைவுப் படுத்தியோ கூறுவோம். கடைசி நேரத்தில் நாங்களாகவே யோசித்துத் தோன்றியதைச் சொல்வதுமுண்டு.

உபாத்தியாயினி மாணவன் பெயரைக் கூப்பிட்டவுடன் அவன் உட்கார்ந்திருக்குமிடத்தில் சரியாக எழுந்து நின்று மூதுரையைக் கூறவேண்டும். மிகச் சிறிய பையனும் சொல்லித்தான் ஆகவேண்டும். அம் மூதுரை எவ்விஷயத்தைப் பற்றியும் இருக்கலாம்; பெரிய அறநெறி வாக்கியங்களாகவும், நடைமுறையில் சீராகவும் அழகாகவும் வாழ்வதற்குரிய விஷயமாகவும் இருக்கலாம். சில உதாரணங்கள் விஷயத்தை விளக்கும். கவலையாய்ப் படிக்கும் ஒரு சிறிய மெலிந்த பெண், "கப்பல் சேதமானால் முதலில் பெண்களையும் குழந்தைகளையும் காப்பாற்று," என உணர்ச்சிமிக்க விதமாய் உரக்கக் கூறுவாள். "காலையில் சாப்பிடும்பொழுது ஒரு நாளும் இரண்டு தின்பண்டம் கேளாதே" என்று இறுக்கமான கால்சட்டை யணிந்த பருத்த சின்னப் பையன் ஒருவன் எப்போதும் வருத்தம் கலந்த குரலில் முடிந்தபோதெல்லாம் ஒப்பிப்பான். இன்னொரு குழந்தை; எப்போதும் வார்த்தைகளைச் சரியாக உச்சரிக்கத் தெரியாமல் வகுப்பின் கடைசியில் இருக்கும்; உப்புச் சப்பில்லாமல் அக்குழந்தை "அறையைக் கூட்டும்பொழுது மூலைகளை மறக்காதே" என்று அடிக்கடி சொல்வது அதன் அன்னை தன் வீட்டைக் கவனித்துக் கொள்ளும் திறமையையே எடுத்துக் காட்டுவதாகும்.

எங்களுடைய பாடப்புஸ்தகங்களும் எங்கள் உபாத்தியாயினிகளைப் போலவும் மூதுரைகளைப் போலவும் என்றும் மாறுதவை. ஸ்தலஸ்தாபன இலாகா அப்புஸ்தகங்களை வழங்கி வந்தது. புஸ்தகங்கள் ஏடு ஏடாகக் கிழிந்தாலொழிய புஸ்தகங்களை மாற்றுவது விவேகமாகவும் அவசியமாகவும் அவர்களுக்குப் படவில்லை.

பாடப் புஸ்தகங்களை அடிக்கடி மாற்றுததால் மாணவர்களுக்கு ஒரு சௌகரியம் இருந்தது. உதாரணமாக, நான் பல வருஷங்கள் வரை ஒரே வசன புஸ்தகத்தை வாசித்து வந்தேன். வாசிப்பதில் எனக்குப் பிரியமிருந்ததால் எனக்கு

புஸ்தகத்திலிருந்த எல்லாப் பாடங்களும் பாராமல் தெரியும். ஒரே வசனப்பாடப் புஸ்தகத்தையே பல வருஷங்கள் படித்து நன்மையடைந்தேன் என்பது என் நினைவு. வாசிப்பதுதான் எனக்குக் கைவந்த ஒரே பாடம்; ஆதலால் மிக உயர்ந்த புஸ்தகம் எனக்குக் கொடுக்கப்படலாயிற்று; அதை ஆதி முதல் அந்தம் வரை படித்தறியும் வரை அதிலேயே இன்ப மாய்க் காலங்கழித்தேன்.

அதிலிருந்த பாடங்கள் அநேகமாக எங்களுக்குப் புல னாகாதபடி உயர்ந்த விஷயங்களைக்கொண்டவையாக இருக்கும். ஆயினும் அதிலிருந்த ஒவ்வொன்றையும் படித்துத் தீர்த் தேன். சின்னப்பிள்ளைகளுக்கு அவ்வளவு பெரிய புஸ்தகம் எப்படிக் கல்வியூட்டியது என்று காண்பதும் கண்டு சொல் வதும் கடினம். அதிலிருந்தவை பல எங்களுக்குப் புரியாதவை என்பது நிச்சயம். உரைநடை, செய்யுள் இவற்றைப் பாரா மல் படிக்க வேண்டியது பாடம். எங்கள் கிராமப் பள்ளிக் கூடத்தில் அதனால் மதிக்கவொண்ணாத நன்மை ஏற் பட்டது. பேச்சு வழக்கில் இல்லாத பல சொற்களை அறிந் தோம். சந்தங்களின் அமைப்பு நயங்களையும் சிறந்த ஆங்கில உரைநடையையும் எப்படியிருக்கும் என உணர்ந்தோம்.

மூன்று அல்லது நான்கு வகுப்புகள் ஒரே அறையில் கூடி யிருந்து கற்பதும் பரீட்சை கொடுப்பதும் ஆக இருந்ததில், எங்களுக்குப்பல சௌகரியங்களும் வேடிக்கைகளும் இருந்தன. ஒரு மாணவனின் பாடங்கள் முடிந்துவிட்டால் மற்றப்பாடங் கள் நடக்கும் வரை அவன் பேசாமல் அறையில் உட்கார்ந் திருக்க அநுமதிக்கப்பட்டான். அதனால் மேல்வகுப்புப் பாடங்களையும் சிறுவர்கள் எளிதில் அவ்வகுப்புக்குப் போகு முன்பே கற்றுக்கொள்ள முடிந்தது.

இத்தகைய சலுகையும் வழக்கமும் எனக்கு கீழ்வகுப் பின் முதல் வருஷத்திலேயே ஒரு அநுபவத்தை உண்டாக்

கின ; அது இன்னும் விசேஷமாக என் மனத்தில் பதிந்திருக்கிறது. உச்சரிப்புப் பாடத்தைக் கற்று விட்டேன் ; ஓர் எண் கூட்டலும் போட்டு விட்டேன் ; எனவே பார்த்துக் கேட்டுக் கொண்டிருக்கலாம் என அனுமதிக்கப் பட்டேன். சாதாரண பின்னங்களைக் கற்கும் வகுப்பு ஒன்று நடந்து கொண்டிருந்தது ; சில உதாரணங்கள் கரும்பலகையில் செய்யப் பட்டிருந்தன. அவர்களுடைய எண்கள் ஒரெண் வரிசையிலேயே உள்ள என் கணக்குகளைப் போலல்லாமல் ஒன்றின் கீழ் ஒன்ருகவும் நூதனமான குறிகள் இடையிட்டும் கவர்ச்சிகரமான வடிவங்களைப் பெற்றுவந்தன.

$$\frac{1}{2} + \frac{3}{4} = \frac{2}{4} + \frac{3}{4} = \quad = 1\frac{1}{4}$$

இவை எனக்கு அழகாக மட்டுமல்ல அற்புதமாகவும் தோன்றின. அவற்றை எழுதவேண்டும் என்ற அவாவை என்ருல் அடக்க முடியாமல், சுவையில்லாத என் சொந்தக் கணக்கை மறைத்துவிட்டு ஸ்லேட்டின் மறுபக்கத்தில், கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டதுபோல் தோன்றும் இந்தக் குறிகளைப் பார்த்தெழுதத் தொடங்கினேன் ; அக்குறிகள் என்னென்னவற்றைக் குறித்தனவோ எனக்குத் தெரியாது.

அந்தக் கரும்பலகையிலும் கடைசியில் என் சொந்த ஸ்லேட்டிலும் இருந்த அந்தப் பின்னங்கள் ஆறு வயதுப் பிள்ளையாகிய என்னை எவ்வாறு பாதித்தன என்று விவரிப்பதும் இன்னவாறுதான் என்று இலேசாகக்குறிப்பிடுவதும் கூட என்ருல் இயலாது. அவற்றை நான் வணக்கத்துடன் எண்ணிக்கொண்டிருந்தேன்; இதனை நான் ஒருபோதும் மறக்க முடியாது. அன்று காலை அந்தக் கிராமப் பள்ளிக்கூடத்தில் சாதாரணப் பின்னங்களின் அழகையும் ஒழுங்கையும் முதன் முதலாக ஏறெடுத்துப் பார்த்ததனுல்தான் என்றென்றும் எனக்கு விஞ்ஞானத்தின்மேல் மரியாதையும் அச்சமும் உண்டாயின எனக் கருதுகின்றேன். கணக்கு விதியின் பொருத்தத்தை

நான் அந்த விநாடிகளிலேயே சிறிது உணர்ந்தேனே என்னவோ யாரால் சொல்லமுடியும்? கணக்கை கடைக் காரன்போலன்றித் தத்துவஞானி போல இருந்து காண வேண்டும் என்று கட்டளையிட்டுக் குறிக்கோளும் அமைத்துத் தந்த பிளேட்டோவின் லட்சியத்தை நான் என் வாழ்க்கை யில் ஒரு முறை அடைந்துவிட்டோனே என்னவோ?

அத்தியாயம் 4

உயர்தரப் பாடசாலையும் புராதன ஏற்பாடும்

நீலக் குன்றிலிருந்த தேவாலயத்தின் அநுமதியுடன் அதன் அருகிலேயே 1303ம் ஆண்டில் உயர்தரப் பாடசாலை அமைக்கப்பட்டது. முதலிலிருந்தே அப்பள்ளியில் லத்தீன், கிரேக்க பாஷைகள் கற்றுக்கொடுக்கப்பட்டன. இந்தப் "புராதான மாந்தரின் உன்னத சரித்திரங்களை" எல்லா மாணவர்களும் கற்றறிய வேண்டும்.

அக்காலத்திலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியி லும் அப் புராதன இலக்கியங்களுக்கு மிகுந்த மதிப்பு இருந்து வந்தது. பாடசாலையிலிருந்த எல்லா மாணவர்களும் கிரேக்க பாஷையைக் கற்கவில்லை யென்றாலும் கிரேக்க மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றவர்தான் ஆசிரியராக முடியும் என்று சொல்லும்படியாகப் பலர் அதைப்படித்தனர். லத்தீனையும் எல்லா மாணவர்களும் படிக்கவில்லை என்றாலும் அப் பூரண இலக்கியம் படித்தவர்தான் அறிவாளியாகவும் படித்த மேன்மக்களுள் ஒருவராகவும் விளங்கமுடியும் என்று சொல்லும்படியாகப் பலர் அதைக் கற்றனர். பெண்களும் அப்படியே. அதற்கு இணையான பாடம் வேறில்லை. புதிதாகத் தொடங்கப் பட்டிருந்த லத்தீன் விஞ்ஞானப் பாடமும் ஆங்கிலப் பாடமும் மொழியறிவு வேண்டும் பாடம் அல்ல. இவையும் அதற்கு இணையாகா.

பிதிரார்ஜித சொத்து என்ற ஒரு காரணத்தினலேயே புராதன இலக்கியங்கள் மூன்று நூற்றுண்டுகளாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டன என்று விளக்குவது எளிதும் இயற்கையுமாகும். இங்கிலாந்திலிருந்து புதிய நாட்டில் குடியேறியவர்கள் பழமையானதும் நிலைத்ததுமான கல்வி முறையைப் புதிய நாட்டிலும் அநுஷ்டித்தது சகஜம்தான். ஆனால் அம்முறை புதிய நாட்டின் மூலை முடுக்குகளிலும் மேற்குத் திசைகளிலும் பரவி இடையூறுகளை எல்லாம் பொருட்படுத்தாமல் அமுலிலிருந்து வந்ததுதான் எளிதாகவும் இயல்பாகவும் விளக்க முடியாத விஷயம்.

இவ்வாறு இடையூறுகளுக்கிடையில் தழைத்து நிலைத்து வந்ததை முன்னோர் சொத்து என்ற காரணத்தையே கொண்டு விளக்காமல், அதிலிருந்து, கைத்தொழிலும் அறிவு வளர்ச்சியும் ஒன்றாய் இணைந்திருப்பதைக் காட்ட விரும்புகிறேன். இக்கலப்பு அமெரிக்க வாழ்க்கையின் சுதந்திரம், எளிமை ஆகியவற்றால் ஏற்பட்டதாகும். 'அமெரிக்க வாழ்க்கையின் சுதந்திரம்' எளிமை ஆகியவற்றை முன்னே விவரித்துள்ளேன். புராதன இலக்கிய கர்த்தாக்களில் பலர் கிராமங்களில் வாழ்ந்து பயிர்த்தொழில் புரிந்தவர்களே என்பதை நினைத்துப் பார்க்கவும் எனக்கு அவா. அவ்வாறு எண்ணிப் பார்ப்பது மனதுக்கு ஓர் இன்பமும் ஆகலாம். அந்த இலக்கிய கர்த்தாக்கள் புது அமெரிக்காவுக்கு எவ்வளவு எளிதில் பொருத்தமாக இருந்திருக்க முடியும்!

மெயின் கடலோரத்தில் வாழ்ந்துவந்தவர்களின் கப்பலோட்டும் சம்பிரதாயமும் ஒரு வேளை புராதன இலக்கியப் பண்பாட்டைக் காப்பாற்ற ஒரு காரணமாயிருந்திருக்கலாம். கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் கப்பல்கள் மூலமாகவும் மாலுமிகள் மூலமாகவும் பழைய நாகரிகங்கள் பரிச்சய

மானதால் புராதன நாகரிகங்களிடமிருந்து உலகத்துக்குக் கிடைத்தவைகளைப் போற்றிக் காப்பாற்றத் தோன்றுமல்லவா?

என்ன விளக்கம் கூறினலும் சரி, இருபத்தைந்து, அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கக் கல்லூரிகளிலும் உயர்தரப் பாடசாலைகளிலும் நன்கு வாசித்தவர்கள் என்றும், கவனமாய்க் கற்றவர்கள் என்றும் சொல்லக் கூடியவர்கள் எல்லோரும், லத்தீனிலும் அதைவிடச் சற்றுக் குறைவாக கிரேக்க பாஷையிலும் பாண்டித்யம் அடைந்தவர்களாயிருந்தார்கள். அதனுல் அவர்களுக்குத் தினசரி அலுவல்களில் அக்கறையில்லாமல் போகவில்லை; இதற்கு என் சொந்த அநுபவம் சாட்சி. புராதன லத்தீன், கிரேக்க இலக்கியங்களில் கண்ட காட்சிகளை நாங்கள் எங்கள் வாழ்க்கையின் சூழ்நிலையோடு எங்களையறியாமலே ஒன்றித்துக் கண்டுகளித்தோம்.

நியூ இங்கிலாந்து இளைஞர்களுக்குப் புராதன இலக்கியம் ஓர் அரிய ஆத்மீக சேவை செய்தது. அதை யாரும் அறிந்து குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. பியூரிட்டன் மதச்சூழ்நிலையில் நல்லது நல்லது, கெட்டது கெட்டது என்று பிரித்து வைக்கப்பட்டிருந்தது. அச் சூழ்நிலையில் புராதன இலக்கியம் தென்றல் காற்று போல வீசிற்று. நல்லது அழகானதாயும் ஒழுங்குடன் கூடியுமிருக்கலாம் என்றும், கெட்டது அவலட்சணமானது, ஒழுங்கான வாழ்க்கைக்கு விரோதமானது என்றும் நாங்கள் உணர ஆரம்பித்தோம். அதைவிட முக்கியமானது (கவனமாகக் கருதினுல்) அழகைக் கடவுள் அருளிய கொடையாகக் கருதலாம் என்று உணர்ந்தோம். எங்களுக்குக் கடுமையான நீதிநெறி வாக்கியங்கள் லத்தீன், கிரேக்க இலக்கியங்களால் மேன்மையுற்றன; பரிதாபப்படுதல் என்னும் பண்பும் இடம் பெற்றது.

அத்தியாயம் 5

இந்நூற்றுண்டுத் தொடக்கத்தில் கல்லூரி வாழ்க்கை

நாங்கள் உயர்தரப் பாடசாலையிலிருக்கும்போதே என் தமக்கையும் நானும் எக்கல்லூரியைச் சேருவது என்று நிச்சயம் செய்து கொண்டோம். அவள் வெல்லெஸ்லியைச் சேருவதென்று முடிவு செய்தாள்.

ஆனால் எங்கள் கனவுகள் பலிக்கவில்லை. மெயின் மீது என் தந்தைக்குப் பற்றுதல் அதிகம். ராஜ்யத்திலுள்ள ஸ்தாபனங்களை ஆதரிக்கவேண்டுமென்ற கட்சியில் அவர் சேர்ந்திருந்தார். ஆகவே அவருடைய மக்களை மெயினில் உள்ள கல்லூரிகளில் படிக்கவைக்க வேண்டியதாயிற்று. அத்துடன் பணச் செலவையும் கவனிக்கவேண்டியதாயிற்று. வேறு ராஜ்யத்துக்கு ஒரு பெண்ணை அனுப்பினல் ஆகும் செலவுக்கு இரு பெண்களை மெயினிலேயே படிக்க வைக்க லாம் என்பதும், ஏழு பேர் படிக்க வேண்டியதாயிருக்கும் எங்கள் குடும்பம் வருமானம் அதிகமில்லால் அதிகக் கஷ்டப் படும் என்பதும் எங்களுக்குத் தெளிவாக்கப் பட்டன.

ஆகவே, மூன்று நாட்கள் பரீட்சைகள் எழுதியபின் 1901 செப்டம்பர் மாதத்தில் நானும் என் தமக்கையும் மெயின் சர்வகலாசாலையில் சேர்க்கப்பட்டோம். மூன்று நாளும் ஒரே கவலைதான். ஆகவே கடைசியில் நாங்கள் கல்லூரியில் சேர்க்கப்பட்டதும் எங்கள் பெற்ரேருக்கு மிக்க ஆறுதல். அவர்கள் விடை பெற்றுச் சென்றதை நாங்கள் கவனிக்கை யில் எங்கள் மனத்தில் இன்பமும் களிப்பும் இல்லாமல் இல்லை. மற்றெல்லா மெயின் கல்லூரிகளும் பொடாயின் என்னும் ஒரு கல்லூரியைத்தவிர எளிய நாட்டுப்புற ஸ்தாபனங்கள். அவை நாகரிகமற்றவை என்பதல்ல. பெரும் பான்மையான மாணவர்கள் கிராமங்களிலிருந்து வந்ததால், ஸ்தாபனங்களிலும் அந்த நன்மையான நாட்டுப்புறச் சூழ்நிலை

அமைந்திருந்தது. சர்வ கலாசாலேயில் நான் நான்கு ஆண்டு கள் இருந்தேன். அந்த நான்கு ஆண்டுகளில் ஐநூறு மாணவர்கள் சர்வ கலாசாலேயில் சேர்ந்திருந்தார்கள். அவர் களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மெயினேச் சேர்ந்த வர்கள். அதில் பெரும்பான்மையோர் நாட்டுப்புறங்களிலிருந்து வந்தவர்கள்.

1904-ம் ஆண்டில் அவர்களிடம் அதிகப் பணம் இல்லே யென்று சொல்லத் தேவையில்லே. ஆனல் பணத்தைவிட அரிய விஷயங்கள் இருந்தன. பெரும்பான்மையான மாண வர்களின் பெற்ரோர்கள் எங்களேக் கல்லூரியில் சேர்த்த தால் பணக்கஷ்டமடைந்தவர்கள். ஆகையால் நாங்கள் கல்லூரியில் கிடைக்கும் சாதனங்களே நன்கு பயன்படுத்திக் கொள்வது எங்கள் கடமையாயிற்று. நான் சேர்ந்தபோது கல்லூரியில் 21 பெண்கள் தான் இருந்தார்கள். பையன்களில் பெரும்பான்மையோர் கோடையிலோ அலலது கல்லூரியில் வாசிக்கும்போதேயோ வேலேயும் செய்து தங்கள் செலவுக்கு ஓரளவு தாங்களே சம்பாதித்தார்கள். பெண்கள் ஹாஸ்டலில் பதினெட்டுப் பெண்கள் இருந்தார்கள். அவர்கள் எல் லோரும் நல்ல மெயின் குடும்பங்களில் பிறந்தவர்கள். ஒருவருக் காவது மாதம் ஐந்து டாலர்களுக்குமேல் பெற்ரோர்கள் அனுப்பியதில்லே. அது அதிகம் என்று கருதப்பட்டது அந்நாளில்.

வாழ்க்கை எளியதாய் இருந்தது என்று சொல்லத் தேவையில்லே. சிறிது கவலேக் குறியுடன் விளங்கியது என லாம்; ஆனல் அதிகக் கவலேயில்லே. நாங்களும் எங்களுடன் முதல் வகுப்பில் சேர்ந்திருந்த மற்றும் ஐந்து பேரும் பெரிய வகுப்பில் இருந்தவர்களிடமிருந்து நாட்டியம் கற்ரேம். அதில் நான் அவ்வளவு முன்னேற்றமடையவில்லே. டென் னிஸ் விளேயாடவும் படித்தோம். குளிர்காலத்தில் பனிக் கட்டி விளேயாட்டுகள் சிலவும் கற்ரேம். பெருமையடிக்

கிறேன் என்று நீங்கள் கருதினாலும், நாங்கள் எங்களுடைய பாடங்களை விரும்பிப்படித்தோம் என்று சொல்லத்தான் வேண்டும். லத்தீன் படிப்பது வேண்டுமா வேண்டாமா என்ற கேள்வியே கிடையாது; நாங்கள் எல்லாரும் லத்தீன் படித்தோம். எங்களுடன் கல்லூரியில் புதிதாய்ச் சேர்ந்த ஏழு பெண்களுள் ஒருத்திதான் என்னுடன் கிரேக்க பாஷை படிக்க முற்பட்டாள் (அக்காலத்திலேயே நிலைமை மாறி வந்ததற்கு இது ஒரு அத்தாட்சி). நாங்கள் இருவரும் இரண்டாண்டுகள் கிரேக்க இலக்கியத்தைப் படித்துத் திளைத்தோம்.

என் தமக்கை லத்தீனும் கணக்கும் படிக்கத் தீர்மானித்தாள். எனக்கோ கணக்கு வரவில்லை. அல்ஜீப்ரா, கன வடிவ ஜியாமெட்ரி, டிரிகனமெட்ரி இவற்றின் ஆசிரியர்கள் ஆறுபேருக்காவது நான் தொல்லையாக இருந்திருப்பேன்; வடிகட்டின முட்டாளாக அவர்களுக்கு நான் விளங்கினேன்; காரணமும் அவர்களுக்கு விளங்கவில்லை; தங்களுள் யாராவது ஒருவர் இதற்குப் பரிகாரம் காணமாட்டாரா என்ற நினைப்பில் அவர்கள் ஒருவர் மாற்றி ஒருவராக எனக்குக் கற்பிக்க முற்பட்டனர். நான் கிரேக்க பாஷையையும் சரித்திரத்தையும் என் பாடமாகத் தெரிந்தெடுத்தேன். சரித்திரத்தைத் தெரிந்தெடுத்தது என் தந்தைக்கு அளவற்ற மகிழ்ச்சி. அந்த இரு துறைகளிலும் என் சர்வகலாசாலைக்கு நல்ல பெயர் இருந்தது. என் படிப்பு நாட்களிலெல்லாம் மிக முக்கியமாக நான் கருதியது கிரேக்கப் பாட வகுப்புத்தான்; அது பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாகும். இலக்கியமும் பயிர்த்தொழிலும் இணைந்து ஒருங்கே வாழ வேண்டும் என்பதைத் தம் வாழ்க்கையிலே மெய்ப்பித்துக் காட்டிய எங்கள் பேராசிரியர் வயலையும் களஞ்சியத்தையும் பார்த்துவிட்டு வகுப்பறைக்கு வருவார். அதிக நேரம் இருந்து சொல்லிக் கொடுக்கவும் அவர் தயங்க மாட்டார்.

இந்த வகுப்புகளில் புதிய புதிய கருத்துக்கள் பல புலனுகும்; பழைய அகக் காட்சிகள் பல புதிதாய்த் தெரியவரும். இவ்வகுப்புகளை நான் மறக்கவே முடியாது.

என் சரித்திரப் பேராசிரியரைப் பற்றியும் நான் பெருமைப்படுவேன். ஆசிரியர்களில் உயர்நிலை வகித்த பெண்மணி அவர் ஒருவரே. அவரிடம் ஒன்றையும் விடாமல் முறையாகப் படிக்க வேண்டும்; கவனமாகப் படிப்பித்தார் அவர். அதனுல் முன்பு நான் வாசித்ததைவிட அதிக நுணுக்கமாகப் படிக்கத் தெரிந்து கொண்டேன். அதன் பலனுக, குழம்பியிருந்த என் மனம் கடுமையாகவும் கவனமாகவும் அளிக்கப்பட்ட அறிவுப் பயிற்சியால் தெளிவடைந்தது.

முதல் ஆண்டில் எல்லோருக்கும் இங்கிலீஷ் வியாசம் பாடமாக இருந்தது. அது எனக்கு மிகவும் சுவாரஸ்யமாய் அமைந்தது.

அவ்வருஷம் உபாத்தியாயராயிருந்தவருக்கு நான் எப்போதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனுல் கல்லூரி அதிகாரிகளுக்கு வேறு அபிப்பிராயம் இருந்தது போலும். சில மாதங்கள்தான் அவர் எங்கள் கல்லூரியில் இருந்தார். கற்றுக்கொடுக்கும் விதத்தில் பழங் கால முறையை அவர் பின்பற்றவில்லை. அவர் வழிகாட்டிவிட, நாங்கள் புராதன ஆசிரியர்களேயும் புறக்கணிக்காமல் புதிய புதிய ஆசிரியர்களின் நூல்களையும் வாசிக்கலானேம். நான் அந்த உபாத்தியாயரிடமிருந்து விமர்சனத்தின் விதிகளைக் கற்றிருந்தேன். ஒருவனுக்குப் பிடிக்காத விஷயத்தைப் பற்றியும் அவன் தெளிவாக அறிந்திருக்க முடியும் என்ற உண்மை என் மனதில் அவரால் நன்கு பதிந்தது.

அடுத்த மூன்று ஆண்டுகளில் நாங்கள் தேர்ந்தெடுத்த பாடங்களிலும் மற்ற நியமித்த புதிய பாடங்களிலும்,

ஆழ்ந்தகன்ற முன்னேற்றம் அடைந்தோம். விஞ்ஞான சாஸ்திரங்கள் கற்றோம். அவை நன்கு கற்றுக்கொடுக்கப் பட்டன; ஆனால் ஒரு வருஷத்துக்குமேல் அவை கட்டாயப் பாடமல்ல. அது எனக்கு மிகவும் சௌகரியமாயிற்று; எனக்கு விஞ்ஞான சாஸ்திரங்கள் ஒன்றுமே விளங்கவில்லை; ஆராய்ச்சிக் கூடமும் மைக்கிராஸ்கோப்பும் பிடிக்கவே இல்லை. மனோதத்துவ சாஸ்திரத்தைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. மெயினில் இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகள் வரை அதைப்பற்றி ஒன்றுமே கல்லூரியில் கற்றுக் கொடுக்கவில்லை! பிளேட்டோவினுடைய சில நூல்கள் கற்றுக்கொடுக்கப்பட்டாலும் அக்காலத்தில் எனக்குத் தத்துவ சாஸ்திரத்தில் அவ்வளவு தேர்ச்சி கிடையாது.

உபாத்தியாயர் தொழிலில் தேர்ச்சி பெற நான் ஒரு வருஷம் தங்கியிருந்தேன். 1909ம் ஆண்டில் நான் பட்டம் பெற்றபோது மற்றும் பெரும்பாலான எந்தக் காலத்து எந்தக் கல்லூரிப் பட்டதாரிகளையும் போலவே அரைகுறையாகத் தேர்ச்சியடைந்திருந்தேன் என்று நினைக்கிறேன். வாசிப்பதற்கும் யோசிப்பதற்கும் உற்சாகம் இருந்தது. அறிவை அறிவுக்காகவே, அதனைப்பெறும் களிப்புக்காகவே சம்பாதிப்பதற்கு ஆசை இருந்தது. இன்னின்னவை உயர்ந்த இலட்சியங்கள் என்னும் அறிவும், தெளிவுக் குறைவானாலும், நன்றாகப் பதிந்திருந்தது. இவையே நான் கல்லூரியை விட்டு வெளியேறியபோது என்னை வாழ்க்கைக்குத் தகுதியாக்க என்னிடம் இருந்தன; மற்றும் பலரும் என்னைப்போல் இவைகளைப் பெற்றவர்களாய்க் கல்லூரிப்படிப்பை முடித்துக் கரையேறினர்.

அத்யாயம் 6

ஜில்லாப் பள்ளிக்கூடம்

நாட்டுப்புற, அல்லது ஜில்லாப் பள்ளிக்கூடம் நாற்பது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொரு ராஜ்யத்

திலும் கல்வி முறைக்கு இன்றியமையாததாய் இருந்து வந்தது. ஜனநாயக ஆட்சிக்கு அது செய்த சேவையையும் அதற்குப் பையன்கள் காலில் பாதரட்சையின்றி நடந்து போனதையும், அதன் வசனப்பாடப் புஸ்தகங்களேயும், அதன் சாய்வு மேஜைகளில் பையன்கள் பெயர் எழுதி வைத்ததையும், மரங்கள் அடர்ந்திருந்த அதன் நாட்டுப்புறச் சூழ்நிலையையும், மாணவர்க்கும் மாணவியர்க்கும் அது போற்றிப் புகட்டியதாகக் கருதப்படும் பல உயரிய குணங்களே யும் புகழ்வோர் அதனுடைய பல குறைகளேத் தாராளமாக மறந்து விடுகிருர்கள்.

சரியான வசதிகள் கிடையாது; உபாத்தியாயர்கள் தேர்ச்சி பெருதவர்களாயிருந்தார்கள்; அவர்கள் சம்பளமும் குறைவு. பாடங்கள் நிறைய இருந்தன. இடைவிடாமல் முன்னேற்றமடையவே ஜில்லாப் பள்ளிக்கூடம் என்பதே அனேகமாய் மறைந்து விட்டது. தூரப் பிரதேசங்களில் தனிப்பட்டிருக்கும் ஜில்லாக்களும் இப்போது பிணைக்கப்பட்டிருக்கின்றன. சூப்பெரின்டென்டுகள் மேற்பார்வை யிடுகிருர்கள். புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. உபாத்தியாயர்கள் தேர்ச்சி யடைந்து ராஜ்யமுழுவதற்கு முரிய நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றிருக்கவேண்டும். வியாமிங் ராஜ்யத்து மலே வழியே செல்வது போல இன்று மெயின் ராஜ்யத்துப் பாறை வழிகளிலும் பள்ளிக்கூட பஸ்கள் செல்கின்றன; அவற்றில் கையில் பத்து சென்டுடன் பிள்ளேகள் ஏறிப் பள்ளி செல்கின்றனர்; அந்தப் பத்துசென்டுக்கு பள்ளிக்கூடத்தில் காலேயில் ஒரு தம்ளர் பாலும் பிஸ்கோத்தும் வாங்கி உண்பார்கள். நண்பகலில் பள்ளிக்கூடச் சமையலறையில் நன்கு ஆக்கப்பட்ட உணவும் வழங்கப்படும். கொள்ளே நோய்கள் பரவாமல் தடுக்க இன்று பள்ளி நர்ஸுகள் உள்ளனர். பள்ளியில் பிள்ளேகள் சரியாக பல் துலக்கியிருக்கிருர்களா என்றும் அவர்கள் பார்த்துக் கொள்கிருர்கள். அவர்கள்

பிள்ளைகளை அடிக்கடி ஸ்நாநம் செய்யவும் தூண்டுகிறார்கள்; பூச்சொரிந்தாற்போல் விழும் புதிய குழாய்த் தண்ணீரில் பிள்ளைகளை அவர்களே குளிப்பாட்டுவதும் உண்டு.

ஆகவே, நாட்டுப்புறப் பள்ளிக்கூடம் இப்போது பழங் கால விஷயமாகி விட்டது. எனினும் மெயினிலும் மற்ற இடங்களிலும் அதனால் உண்டான நன்மைகள் பல. முக்கிய மாக உபாத்தியாயர்கள் சுறுசுறுப்பாக இருக்கவேண்டியிருந் தது; அப்பள்ளிக்கூடங்கள் அத்தகைய சுறுசுறுப்பை உண் டாக்கின; அவர்கள் கைவேலைத் திறமையும் படைத்தவர் களாய் இருக்கவேண்டியிருந்தது.

மெயின் கடலோரத்திலிருந்த ஜில்லாப் பள்ளிக்கூடம் ஒன்றில் உபாத்தியாயினியாக நான் எனது பத்தொன்பதா வது வயதில் எனது இருபத்தைந்து வருட அனுபவத்தை ஆரம்பித்தேன். 1906 ம் ஆண்டில் வசந்தகாலத்தில் அப் போது கல்லூரியில் மாணவியாக இருந்தேன்.

அக்காலத்தில், படிப்பை விட்டு விட்டு பிற்காலத்தில் எடுத்துக் கொள்ளப் போகும் தொழிலில் தேர்ச்சி பெறுவ தும், சிறிது பணம் சம்பாதிப்பதும் சகஜமான விஷயம். நான் உபாத்தியாயினியாய்ப் போன பள்ளிக்கூடம் அவ்வளவாக விரும்பத்தக்கதல்ல. நீலக்குன்றிலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்தில் செம்படவர்கள் குடியிருந்த இடத்தில் அப் பள்ளிக்கூடம் இருந்தது.

ஏப்ரல்மாதம் குளிர்மிகுந்து இனிமையற்றிருந்த ஒருநாள் என் தந்தையே என்னை வண்டியிலேற்றி அங்கு கொண்டு போய் விட்டார். அன்று காலையில் அவசர அவசரமாக ஏதோ சிறிது சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டேன்; வழி யெல்லாம் மழையும் சகதியுமாக இருந்தது. அச்சமும் குறைபா டும் உறுதியின்மையும் என் காலை உணவோடு என் அடிவயிற் றிலேயே ஒட்டிக்கொண்டிருந்தன போலத் தோன்றுகிறது.

இந்த அநுபவத்தை நான் உயிருள்ளவரை மறக்கமாட்டேன். என் தந்தை நேராகப் பள்ளிக்கூட வாசல் முன்பு எட்டே முக்கால் மணிக்கு என்னை இறக்கினர். பல வயதுகளான அத்தனை சிறுவர்களை அதற்கு முன் நான் கண்டதேயில்லை என்று எனக்குத் தோன்றிற்று. அவர்கள் சேருன அந்த வண்டியிலிருந்து நான் இறங்கியதும் என் தரமறிவதற்காக வட்டமாய்க் கூடியிருந்தார்கள். திரும்பிப் போகும்போது என் கையில் கைக்கடங்காத ஒரு பொட்டலத்தைக் கொடுத்து அவசியமானல் அதை உபயோகிக்கத் தயங்க வேண்டாம் என்று என் தந்தை சொன்னர். பொட்டலத்தை பிரித்துப் பார்த்தால் அதற்குள் இருந்தது சாணைத்தோல்; உண்மையாகவே, அது எனக்குக் கிடைத்தது ஒரு வரப் பிரசாதமாயிற்று.

பள்ளிக்கூடக் கட்டடம் கடலுக்குள் நீட்டிக்கொண்டிருந்த ஒரு பாறைமீது கட்டப்பட்டிருந்தது. கடலுக்கும் அதற்கும் அதிகத் தூரம் இல்லை. கட்டடத்தினுள்ளே அழகு என்பது கிஞ்சித்தும் கிடையாது. அன்று நான் முதன் முதல் அதனுள் நுழைந்தபோது கிழக்கத்திக் காற்றில் உப்புக் கலந்த மூடுபனி கட்டடத்தின் உள் வழியாய் வேகமாக வீசியதை உணர்ந்தேன், கண்ணுலும் கண்டேன். பள்ளிக்கூடத்தில் 49 மாணவர்கள் இருந்தார்கள். பதினெட்டு வயதுள்ள பெரிய பையன்களிலிருந்து நாலைந்து வயதான சிறுமிகள் வரை அவர்களில் இருந்தார்கள்.

வேத நூல்களும் கல்வி முறை விதிகளும் மாணவர்களை அடிக்கக்கூடாது, பட்சமாய் நடத்தவேண்டும் என்று சொல்லுகின்றன. 1906ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அன்று நான் பட்சமாய் அச் சிறுவர்களை நடத்தியிருந்தால் படுதோல்வி அடைந்திருப்பேன். என் தந்தை பாதி வழிகூடப் போயிருக்கமாட்டார். அதற்குள் என்னையே ஜன்னல் வழியாக அப்புறப்படுத்தப் பார்த்தார்கள் மாண

வர்கள். என் தந்தைக்கு நன்றி செலுத்திக்கொண்டு நான் சாணைத் தோலை உக்கிரமாகப் பிரயோகிக்கலானேன்.

நாம் அஞ்சவில்லை யென்றால் நம்மைக்கண்டு பிறர் பய பக்தியுடன் அஞ்சும் மனப்பான்மையைநான் அங்கு அந்த என் முதற் பள்ளிக்கூடத்தில் கண்டதுபோல் வேறெங்கும் காண வில்லை. அச் சிறிய மாலுமிகளும், செம்படவர்களும் எனது தைரியத்தைக் கண்டு அடங்கி விட்டார்கள். அவர்கள் தொடர்ந்து கும்மாளம் போட்டால் நான் சக்தியற்றவனு யிருந்திருப்பேன். நான் தைரியசாலி யெனப் பாசாங்கு செய்யவே, அவர்கள் பணிந்துவிட்டனர். அச் சில நிமிஷங் களால் எனக்கு அன்று முழுவதும் முட்டு வலித்துக் கொண்டேயிருந்தது என்றாலும் அந்த நிமிஷத்துக்குப் பிறகு அங்கு நான் இருந்த பத்து வாரங்கள்வரை ஒழுங்கை நிலை நாட்டுவதுபற்றி நான் கவலைப்பட்டதேயில்லை.

அந்த நாட்கள் என் வாழ்க்கையில் மிகவும் மதிக்கத் தக்கவை. தினசரி இருபத்தொன்பது தனி வகுப்பு களுக்குப் பாடங்கள் சொல்லியாக வேண்டும். நாற்பத்தொன் பது சிறுவர்களைச் சமாளிக்க வேண்டும். குளிர்ந்த காலைப் பொழுதில் தகராறு செய்யும் "ஸ்டவ்" வுடன் போராட வேண்டும். சிக்கலான கணக்குகளைத் தீர்க்கும்வரை ஒவ் வொருநாளும் இரவு நெடுநேரம் கண்ணீர் சிந்தவேண்டும். கணக்கற்ற பரீட்சைத் தாள்களைத் திருத்த வேண்டும். அதிக அறிவில்லாத பெற்றோர் பலரைச் சமாதானப் படுத்தி அவர்கள் உதவியைப் பெற வேண்டும். இவையும் இன்னும் பலவும் இருந்தன. ஆகவே என்னுடைய சொந்த பிரச்னைகள், யௌவனப் பெருமைகள், கவலைகள், தன்னிலை குறித்து இரங்கல் முதலியன தலைதூக்கவில்லை. அத்தகைய அநுப வம் எனக்கு மிகுதியும் தேவையாயிருந்த அச்சமயம் நான் நச்சுப்படுத்தும் என் சுயநலத்தை மறந்தேன்—அம்மறதி மிக நன்மையாயிற்று.

வசந்த காலம் ஆக ஆக, நான் ஒரு புதிய அநுபவம் பெற்றேன்; என்னிடம் இருந்ததென்று நான் அறியாத திறமைகள் எனக்கு உதவியாயின. பல இளைஞர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். ஆனால் மீன்கள் அதிகமாகக் கிடைக்க ஆரம்பித்தபிறகு பள்ளிக்கூடத்தில் அவர்கள் இடங்கள் காலியாக இல்லை. தாய்மார்கள் மீன்களைக் கழுவிப் பெட்டிகளில் அடைக்கவேண்டும். குழந்தைகளை யார் பார்த்துக் கொள்வது? தாய்மார்கள் குழந்தைகளைச் சிறுவர்களுடன் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி விடுவார்கள். ஆறுமாதக் குழந்தைகளும் இரண்டு வயதுக் குழந்தைகளும் அனுப்பப்பட்டன. அக்குழந்தைகளை என்ன செய்வதென்பது எனக்குப் பெரிய பிரச்னையாகிவிட்டது. அறையில் இங்கும் அங்கும் ஊர்ந்து செல்லவிட முடியாது. அண்ணன் மாரும் அக்காள்மாரும் கணக்குப் போடுவார்களா, சரித்திரம் படிப்பார்களா, குழந்தைகளைக் கவனிப்பார்களா? ஆகவே அவர்களிடத்திலும் அவற்றை ஒப்புவிக்க முடியாது. சற்றேனும் அவை அமைதியாக இருந்தால்தான் பள்ளிக்கூடம் ஓரளவாவது பள்ளிக்கூடமாக யிருக்கும்.

கிராமத்திலிருந்த தச்சன் என் உதவிக்கு வந்தான். சுத்தமான நான்கு பெரிய பீப்பாய்களை எனக்குக்கொடுத்தான். அவற்றை மூலைக்கு ஒன்றாக வைத்தேன். சின்னக் குழந்தைகளாக இருந்தால், அவை தூங்கும் போது, ஒரு பீப்பாய் நான்கு குழந்தைகளைக் கொள்ளும்; பெரிய குழந்தைகளாக இருந்தால் இரண்டு மூன்றுக்கு இடமிருக்கும். எனவே அவை தரையில் ஊர்ந்து கொண்டிருப்பதைத் தடுக்கலாம். இப்படியும் முடியாவிட்டால் சிறிது சர்க்கரையைத் துணியில் முடிந்து கொடுத்து அழுகையை அமர்த்தலாம். இவ்வாறு அடிக்கடி செய்ய வேண்டியதிருக்கும். ஆயினும் தீராத பட்சத்துக்குத்தான் துணியில் சர்க்கரை முடிந்து கொடுக்கப் படும். இந்தப் பீப்பாய்கள் பள்ளிக்கூடம் உருப்படியாக

இருக்க உதவியதுமன்றி எனக்குப் பைத்தியம் பிடிக்காமலும் காத்தன.

ஜில்லாப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினியாக இருந்ததில் என்னுடைய அறிவு விசாலமாயிற்று என்பதை நான் மறக்கமுடியாது. அளிக்கப்பட்டவேலையைக் கண்ணும் கருத்துமாகக் கவனிப்பது, சீக்கிரமாக ஒரு தீர்மானத்துக்கு வருவது, எனக்குள்ள குறைகள், நான் சாதிக்கக்கூடியவை இவற்றை ஒப்புக்கொள்ளல், உலகத்தில் நான் என்ன செய்ய விரும்பினேன் என்பதைப் பற்றிய திடமான அபிப்பிராயம், தெளிந்த பரந்த ஹாஸ்ய உணர்ச்சி முதலியவற்றை நான் அங்கு பெற்றேன்.

முடிவுரை

அக்காலத்தில் பலவிதமான நடையுடை பாவனைகள் இருந்தபோதிலும், எளிய வாழ்க்கையில் என்னை வளர்த்தார்கள். ஒரு தேசத்தில் வாழ்ந்தேன் என்பதற்குப் பதிலாக நான் ஒரு மக்கள் கோஷ்டியுடன் வாழ்ந்தேன் என்றுதான் சொல்ல வேண்டும். தனிப்பட்ட தன்மையை விட்டுவிட்டாலும், தனிப் போக்காக ஒதுங்கிவிடாமலும், கூட்டுறவாக வாழ எனக்கு ஊக்கமளித்தார்கள். கண்ட கண்ட புஸ்தகங்களும் அரைகுறைப்படிப்பும் ஆரவாரமும் அதிகமில்லாத காலத்தில் நீண்ட நேரங்கள் புஸ்தகங்களை வாசிக்க எனக்கு வசதி கிடைத்தது. ஒருவர் சமூக வாழ்க்கையையும் நடவடிக்கைகளையும் வேதனைக்கிடமாகக் கட்டுத்திட்டம் செய்யப்படும் காலம் வருமுன்பே, ஸினிமாக்கள் வருவதற்குமுன்பே, இளமைப் பருவத்தைக் கூடியவரை சுதந்திரத்துடன் கழித்தேன். நிதானமான கிராம வாழ்க்கையை அறிந்திருந்தேன். நகரத் தெருக்களிலும் அமைதியைக் கண்டிருந்தேன். சம்பிரதாயங்களுக்குகந்ததுபோல் என் வாழ்க்கையை நடத்தினேன். அவற்றால் களிப்புமிக்க அநுபவம் பெற்றேன். புதிய நிலங்கள் மேற்கே இன்னும் பண்படுத்தப்பட்டு நாடாக வேண்டியதிருந்த நிலைமையை புஸ்தகங்கள் வழியாகவும் ஆட்கள் வழியாகவும் நன்றாக உணர்ந்திருந்தேன். எனக்குக் கிடைத்த இந்த நன்மைகளெல்லாம் அலட்சியமாகப் புறக்கணிக்கக் கூடியவை அல்ல.

பியூரிட்டன் மதக் கோட்பாட்டினாலும் பல நன்மைகள் உண்டாயின. காலத்தால் மாறாத இலட்சியங்களில் நம்பிக்கையை அது வளர்த்தது. உண்மைகளைப்பற்றி புதுக்

கருத்துகள் தோன்றுவது அவசியம்தான். ஆனால் ஒருவர் ஒப்புக்கொண்டாலும் உதறித்தள்ளினாலும் உண்மைகள் என்றும் மாறுமல் உள்ளன; அந்த உண்மைகளில் நம்பிக்கை நிலைத்திருக்க வேண்டும். அந்த உண்மைகள் பிளேட்டோ கூறியுள்ள பொதுக் கருத்துக்கள்போல் மாருதவை; ஏன் அவையும், இவையும் ஒன்றேயாகும். அத்தகைய நம்பிக்கை எக்காலத்திலும் எல்லா மக்களுள்ளும் நிறைந்த அறிவும் ஆக்கமும் படைத்தவர்களுக்கு இன்றியமையாதது. இரவில் தீக் கம்பமாகவும் பகலில் மேகமேருவாகவும் அது விளங்கி வழி நடத்தும். அந் நம்பிக்கை இருந்தால் மனக்கலக்கத்தை அகற்றலாம்; நிலை தடுமாற வேண்டியதில்லை; வாழ்க்கையை நன்னிலைமையில் வைத்துக் கொள்ளலாம்.

எங்கள் கல்வியைப் பொறுத்தவரை, நாங்கள் பாக்கிய சாலிகள். புதிய சகாப்தம் உதயமாகும் காலத்தில் பிறந்தாலும், அதனுல் பாதிக்கப்படாமல் பழைய சம்பிரதாயப்படியே நாங்கள் வளர்ந்தோம். புராதன இலக்கியங்களை வழக்கமாக வாசித்தது எங்கள் சந்ததிதான் கடைசித் தலைமுறை என்று நினைக்கிறேன். அதனுல் ஏற்பட்ட இனிய பலன்கள் பல. கையால் வேலை செய்தலும் கருத்தாய் அறிவு வளர்த்தலும் ஒன்ருய் வாழ்ந்த அமெரிக்காவுக்கே உரிய முறையைக் கடந்த கால விஷயமாகப் பாராமல் அம்முறையிலேயே வளர்ந்தவர்களிலும் நாங்கள்தான் கடைசிபோலும்: பசுமாடுகளை மேய்ச்சல் நிலத்துக்குப் பத்திக்கொண்டு போகும்போதே கிரேக்க, லத்தீன் செய்யுள்களைப் படித்துக்கொண்டு போனவர்கள் நாங்கள்.
